ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1987/19 - 2016 ඔක්තෝබර් මස 04 වැනි අඟහරුවාදා - 2016.10.04
*1987/19 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ– 3/2013*

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 126 ஆம், 321 ஆம் பிரிவுகளினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு துறைமுக மற்றும் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

அர்ஜுன ரணதுங்க,
துறைமுகங்கள் மற்றும் கடற்றொழில்,
அமைச்சர்.

கொழும்பு,
2016 ஒற்றோபர் 4.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2016ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

**சர்வதேச சமவாயத்தை வலுவுறுத்துதலும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடைமையும்**

2. திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள் பற்றிய சர்வதேச சமவாயத்தின் வலுவுறுத்துகைக்கு இவ்வொழுங்குவதிகள் பயன்கொடுத்தல் வேண்டும்.

3. (1) இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கைக் கொடியின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மீன்பிடிக் கலங்களும் வியாபாரத்தில் ஈடுபடாத பொழுதுபோக்குப் படகுகளும் தவிர்ந்த கடலில் செல்லும் கப்பல்கள் அனைத்தும்;

(ஆ) தொடர்ச்சியான வெளியேறல் சான்றிதழை அல்லது தகுதிச் சான்றிதழை அல்லது புறக்குறிப்பை அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் சான்றிதழை அல்லது ஆவணத்தை உடைமையில் வைத்திருக்கும் கடலோடிகள் அனைவரும்; அத்துடன்

(இ) ஏனைய கொடிகளைக் கொண்ட கப்பல்கள், மற்றும் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வெளிநாட்டு தொடர்ச்சியான வெளியேறல் சான்றிதழ்களை, தகுதிச்சான்றிதழ்களை, புறக்குறிப்புக்களை அல்லது வேறெவையேனும் சான்றிதழ்களை அல்லது ஆவணங்களை உடைமையில் வைத்திருக்கும் கடலோடிகள்.

(2) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இன் முறையே பாகம் அ மற்றும் பாகம் ஆ வில் தரப்பட்டுள்ளவாறான பணிகளினதும் பொறுப்பு மட்டங்களினதும் அடிப்படையின் மீதான தகுதி நியமங்கள் இருத்தல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளைச் சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் அவர்களின் சேவை நிபந்தனைகள்) பற்றிய ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இவ்வொழுங்குவிதிகள், வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 333(ஈ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 139ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக பாதுகாப்பான கப்பற்றொழிற்பாடுகளுக்குப் பொறுப்பினைக் கொண்டுள்ள சொந்தக்காரர், கம்பனி மற்றும் முகவராண்மை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் II

### பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும் கடமைகளும்

4. பணிப்பாளர் தலைமையதிபதி இவ்வொழுங்குவிதிகளின் நிருவாகத்துக்குப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றுப்படுத்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்களின்மீதான சர்வதேச சமவாயத்தின்கீழான தகுதிச் சான்றிதழ்களையும் புறக்குறிப்புகளையும் வழங்கலாம்.

5. (1) பணிப்பாளர் தலைமையதிபதி இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக, கப்பற்றளப் பகுதியில் பின்வரும் வகுப்பினவான சான்றிதழ்களையும், புறக்குறிப்புகளையும் வழங்கலாம்:-

(அ) தகுதிச்சான்றிதழ் - கப்பற்றலைவர்;

(ஆ) தகுதிச்சான்றிதழ் - பிரதம கப்பற்றுணைத் தலைவர்;

(இ) தகுதிச்சான்றிதழ் - கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்;

(ஈ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் கப்பற்றலைவர்;

(உ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் பிரதம கப்பற்றுணைத் தலைவர்;

(ஊ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்;

(எ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 500 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் தலைவர்;

(ஏ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 500 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்;

(ஐ) தேர்ச்சிச் சான்றிதழ் - 500 மொத்தத் தொன்னுக்கு அல்லது அதற்கு மேலான கடல்செல் கப்பல் ஒன்றின் கடற் போக்குவரத்துக் காவலின் ஒரு பகுதியாக அமையும் கப்பற்றுணையாளர்;

(ஓ) தேர்ச்சிச் சான்றிதழ் – 500 மொத்தத் தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கடல்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற இயலக்கூடிய கடலோடி கப்பற்றளம்;

(ஓ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் கப்பற்றலைவராகப் புறக்குறிப்பு.

(2) கப்பற்றள அலுவலர்களின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதியினால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மேலதிகக் கட்டளைகளுக்குத் தேர்வுவிழைநர் இணங்கியொழுகுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட தேவைப்பாடுகளுக்கமைய, மேலே ஒழுங்குவிதி 5(1)(ஆ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட தகுதிச்சான்றிதழ்கள்–பிரதம கப்பற்றுணைத் தலைவர்கள் என்பவற்றின்மீது (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட புறக்குறிப்பைச் செய்தல் வேண்டும்:

ஆயின், புறக்குறிப்பு ஒன்றை வைத்திருக்கும் ஒவ்வொரு கப்பற்றள அலுவலரும் உயர் சான்றிதழ் ஒன்றின் வழங்கலுக்குத் தகைமைபெறும்போது, அதேபுறக்குறிப்பை அச்சான்றிதழுக்கு மாற்ற உரித்துடையவராதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய, வானொலி இயக்குநர்களுக்காகப் பின்வரும் வகுப்பினவான சான்றிதழ்களை வழங்கலாம்:–

(அ) தகுதிச் சான்றிதழ் – ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர்;

(ஆ) தகுதிச் சான்றிதழ் – மட்டுப்படுத்தப்பட்ட ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர்;

(4) பணிப்பாளர் தலைமையதிபதி இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக, பொறியியல் திணைக்களத்தில், பின்வரும் வகுப்பினவான சான்றிதழ்களையும், புறக்குறிப்புகளையும் வழங்குதல் வேண்டும்:–

(அ) தகுதிச்சான்றிதழ் – பிரதம பொறியியல் அலுவலர்;

(ஆ) தகுதிச்சான்றிதழ் – இரண்டாவது பொறியியல் அலுவலர்;

(இ) தகுதிச்சான்றிதழ் – பொறியியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்;

(ஈ) தகுதிச்சான்றிதழ் – கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றுக்கும் 3000 கிலோ வோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட பிரதம பொறியியல் அலுவலர்;

(உ) தகுதிச்சான்றிதழ் – கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றுக்கும் 3000 கிலோ வோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட இரண்டாவது பொறியியல் அலுவலர்;

(ஊ) தகுதிச்சான்றிதழ் – கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றுக்கும் 3000 கிலோ வோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட பொறியியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்;

(எ) தேர்ச்சிச் சான்றிதழ் – பொறியியல் அறைக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளர்;

(ஏ) தகுதிச்சான்றிதழ் – 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற மின்னியக்கத் தொழினுட்ப அலுவலர்;

(ஐ) தேர்ச்சிச் சான்றிதழ் – 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற இயலக்கூடிய கடலோடி எந்திரம்;

(ஒ) தேர்ச்சிச் சான்றிதழ் – 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற மின்னியல் “ தொழில்நுட்பக் கப்பற்றுணையாளர்; அத்துடன்

(ஓ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றுக்கும் 3000 கிலோவோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட பிரதான பொறியியல் அலுவலராகக் கடலில் செல்வதற்கான புறக்குறிப்பு.

(5) பொறியியல் அலுவலர்களின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதியினால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்பட்டவாறான மேலதிகக் கட்டளைகளுக்கு இணங்கியொழுகுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட தேவைப்பாடுகளுக்கமைய, மேலே ஒழுங்குவிதி 5(4) (ஆ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட தகுதிச்சான்றிதழ்களின்மீது - இரண்டாவது பொறியியல் அலுவலர், (4) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட புறக்குறிப்பைச் செய்தல்வேண்டும்:

ஆயின், புறக்குறிப்பு ஒன்றை வைத்திருக்கும் பொறியியல் அலுவலர் உயர் சான்றிதழ் ஒன்று வழங்கப் பெறுவதற்கு தகைமைபெறும்போது, அதே புறக்குறிப்பை அந்தச் சான்றிதழுக்கு மாற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

6. (அ) கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்கள் என்போருக்கு சமவாயத்தின் அத்தியாயங்கள் II, III, V/ 1-1 மற்றும் V/1-2 இன் ஏற்பாடுகளுக்கிணங்க தேர்ச்சிகள் பற்றிய சான்றிதழ்களைப் பணிப்பாளர் தலைமையதிபதி வழங்குதல் வேண்டும்.

(ஆ) ஏனைய தேர்ச்சிகள் பற்றிய சான்றிதழ்களை வழங்குவதற்கான தத்துவத்தை எவையேனும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்களுக்கு பணிப்பாளர் தலைமையதிபதி கையளிக்கலாம்.

7. (அ) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி, -

(i) இன்னொரு திறத்தவரின் கொடியைப் பறக்க விடுவதற்கு உரித்துடைய கப்பல்களில் சேவையாற்றுகின்றவர்களும் இலங்கைக் கொடி பறக்கின்ற கப்பல்களில் சேவையாற்றுகின்ற கடலோடிகளைவிட அத்தகைய கடலோடிகளுக்குக் கூடுதலாகக் கண்டிப்பான தேவைப்பாடுகளை விளைவிக்கின்ற முறையில் அத்தகைய பயணங்களில் ஈடுபட்டுள்ளவர்களுமான கடலோடிகள்மீது பயிற்சி, அனுபவம் அல்லது சான்றுப்படுத்துகைத் தேவைப்பாடுகளை விதித்தலாகாது; அத்துடன்

(ii) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டிராத கப்பல்கள் தொடர்பில் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு விஞ்சுதலாக இன்னொரு திறத்தவரின் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடைய கப்பல்களில் சேவையாற்றுகின்ற கடலோடிகள் தொடர்பிலான தேவைப்பாடுகளை விதித்தலாகாது.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, ஏனைய திறத்தவர்களின் கரையோரத்தை அண்மித்தல் வரைவிலக்கணத்தின் வரையறைகளினுள் அவர்களின் கரையோரத்துக்கப்பாற்பட்ட பயணங்களை உள்ளடக்குகின்ற, சமவாயத்தின் கரையோரத்தை அண்மித்த பயணங்களின் நன்மைகள் அளிக்கப்பட்ட கப்பல்களுக்காக, உட்படுத்தப்பட்ட வியாபார இடப்பரப்புகள் மற்றும் வேறு இயைபான நிபந்தனைகள் ஆகிய இரண்டினதும் விபரங்களைக் குறித்துரைக்கின்ற பொறுப்பேற்பைத் திறத்தவர்களுடன் செய்துகொள்ளுதல் வேண்டும்.

(இ) (i) பணிப்பாளர் தலைமையதிபதி, எந்தத் திறத்தவரின் கரையோரத்தில் கப்பல் ஈடுபட்டுள்ளதோ அந்தத் திறத்தவரின் பயிற்சி, அனுபவம் மற்றும் சான்றுப்படுத்துகைத் தேவைப்பாடுகளுக்கு ஆகக்குறைந்தது சமமாகவுள்ள பயிற்சி, அனுபவம் மற்றும் சான்றுப்படுத்துகைத் தேவைப்பாடுகளை, இன்னொரு திறத்தவரின் கரையோரத்துக்கப்பால், கரையோரத்தை அண்மித்த பயணங்களில் கிரமமாக ஈடுபட்டுள்ள இலங்கைக் கொடியைப் பறக்கின்ற கப்பல்களில் சேவையாற்றுகின்ற கடலோடிகளுக்கு விதித்துரைத்தல் வேண்டும்:

ஆயின், அவை கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டிராத கப்பல்கள் தொடர்பில் சமவாயத்தின் தேவைப்பாடுகளை விஞ்சுதலாகாது.

(ii) ஒரு திறத்தவரினால் கரையோரத்தை அண்மித்த பயணமாக வரைவிலக்கணங்கூறப்பட்டதற்கப்பால் அதன் பயணத்தை நீடித்து அவ்வரைவிலக்கணத்தினால் மேவப்பட்ட நீரப்பரப்புகளினுட் பிரவேசிக்கின்ற கப்பலில் சேவையாற்றுகின்ற கடலோடிகள், சமவாயத்தின் தோதான தகுதித் தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கைக் கொடியைப் பறக்கின்ற கப்பல், கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஒரு திறத்தவரல்லாதவரின் கரையோரத்துக்கப்பால் கிரமமாக ஈடுபட்டுள்ளபோது, சமவாயத்தின் கரையோரத்தை அண்மித்த பயண ஏற்பாடுகளின் நன்மையை அதற்கு அளிக்கலாம். ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதியினால் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு உட்படுத்தப்பட்ட வியாபார இடப்பரப்புகள் மற்றும் ஏனைய இயைபான நிபந்தனைகள் பற்றிய விபரங்களைக் குறித்துரைக்கின்ற பொறுப்பேற்பு, சம்பந்தப்பட்ட நாட்டுடன் செய்துகொள்ளப்படுதல் வேண்டும்.

(உ) அதன் வரைவிலக்கணம் கூறப்பட்ட கரையோரத்தை அண்மித்த பயண வரையறைகளுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட கடலோடிகளின் சான்றிதழ்கள், ஏனைய திறத்தவர்களின் வரைவிலக்கணங்கூறப்பட்ட கரையோரத்தை அண்மித்த பயண வரையறைகளினுள்ளான சேவைக்காக அல்லது மறுதலையாக அவர்களினால் ஏற்றுக்கொள்ளப்படலாம்; ஆயின், சம்பந்தப்பட்ட ஏனைய திறத்தவர்கள், உட்படுத்தப்பட்ட வியாபார இடப்பரப்புகள் பற்றிய விபரங்களையும் அதன் ஏனைய இயைபான நிபந்தனைகளையும் குறித்துரைக்கின்ற பொறுப்பேற்பைச் செய்துகொள்ளுதல் வேண்டும்.

(ஊ) இவ்வொழுங்குவிதியின் தேவைப்பாடுகளுக்கிணங்க, கரையோரத்தை அண்மித்த பயணங்களுக்கு வரைவிலக்கணங்கூறுகின்ற பணிப்பாளர் தலைமையதிபதி:

(i) எஸ்ரீசிடபிள்யூ கோவையின் பிரிவு A-1/3 இல் குறித்துரைக்கப்பட்ட கரையோரத்தை அண்மித்த பயணங்களை ஆளுகின்ற நெறிகளைத் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ii) எஸ்ரீசிடபிள்யூ சமவாயத்தின் ஒழுங்குவிதி 1/7 இன் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுக, செயலாளர் நாயகத்துக்கு, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் விபரங்களை அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(iii) எஸ்ரீசிடபிள்யூ சமவாயத்தின் ஒழுங்குவிதி 1/2 பந்திகள் 5, 6 அல்லது 7 ஐப் பின்பற்றி வழங்கப்பட்ட புறக்குறிப்புகளில் கரையோரத்தை அண்மித்த பயண வரையறைகளைச் சேர்த்தல் வேண்டும்.

## பாகம் III

### நுழைவு நிபந்தனைகளும் தகவுத் தேவைப்பாடுகளும் - அலுவலர்களும் கப்பற்றுணையாளர்களும்

8. (1) தகுதிச்சான்றிதழ் அல்லது புறக்குறிப்புக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும், பின்வருவனவற்றைக் காண்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச்சான்றிதழ்;

(ஆ) அவர் பதவி வகிக்கின்ற பதவியில் அவர் தொடர்பிலான கண்பார்வை நியமங்கள் பரிசோதனைச் சான்றிதழொன்று. இது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய பரிசோதனையை நடாத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலரினால் நடாத்தப்பட்டிருத்தல் வேண்டும். இப்பரிசோதனையானது இவ்வொழுங்கு விதிகளுக்கான II ஆம் அட்டவணையில் அட்டவணை ஏ-1/9 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்;

(இ) அவர் வகிக்கின்ற பதவியில் அவர் தொடர்பிலான மருத்துவ உடற்றகுதிப் பரிசோதனை சான்றிதழ் ஒன்று. இது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய பரிசோதனையை நடாத்துவதற்கென அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் ஒருவரினால் நடாத்தப்பட்டிருத்தல் வேண்டும். இப்பரிசோதனையானது இவ்வொழுங்கு விதிகளுக்கான II ஆம் அட்டவணை பீ-1/9 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அலுவலர்களின் விடயத்தில், விண்ணப்பத் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட கப்பலில் சேவையாற்றுதல் தொடர்பிலான நற்குணம், நன்னடத்தை, மதுவிலக்கிய நிலை, அனுபவம், ஆற்றல் பற்றிய நற்சான்றிதழ்கள். அத்தகைய சான்றிதழ்கள் பிரதமப் பரிசோதகர் வேறு விதமாக அனுமதித்தால் தவிர, அச்சேவை எக்கப்பலில் புரியப்பட்டதோ அக்கப்பலின் கப்பற்றலைவரினால் அல்லது பிரதம பொறியியலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கம்பனிப் பிரதிநிதியினால் ஒப்பமிடப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

(2) சேறுவாரும் கருவி பொருத்தப்பட்ட கலன்கள், ஆராய்ச்சிக் கலன்கள், மீட்புக்கலன்கள், இழுவைப் படகுகள் போன்ற வர்த்தகக் கப்பல்கள் அல்லாதவற்றில் தகைமை பெறும் சேவை அல்லது பயிற்சி நடாத்தப்பட்டிருக்குமிடத்து அவர்களின் சான்றிதழ்கள் அத்தகைய கலங்களிலான சேவைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படலாம்.

(3) றோ-றோ பயணிகள் கப்பல்களில் அல்லது பயணிகள் கப்பல்களில் அல்லது முழுமையாக அல்லது பகுதியளவில் அபாயகரமான சரக்கு எனக் குறித்துரைக்கப்பட்ட பெருமளவு சரக்கைக் கொண்டுள்ள கப்பல்களில் சேவையாற்றும் கப்பற்றலைவர்களும், கப்பற்றள அலுவலர்களும், பொறியியல் அலுவலர்களும், கப்பற்றுணையாளர்களும், அந்தந்தத் தகுதிச்சான்றிதழ்களுக்குப் பொதுவாகத் தேவைப்படும் தகைமைகளை வைத்திருப்பதோடு, விடயத்துக்கேற்ப, இதனகத்து 13ஆம், 14ஆம் அல்லது 15ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட மேலதிக தேவைப்பாடுகளையும் திருப்தி செய்தல் வேண்டும்.

## பாகம் IV

## கப்பற்றளப் பகுதியில் கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிக்கும், தகைமைகளுக்குமான ஆகக்குறைந்த கட்டாயத் தேவைப்பாடுகள்

9. (1) 500 மொத்தத் தொன்னான அல்லது அதற்கு மேற்பட்ட கடலிற்செல்லும் கப்பல்களில் சேவையாற்றுகின்ற கடற் போக்குவரத்து காவலிற்குப் பொறுப்பான அலுவலர் ஒவ்வொருவரும் சான்றுப்படுத்துகை வழங்கப்படுவதற்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்-

(அ) தகைமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் திகதியன்று பதினெட்டு (18) வயதிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/1ஆம் பிரிவின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்கின்றதான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு 500 மொத்தத் தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற்றளப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அந்தக் கப்பல் பயிற்சியானது அங்கீகரிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்படலும் வேண்டும் அல்லது வேறு வகையில் 500 மொத்தத்தொன் அல்லது மேற்பட்ட கப்பலில் 36 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அல்லது கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறையாத கப்பல்களில் கடற் போக்குவரத்துக் காவலின் பொறுப்பான அலுவலராகத் தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னர் 3000 மொத்தத் தொன்னுக்குக் குறையாத கப்பல்களில் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(இ) தேவையான கடல்செல் சேவையின்போது 06 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு கப்பற்றலைவரின் அல்லது தகைமைபெற்ற அலுவலரின் மேற்பார்வையின்கீழ் பாலம் காவல் காத்தல் கடமைகளைப் புரிந்திருத்தல் வேண்டும்;

(ஈ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2 இன் ஏ-VI/1 ஆம் அட்டவணைக்கிணங்க) அடிப்படைப் பயிற்சி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) வேக மீட்புப் படகுகள் தவிர்ந்த உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி, தகுதிச்சான்றிதழ்-ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர் அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி, மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

*(2) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களிலான ஒவ்வொரு பிரதான கப்பற்றுணைத்தலைவரும் செல்லுபடியான தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றிதழுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:*

*(அ) 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற்போக்குவரத்து காவலுக்குப் பொறுப்பான அலுவலராக தகுதிச்சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்;*

*(ஆ) 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற் போக்குவரத்து காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அதில் 06 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு 3000 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற் போக்குவரத்து காவலுக்குப் பொறுப்பான அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையினைக் கொண்டிருத்தல் வேண்டும்;*

*(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 4-2ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு மருத்துவக் கவனிப்பில் தேர்ச்சிக்கான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும்; அத்துடன்*

*(ஈ) 3000 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதம கப்பற்றுணைத்தலைவருக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி, மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.*

*(3) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கடலிற் செல்லும் கப்பலின் கப்பற்றலைவர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றிதழுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:*

*(அ) பிரதம கப்பற்றுணைத்தலைவராக தோதான தகுதிச் சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்;*

*(ஆ) பிரதம கப்பற்றுணைத்தலைவராகத் தகுதிச்சான்றிதழ் வைத்திருக்கும் அதேவேளையில், கடற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக 24 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய கடற்செல் சேவை 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பலில் புரியப்பட்டிருத்தல் வேண்டும்; இதில் 6 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி, 3000 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பிரதம கப்பற்றுணைத்தலைவராக சேவையாற்றியிருந்தால் மேற்கூறிய காலப்பகுதி பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாதவாறு அல்லது சரிசமவிகிதப்படி குறைக்கப்படலாம்;*

*(இ) தோதானவாறு 3000 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற்றலைவருக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/2ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி, மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.*

*(4) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கடல்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற கடற் போக்குவரத்து காவலிற்குப் பொறுப்பான ஒவ்வோர் அலுவலரும் செல்லுபடியான தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றிதழுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:*

*(அ) தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;*

*(ஆ)(i) கரையோரத்தை அண்மித்த பயணங்களுக்குத் தோதான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-II/1இல் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்றதான அங்கீகரிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான கப்பல் பயிற்சி உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக 18 மாதங்களுக்குக் குறையாமல் 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற்றளப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது வேறு வகையில் 36 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்*

*(ii) தேவையான கடற்செல் சேவையின்போது 6 மாதங்களுக்குக் குறையாத கப்பற்றலைவரின் அல்லது தகைமைபெற்ற அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பாலம் காவல்காத்தல் கடமைகளைப் புரிந்திருத்தல் வேண்டும்;*

(இ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும்; அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2 இன் ஏ-VI/1 ஆம் அட்டவணைக்கிணங்க) அடிப்படைப் பயிற்சி (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) விரைவு மீட்புப் படகுகள் தவிர வேறு உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி, ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர்கள் அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(ஈ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கடற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்களுக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

ஆயினும், 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கடல்செல் கப்பல்களில் கப்பற்றள கடமைகளின் சேவைக்காலத்தின் மூன்றில் இரண்டு பாகமானது இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக கடல்செல் சேவையாகக் கருதப்படலாமென்பதுடன் ஒவ்வொரு தேர்வுவிழைநரும் 500 மொத்தத்தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கடல்செல் கப்பல்களில் கப்பற்றளக் கடமைகளை மேலும் குறைந்த பட்சம் 12 மாதங்களுக்குப் புரிந்திருத்தலும் வேண்டும்.

(5) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பலில் பிரதம கப்பற்றுணைத்தலைவர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கடற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராகத் தகுதிச்சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) 12 மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற் போக்குவரத்து காவலுக்குப்பொறுப்பான அலுவலராக அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-2 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பலில் மருத்துவக் கவனிப்பில் தேர்ச்சிக்கான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என தகுதிச்சான்றிதழ் வழங்குவதற்காக ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 500 மொத்தத்தொன்னுக்கும் 3000 மொத்தத்தொன்னுக்கும் இடைப்பட்ட கப்பல்களில் கப்பற்றலைவருக்காக அத்துடன் பிரதம கப்பற்றுணைத்தலைவருக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/2 ஆம் பிரிவில் காட்டப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்வதற்கான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை, மதிப்பீட்டைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(6) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கடல்செல் கப்பலின் கப்பற்றலைவர் ஒவ்வொருவரும், செல்லுபடியான தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் பிரதம துணைத்தலைவராகத் தகுதிச்சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) 500 மொத்தத்தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக 24 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய கடல்செல் சேவைக் காலப்பகுதியில் 12 மாதங்களுக்குக் குறையாமல் 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதம கப்பற்றுணைத்தலைவராக சேவையாற்றியிருத்தல் வேண்டும். மேற்கூறிய காலப்பகுதி 18 மாதங்களுக்குக் குறையாததாகவோ அல்லது சரிசமவிகிதப்படியோ குறைக்கப்படலாம்.

(இ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 500 மொத்தத்தொன் முதல் 3000 மொத்தத்தொன்னுக்கு இடைப்பட்ட கப்பல்களில் கப்பற்றலைவருக்கு எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்றதான இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(7) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கடற் போக்குவரத்து காவலுக்குப் பொறுப்பான அலுவலர் ஒவ்வொருவரும், செல்லுபடியான தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று (18) வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:-

(i) ஒன்றில் கடலுக்கு செல்லுமுன்னரான அல்லது கப்பலில் 24 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி; இது 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி ஒன்றுக்கான கடல்செல் சேவைக் காலப்பகுதியையும் 80 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பாலம் காவல் பேணலுடன் இணைந்துள்ள கடமைகளை நிறைவேற்றுகின்ற கடல்செல் காலப்பகுதிக்குக் குறைந்தபட்சம் 12 மாதங்களில் 6 மாதமாவது சேவையாற்றியுள்ளார் என்பதையும் உள்ளடக்குகிறது; அல்லது

(ii) 80 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் 36 மாதங்களுக்குக் குறையாமல் கப்பற்றள திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை.

(இ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும்; அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2 இன் ஏ-VI/1 ஆம் அட்டவணைக்கிணங்க) அடிப்படைப் பயிற்சி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1 அட்டவணைக்கிணங்க) விரைவு மீட்புப் படகுகள் தவிர உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி, தகுதிச் சான்றிதழ் - ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர்கள் அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(ஈ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கடற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலருக்கு எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(8) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் கப்பற்றலைவர் ஒவ்வொருவரும், செல்லுபடியான தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) (20) வயதுக்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 80 மொத்தத்தொன்னைவிட அதிகமான கப்பல்களில் கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/4-2ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவக் கவனிப்பில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியிலான தேர்ச்சித்திறனை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச் சான்று காண்பித்தல் வேண்டும்;

(ஈ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கப்பற்றலைவருக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(9) ''இழுவைப்படகுச் சேவைக்கு மட்டுமான'' வரையறைக்கு அமைந்தவாறு புறக்குறிப்பிடப்பட்ட இச்சான்றிதழுக்கு விண்ணப்பிக்கின்ற தேர்வுவிழைநர் ஒருவர் கடல்செல் இழுவைப்படகுகளில் தகைமையளிக்கும் கடல்செல் சேவைக்காலப்பகுதியில் குறைந்தபட்சம் அரைவாசியையும் மீதியை இழுவைப்படகு தவிர்ந்த வேறு கடல்செல் கப்பல்களிலும் ஆற்றியிருத்தல் வேண்டும்.

(10) 500 மொத்தத்தொன்னுக்கும் 3000 மொத்தத் தொன்னுக்கும் இடைப்பட்ட கடற்செல் கப்பலின் கப்பற்றலைவர் மற்றும் பிரதம கப்பற்றுணைத்தலைவர் ஒவ்வொருவரும் தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றிதழுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) பிரதம கப்பற்றலைவராகச் சான்றளிக்கப்படுவதற்காக, 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) கப்பற்றலைவராகச் சான்றளிக்கப்படுவதற்காக, 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்; அத்துடன் அத்தன்மையில் 36 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்; எவ்வாறாயினும், அத்தகைய கடல்செல் சேவையின் 12 மாதங்களுக்குக் குறையாத காலத்துக்குப் பிரதம கப்பற்றுணைத்தலைவராகச் சேவையாற்றியிருப்பின், இக்காலப்பகுதி 24 மாதங்களுக்குக் குறையாமல் குறைக்கப்படலாம்; அத்துடன்

(இ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருந்து 500 மொத்தத்தொன்னுக்கும் 3000 மொத்தத் தொன்னுக்கும் இடைப்பட்ட கப்பல்களின் கப்பற்றலைவர்களுக்கும் பிரதம கப்பற்றுணைத்தலைவர்களுக்குமான எஸ்ரீசிடபிள்யூ கோவையின் பிரிவு யூ-11/2 இல் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

(11) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டிராத 500 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த கப்பல்களில் கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்களினதும் கப்பற்றலைவர்களினதும் சான்றளித்தலுக்கான கட்டாய குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டிராத 500 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த கடல்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள ஒவ்வோர் அலுவலரும், 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களுக்கான தகுதிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டிராத 500 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த கடற்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற ஒவ்வொரு கப்பற்றலைவரும் 500 மொத்தத் தொன்னுக்கும் 3000 மொத்தத் தொன்னுக்கும் இடைப்பட்ட கப்பல்களில் கப்பற்றலைவராகச் சேவையாற்றுவதற்காகத் தகுதிச் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(12) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கடல்செல் கப்பல்களில் கடற் போக்குவரத்துக் காவலின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணையாளர் ஒவ்வொருவரும் முறையாக சான்றிதழ் அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கடற் போக்குவரத்துக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளராக சான்றிதழ் வழங்கப்படுவதற்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்-

(அ) சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்-

(i) 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதம பரீட்சகரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு பாலம் காவல் காத்தலுக்கு இயைபான குறைந்தபட்சம் 9 மாதகாலப் பயிற்சியும் அனுபவமும்; அல்லது

(ii) 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற்றளப் பகுதியில் 3 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிக் காலப்பகுதியும் 6 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவைக் காலப்பகுதியும் அல்லது

(iii) 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற்றளப் பகுதியில் இயைபான தன்மையில் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை:

ஆயினும், பரீட்சைத் திகதியிலிருந்து முற்போந்த 5 வருட காலத்தின்போது 12 மாத கடல் சேவையைக் கொண்டிராத அக்கப்பற்றுணையாளர்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதான விசேட நினைவூட்டுதல் கற்கைநெறி ஒன்றைத் தொடர்தல் வேண்டும். கப்பற்றளப் பகுதிக்குத் தொடர்பற்ற ஆரம்பப் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ள கப்பற்றுணையாளர்கள் பரீட்சைத் திகதியிலிருந்து முற்போந்த ஐந்து வருட காலப்பகுதியின்போது கப்பற்றளப் பகுதியில் இயைபான தன்மை ஒன்றில் குறைந்தபட்சம் 18 மாதக் கடல்செல் சேவையினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதான விசேட தரமுயர்த்தற் கற்கைநெறி ஒன்றையும் தொடருதல் வேண்டும்;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச் சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிளயூ கோவையின் ஏ-VI/1-1ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ்வு நுட்பங்கள் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-2ஆம் அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும் தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 6-1ஆம் அட்டவணைக்கிணங்க) பாதுகாப்பு விழிப்புணர்வு; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமங்களைத் திருப்தி செய்தல் வேண்டும்.

(13) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கடல்செல் கப்பல்களில் கப்பற்றளத்தில் கடமையாற்றுகின்ற இயலக் கூடிய கடலோடி ஒவ்வொருவரும் முறையாகச் சான்றிதழ் அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் இயலக்கூடிய கடலோடி கப்பற்றளமாக தேர்ச்சிச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்-

(அ) சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சைத் தேதியன்று (18) வயதிற்குக் குறையாதிருத்தல் வேண்டும்;

(ஆ) கடற்போக்குவரத்துக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளராக சான்றளிப்பதற்கான தேவைப்பாட்டைத் திருப்தி செய்தல் வேண்டும்;

(இ) கடற்போக்குவரத்துக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளராக சேவையாற்றுவதற்காக தகைமைபெற்ற அதேவேளையில், கப்பற்றளப் பகுதியில் -

(i) 18 மாதங்களுக்குக் குறையாத, அல்லது
(ii) 12 மாதங்களுக்குக் குறையாத,

அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்தி செய்திருத்தலும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்;

(ஈ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-1 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர் வாழ்வு நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-2 ஆம்

அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும், தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3 ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்புகளும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) வேக மீட்புப் படகுகள் தவிர்ந்த உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 6-2ஆம் பிரிவிற்கிணங்க) பெயர்குறிப்பிடப்பட்ட பாதுகாப்புக் கடமைகளுடனான கடலோடிகள்; அத்துடன்

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/5ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

01, யூலை 2013 ஒழுங்கு விதிகளுக்கு அமைய 60 மாதங்களினுள் 12 மாதங்களுக்குக் குறையாத காலப் பகுதியொன்றுக்கு கடற்போக்குவரத்துக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளர் ஒருவராக தேர்ச்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்ற பின்னர் கப்பற்றளப் பகுதியில் இயைபான தன்மை ஒன்றில் கடலோடிகள் சேவையாற்றியுள்ளனராயின் அக்கடலோடிகள் இவ்வுபவொழுங்கு விதியின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்துள்ளனர் என பிரதான பரீட்சகர் கருதலாம்.

பாகம் V

**வானொலி தொடர்பு மற்றும் வானொலி இயக்குநர்கள்**

10. (1) சமவாயத்தின் IVஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுடனான இணங்கியொழுக ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநராகத் தகுதிச் சான்றிதழைத் தேவைப்படுத்துகின்ற தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்-

(அ) சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பத் திகதியன்று (18) வயதிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-IV/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்;

(இ) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபையினால் வழங்கப்பட்டதொரு ஜிஎம்டிஎஸ்எஸ் பொது வானொலி இயக்குநரின் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2 இன் ஏ-VI/1 ஆம் அட்டவணைக்கிணங்க அடிப்படைப் பயிற்சி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) வேக மீட்புப் படகுகள் தவிர்ந்த உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-1 ஆம் அட்டவணைக்கிணங்க) பாதுகாப்பு விழிப்புணர்வு.

(2) சமவாயத்தின் IVஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுவதற்காக ஜிஎம்டிஎஸ்எஸ் மட்டுப்படுத்தப்பட்ட வானொலி இயக்குநராகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றைத் தேவைப்படுத்துகின்ற தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்-

(அ) சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பத் திகதியன்று (18) வயதிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-IV/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்தல் வேண்டும்;

(இ) இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபையினால் வழங்கப்பட்டதொரு ஜிஎம்டிஎஸ்எஸ் மட்டுப்படுத்தப்பட்ட வானொலி இயக்குநரின் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) வேக மீட்புப் படகுகள் தவிர்ந்த உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 6-1 ஆம் அட்டவணைக்கிணங்க) பாதுகாப்பு விழிப்புணர்வு.

பாகம் VI

**எந்திரப் பகுதியிலுள்ள கடல்சார் பொறியியல் அலுவலர்கள் மற்றும் கப்பற்றுணையாளர்களின் பயிற்சி மற்றும் தகைமைகளுக்கான ஆகக்குறைந்த கட்டாயத் தேவைப்பாடுகள்**

11. (1) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கடல்செல் கப்பல் ஒன்றில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் பொறியியல் காவல் பொறுப்பு அலுவலர் அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத எந்திர அறையொன்றில் பதவிப்பெயர்குறிப்பிடப்பட்ட கடமைப் பொறியியல் அலுவலர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச்சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றிதழுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்-

(அ) தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதிருத்தல் வேண்டும்;

(ஆ)(i) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1 என்னும் பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்தி செய்வதும் முப்பத்தாறு மாத காலத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாகப் பிரதம பொறியியலாளரின் அல்லது வேறு சான்றுப்படுத்தப்பட்ட பொறியியலாளரின் மேற்பார்வையின்கீழ் 6 மாத எந்திர அறை காவல் காத்தல் சேவையை உள்ளடக்கியதாக 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் எந்திரப் பகுதியில் 12 மாதங்களுக்குக் குறையாத இணைந்த வேலைக்களத் தேர்ச்சிகள் பயிற்சியையும் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையும் கொண்டிருத்தல் வேண்டும். இதில் கப்பலிலான பயிற்சி, அங்கீகரிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்; அல்லது

(ii) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட பொறியியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக தகுதிச்சான்றிதழைப் பெற்றபின்னர் பிரதம பொறியியலாளரின் அல்லது வேறு சான்றுப்படுத்தப்பட்ட பொறியியலாளரின் மேற்பார்வையின்கீழ் 6 மாத கால எந்திர அறை காவல் காத்தல் சேவையை உள்ளடக்கியதாக 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் எந்திரப் பகுதியில் 12 மாதங்களுக்குக் குறையாத இணைந்த வேலைக்களத் தேர்ச்சிகள் பயிற்சியையும் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையும் கொண்டிருத்தல் வேண்டும்; அல்லது

(iii) பிரதம பொறியியலாளரின் அல்லது வேறு சான்றுறுதிப்படுத்தப்பட்ட பொறியியலாளரின் மேற்பார்வையின்கீழ் எந்திர அறை காவல் காத்தலில் 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட 6 மாதங்கள் உட்பட 36 மாதங்களுக்கு குறையாத இணைந்த வேலைக்களத் தேர்ச்சிகள் பயிற்சியையும் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

இதில் கப்பலிலான பயிற்சி, அங்கீகரிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் ; அல்லது

(இ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2 இன் ஏ-VI/1 ஆம் அட்டவணைக்கிணங்க) அடிப்படைப்பயிற்சி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1 அட்டவணைக்கிணங்க) வேக மீட்புப் படகுகள் தவிர்ந்த உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) நீராவிக் கொதிகலன்களின் தொழிற்பாட்டுக்கும், பராமரிப்புக்குமான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1 ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்யாத பொறியியல் அலுவலருக்குத் தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். இச்சான்றிதழானது அத்தகைய பொறியியல் அலுவலர் தேவையான தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற வரையில், எக்கப்பலில் நீராவிக் கொதிகலன்கள் கப்பல் எந்திரத்தொகுதியின் பாகமாக அமைகின்றனவோ அக்கப்பலிலான சேவைக்குச் செல்லுபடியு டையதாகாதிருக்கலாம்.

(3) முறையே மோட்டார் கப்பல்களில் அல்லது நீராவிக் கப்பல்களில், மேலே (1)(ஆ) என்னும் உப ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைத் தேர்வுவிழைநர் பூர்த்திசெய்துள்ளாரா என்பதைப் பொறுத்து மோட்டார் கப்பல்களுக்கு அல்லது நீராவிக் கப்பல்களுக்கு ஏற்புடையதாகின்றவாறு தகுதிச்சான்றிதழ் வழங்கப்படலாம்.

(4) மோட்டார் கப்பல்கள், நீராவிக் கப்பல்கள் ஆகிய ஒவ்வொன்றிலும், மேலே (1)(ஆ) என்னும் உப ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவையான கடல்செல் சேவையைத் தேர்வுவிழைநர் பூர்த்திசெய்திருந்தால் மோட்டார் கப்பல்களுக்கும் நீராவிக்கப்பல்களுக்கும் ஏற்புடையதாகின்றவாறு இணைந்த தகுதிச்சான்றிதழ் வழங்கப்படலாம்.

(5) 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதிமூலம் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலிலான ஒவ்வோர் இரண்டாவது பொறியியல் அலுவலரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் எந்திரக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத எந்திர அறையில் பெயர் குறிப்பிடப்பட்ட கடமைப் பொறியியலாளராக தகுதிச்சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் 6 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையை உள்ளடக்கியதான 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையில் எந்திரக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத எந்திர அறையில் பெயர் குறிப்பிடப்பட்ட கடமைப் பொறியியலாளராக 18 மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) இரண்டாவது பொறியியல் அலுவலராகத் தகுதிச் சான்றிதழுக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/2ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தை திருப்தி செய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

ஆயினும்-

(i) முறையே மோட்டார் கப்பல்கள் அல்லது நீராவிக்கப்பல்களில் மேலே பந்தி (ஆ)இல் குறித்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைத் தேர்வுவிழைநர் பூர்த்திசெய்துள்ளாரா என்பதைப் பொறுத்து மோட்டார் கப்பல்களுக்கு அல்லது நீராவிக்கப்பல்களுக்கு ஏற்புடையதாகின்றவாறு தகுதிச்சான்றிதழ் வழங்கப்படலாம்; அத்துடன்

(ii) மோட்டார் கப்பல்கள், நீராவிக் கப்பல்கள் ஆகிய ஒவ்வொன்றிலும் மேலே பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட தேவையான கடல்செல் சேவையைத் தேர்வுவிழைநர் பூர்த்திசெய்திருந்தால் மோட்டார் கப்பல்களுக்கும் நீராவிக்கப்பல்களுக்கும் ஏற்புடையதாகின்றவாறு இணைந்த தகுதிச் சான்றிதழ் வழங்கப்படலாம்.

(6) 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதிமூலம் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலிலான ஒவ்வொரு பிரதம பொறியியலாளரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்திகொண்ட கப்பல்களில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையில் இரண்டாவது பொறியியல் அலுவலராக அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத பொறியியல் அறையொன்றில் பெயர் குறிப்பிடப்பட்ட கடமைப் பொறியியலாளராகத் தகுதிச்சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் இரண்டாவது பொறியியல் அலுவலர் ஒருவராக தகுதிச்சான்றிதழை வைத்திருக்கும் அதேவேளை 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் பொறியியல் காவல் பொறுப்பு அலுவலராக 18 மாதங்களுக்குக் குறையாமல் கடல்செல் சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; ஆயினும், இக்காலப்பகுதி, 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் இரண்டாவது பொறியியலாளராக அத்தகைய சேவையை ஆற்றியுள்ளாரெனின் 12 மாதங்களுக்குக் குறையாமல் அல்லது சரிசமவிகிதப்படி குறைக்கப்படலாம்; அத்துடன்

(இ) தோதானவாறு பிரதம பொறியியல் அலுவலராகத் தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கு எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/2ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

ஆயினும், பிரதம பொறியியல் அலுவலராகத் தகுதிச்சான்றிதழ் ஒன்று பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாக வழங்கப்படலாம்:-

(i) மோட்டார் கப்பல்கள்; மேலே பந்தி (ஆ)வில் குறித்துரைக்கப்பட்ட 9 மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையானது மோட்டார் கப்பலின் பிரதான உந்துதல் பொறியில் ஆற்றப்பட்டிருந்து எஞ்சியுள்ள காலப்பகுதி நீராவிக்கப்பலின் அல்லது மோட்டார் கப்பலின் அல்லது ஏதேனும் கப்பலின் பொருத்தமான இணைந்த பகுதியில் உள்ள எந்திரத் தொகுதியின் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியில் ஆற்றப்பட்டிருத்தல் வேண்டும்;

(ii) நீராவிக் கப்பல்கள்; மேலே பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட 09 மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையானது நீராவிக் கப்பலின் கொதிகலன்களிலும் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியிலும் ஆற்றப்பட்டிருந்து எஞ்சியுள்ள காலப்பகுதி ஒரு நீராவிக் கப்பலின் அல்லது மோட்டார் கப்பலின் அல்லது ஏதேனும் கப்பலின் பொருத்தமான இணைந்த பகுதியில் உள்ள எந்திரத் தொகுதியின் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியிலும் புரியப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது

(iii) இணைந்த மோட்டார், நீராவிக் கப்பல்கள்; நீராவிக்கப்பலின் கொதிகலன்களிலும் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியிலும் 9 மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையும் மோட்டார் கப்பல் ஒன்றின் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியில் 9 மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையும் புரியப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றுக்கும் மற்றும் 3000 கிலோவோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் பொறியியல் காவல்பொறுப்பு அலுவலர் அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத எந்திர அறையொன்றில் பெயர் குறிப்பிடப்பட்ட கடமைப் பொறியியல் அலுவலர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் திகதியன்று (18) வயதுக்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:-

(i) அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையில் 30 மாதங்கள். இது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகம் ஒன்றில் முறையாக ஆவணப்படுத்தப்பட்ட கப்பலிலான பயிற்சியை உள்ளடக்குதல் வேண்டும்;

(ii) கப்பலில் சான்றுப்படுத்தப்பட்ட பொறியியல் அலுவலர் ஒருவரால் நுணுக்கமாக மேற்பார்வை செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்ட எந்திரப் பகுதியில் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; அத்துடன் இது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகமொன்றில் போதியவாறு ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(iii) பின்வருவனவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச் சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2 இன் ஏ-VI/1 ஆம் அட்டவணைக்கிணங்க) அடிப்படைப் பயிற்சி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) வேக மீட்புப் படகுகள் தவிர்ந்த உயிர்வாழ்வு படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 5ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பற் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(இ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களுக்கு ஏற்புடையற்பாலதான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

ஆயினும், நீராவிக் கொதிகலன்களின் தொழிற்பாட்டுக்கும் பராமரிப்புக்குமான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்யாத பொறியியல் அலுவலருக்குத் தகுதிச்சான்றிதழ் வழங்கப்படலாம். இத்தகுதிச்சான்றிதழானது பொறியியல் அலுவலர் தேவையான தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்றவரையில், எக்கப்பலில் நீராவிக் கொதிகலன்கள் கப்பல் எந்திரத்தொகுதியின் பாகமாக அமைகின்றனவோ அக்கப்பலிலான சேவைக்குச் செல்லுபடியுடையதாதல் ஆகாது.

(8) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடையிலான பிரதான உந்துதல் சக்தியுடைய கடல்செல் கப்பலில் இரண்டாவது பொறியியல் அலுவலர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடையிலான உந்துதல் சக்தியுடைய கப்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட பொறியியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலகராகத் தகுதிச்சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி ஒன்றிற்கு 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடையிலான உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் பொறியியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலகராக அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடையிலான உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் பிரதம பொறியியல் அலுவலர்களுக்கும் இரண்டாவது பொறியியல் அலுவலர்களுக்கும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(9) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடையிலான பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலில் பிரதம எந்திரவியல் அலுவலர் ஒவ்வொருவரும் செல்லுபடியான தகுதிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடையிலான உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் இரண்டாவது எந்திரவியல் அலுவலகராகத் தகுதிச்சான்றிதழ்களை வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் பொறியியல் காவலலுக்குப் பொறுப்பான அலுவலராக அல்லது கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும்

இடையிலான உந்துதல் சக்தியுடைய இரண்டாவது பொறியியல் அலுவலர் ஒருவராக 12 மாதங்களுக்குக் குறையாததும் மூன்றாவது பொறியியல் அலுவலர் ஒருவராக 18 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களுக்கு வரையறுக்கப்பட்ட பிரதம பொறியியல் அலுவலராகத் தகுதிச்சான்றிதழுக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி மற்றும் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(10) 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலிலான ஒவ்வொரு பிரதம பொறியியலாளர் அலுவலரும் இரண்டாவது பொறியியலாளர் அலுவலரும் தகுதிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) ஒரு பொறியியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலராகச் சான்றளிக்கப்படுவதற்கான தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டுமென்பதுடன்,-

(i) இரண்டாவது பொறியியல் அலுவலராகச் சான்றளிக்கப்படுவதற்காக, பொறியியலாளர் அலுவலராக அல்லது பொறியியல் அலுவலராக 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ii) பிரதம பொறியியலாளர் அலுவலராகச் சான்றளிக்கப்படுவதற்காக, 24 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்; இதில் 12 மாதங்களுக்குக் குறையாத சேவை, இரண்டாவது பொறியியலாளர் அலுவலராகச் சேவையாற்றுவதற்குத் தகைமை கொண்டிருக்கையில் ஆற்றப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சியைப் பூர்த்திசெய்து எஸ்ரீசிடபிள்யூ கோவையின் A-III/3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்தல் வேண்டும்.

3000 கிலோவோற்று அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியைக்கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதிமூலம் சக்தியூட்டப்பட்ட கப்பல்களில் இரண்டாவது பொறியியலாளர் அலுவலராகச் சேவையாற்றுவதற்குத் தகைமை கொண்டுள்ள ஒவ்வொரு பொறியியலாளர் அலுவலரும், சான்றிதழ் அவ்வாறு புறக்குறிப்பிடப்படின், 3000 கிலோவோற்று உந்துதல் சக்திக்குக் குறைவான பிரதான உந்துதல் எந்திரத்தொகுதிமூலம் சக்தியூட்டப்பட்ட கப்பல்களில் பிரதம பொறியியலாளர் அலுவலராகச் சேவையாற்றலாம்.

(11) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியையுடைய கடல்செல் கப்பலொன்றில் காலாகாலமாக ஆளில்லாத எந்திர அறையொன்றில் கடமைகளைப் புரிவதற்கு எந்திர அறையின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணையாளர் அல்லது குறித்தளிக்கப்பட்ட ஒவ்வொரும் முறையாகச் சான்றிதழ் அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியையுடைய கப்பல்களில் பொறியியற் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளராக சான்றிதழ் வழங்கப்படுவதற்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்:

(அ) சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று (18) வயதுக்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

(i) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதம பரீட்சகரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு பொறியியற் காவல் காத்தலுக்கு இயைபான குறைந்தபட்சம் 6 மாதகாலப் பயிற்சியும் அனுபவமும்; அல்லது

(ii) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் 6 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவைக் காலப்பகுதியும் 3 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட விசேட பயிற்சிக் காலப்பகுதியும் அல்லது

(iii) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் எந்திரப் பகுதியில் இயைபான தன்மையில் 12 மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவை:

ஆயினும், பரீட்சைத் திகதியிலிருந்து முற்போந்த 5 வருட காலத்தின்போது 12 மாத கடல்செல் சேவையைக் கொண்டிராத அக்கப்பற்றுணையாளர்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதான விசேட நினைவூட்டுதல் கற்கைநெறி ஒன்றைத் தொடர்தல் வேண்டும். எந்திரப் பகுதிக்குத் தொடர்பற்ற ஆரம்பப் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ள கப்பற்றுணையாளர்கள் பரீட்சைத் திகதியிலிருந்து முற்போந்த 5 வருட காலப்பகுதியின்போது எந்திரப் பகுதியில் இயைபான தன்மை ஒன்றில் குறைந்தபட்சம் 18 மாத கடல்செல் சேவையினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதான விசேட தரமுயர்த்தற் கற்கைநெறி ஒன்றையும் தொடருதல் வேண்டும்;

(இ) எந்திர அறைக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளராகச் சான்றிதழ் வழங்குவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச் சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 1-1ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ்வு நுட்பங்கள் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-2ஆம் அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும் தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-3ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-1ஆம் அட்டவணைக்கிணங்க) மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும்.

(12) 750 கிலோவோற் உந்துதல் சக்தி அல்லது அதற்கு மேற்பட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பல் ஒன்றில் சேவையாற்றுகின்ற ஒவ்வோர் இயலக்கூடிய கடலோடி எந்திரமும் முறையாகச் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். சான்றுப்படுத்துகை ஒவ்வொரு தேர்வுவிழைநரும்–

(அ) சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சைத் திகதியன்று (18) வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்;

(ஆ) ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் எந்திர அறைக் காவலின் பாகமாக அமையும் அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத எந்திர அறையொன்றில் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட கப்பற்றுணையாளர் ஒருவராகச் சான்றளித்தலுக்கான தேவைப்பாடுகளைத் திருப்திசெய்திருத்தல் வேண்டும்;

(இ) 750 கிலோவோற் உந்துதல் சக்தி எந்திர அறைக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளரொருவராகச் சேவையாற்றுவதற்குத் தகைமைபெற்றுள்ள அதேவேளை, கடல்செல் கப்பலொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியொன்றின் பாகமாக 12 மாதங்களுக்குக் குறையாமல் அல்லது 6 மாதங்களுக்குக் குறையாமல் எந்திரப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியொன்றையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளாரென ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-1ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ்வு நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-2ஆம் அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும் தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-3ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் சமூகப் பொறுப்புக்களும், மற்றும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 6-1 ஆம் பிரிவில்) பாதுகாப்பு விழிப்புணர்வு; அத்துடன்

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/5ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

01 யூலை 2013 ஒழுங்கு விதிகளுக்கு அமைய 60 மாதங்களினுள் 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு எந்திர அறைக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளர் ஒருவராக தேர்ச்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்ற பின்னர் எந்திரப் பகுதியில் இயைபான தன்மை ஒன்றில் கடலோடி சேவையாற்றியுள்ளாராயின் அக்கடலோடி இவ்வுபவொழுங்குவிதியின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்துள்ளார் என பிரதான பரீட்சகர் கருதலாம்.

12. (1) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியையுடைய பிரதான உந்துதல் எந்திரத் தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற மின்னியல்- தொழில்நுட்ப அலுவலர் ஒவ்வொருவரும் தகுதிச்சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய சான்றளித்தலுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் -

(அ) தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று (18) வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்;

(ஆ) 30 மாதங்களுக்குக் குறையாத இணைந்த வேலைக்களத் தேர்ச்சிகள் பயிற்சியையும் 12 மாதங்களுக்குக் குறையாத காலம், அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அவற்றில் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/ 6 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக இருத்தலும் வேண்டும். அத்துடன், இது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்படுதல் வேண்டும் அல்லது வேறுவகையில் 36 மாதங்களுக்குக் குறையாத, இணைந்த வேலைக்கள தேர்ச்சிகள் பயிற்சியிலும் 30 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையில் மின்னியல் - தொழில்நுட்ப கப்பற்றுணையாளராக கடல்செல் சேவையிலும் இருத்தல் வேண்டும்; 750 கிலோ வோற் உந்துதல் சக்திக்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்டிருத்தல்.

(இ) எஸ்ரிசிடபிளயூ கோவையின் ஏ-III/6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்றதான தூண்டற்பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும். அதாவது, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 2 இன் ஏ-VI/1 ஆம் அட்டவணைக்கிணங்க) அடிப்படைப் பயிற்சி (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1ஆம் அட்டவணைக்கிணங்க) வேக மீட்புப் படகுகள் தவிர்ந்த உயிர்வாழ்வுப் படகுகளிலும் மீட்புப்படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி அத்துடன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/5ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்.

2013, யூலை 01 ஆந் திகதிய ஒழுங்கு விதிகளுக்கு அமைய இவ்வொழுங்குவிதிகள் வலுவிற்குவருவதற்கு முற்போந்த கடைசி 60 மாதங்களினுள் 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு கப்பலொன்றில் இயைபான தன்மையில் கடலோடி சேவையாற்றியுள்ளாராயின் இவ்வுபவொழுங்குவிதியின் தேவைப்பாடுகளை அக்கடலோடி திருப்தி செய்திருப்பதாக பிரதம பரீட்சகர் கருதலாமென்பதுடன், கடலோடி கட்டாய தரமுயர்த்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றைப் பூர்த்திசெய்த பின்னர் மதிப்பீட்டில் அவரது தகுதி விபரித்துக்காட்டப்படுமாயின் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்வதாகவும் கருதப்படலாம்.

(2) 750 கிலோவோற் உந்துதல் சக்தி அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியினால் சக்தியூட்டப்பட்ட கடல்செல் கப்பலொன்றில் சேவையாற்றுகின்ற மின்னியல்-தொழில்நுட்பக் கப்பற்றுணையாளர் ஒவ்வொருவரும் முறையாகச் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய சான்றளிப்பிற்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்-

(அ) தகுதிச் சான்றிதழ் ஆரம்பிக்கும் தேதியன்று (18) வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) 750 கிலோவோற் உந்துதல் சக்திக்கு மேற்பட்ட உந்துதல் சக்திகொண்ட கடல்செல் சேவையானது 15 மாதங்களுக்குக் குறையாத இணைந்த வேலைக்களத் தேர்ச்சிகள் பயிற்சியையும் அதில் 9 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். கடல்செல் சேவையானது எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/ 7 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்கின்றதான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக இருத்தல் வேண்டும்; அல்லது

(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/7ஆம் அட்டவணைக்கிணங்க தொழில்நுட்பத் தகுதிகளையும் 750 கிலோவோற் உந்துதல் சக்திக்கு மேற்பட்ட உந்துதல் சக்திகொண்ட கடல்செல் சேவையானது 9 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவைக் காலப்பகுதியையும் திருப்தி செய்கின்ற தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-/1-1ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ்வு நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-2ஆம் அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும் தீ எதிர்ப்பும்,

(எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் V-VI/1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் சமூகப் பொறுப்புகளும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/6ஆம் அட்டவணைக்கிணங்க) பாதுகாப்பு விழிப்புணர்வு; அத்துடன்

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/7ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தை திருப்திசெய்திருத்தல் வேண்டும்.

2013,யூலை 01 ஆந்திகதிய ஒழுங்கு விதிகளுக்கமைய 60 மாதங்களினுள் 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு கப்பலொன்றில் இயைபான பதவியில் கடலோடிகள் சேவையாற்றியுள்ளனராயின் இவ்வுபவொழுங்குவிதியின் தேவைப்பாடுகளை அக்கடலோடிகள் திருப்தி செய்திருப்பதாக பிரதம பரீட்சகர் கருதலாமென்பதுடன், கடலோடிகள் கட்டாய தரமுயர்த்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றைப் பூர்த்திசெய்த பின்னர் மதிப்பீட்டில் அவரவரது தகுதி விபரித்துக்காட்டப்படுமாயின் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/7ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்வதாகவும் கருதப்படலாம்.

பாகம் VII

**எண்ணெய்த் தாங்கிக் கப்பல்கள், இரசாயனத் தாங்கிக் கப்பல்கள், வாயுத் தாங்கிக் கப்பல்கள் என்பன மீது கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்களின் பயிற்சி மற்றும் தகைமைகளுக்கான ஆகக்குறைந்த கட்டாயத் தேவைப்பாடுகள்**

13. (1) எண்ணெய்த்தாங்கிக் கப்பல்கள் அல்லது இரசாயனத் தாங்கிக் கப்பல்கள்மீது கப்பற்சரக்கு அல்லது கப்பற்சரக்கு உபகரணம் தொடர்பான குறிப்பான கடமைகளும் பொறுப்புக்களும் குறித்தொதுக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் கப்பற்றுணையாளர்கள், எண்ணெய்த்தாங்கிக் கப்பல்கள் மற்றும் இரசாயன தாங்கிக் கப்பல்கள் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) எண்ணெய் மற்றும் இரசாயன தாங்கிக் கப்பல் சரக்குத் தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சிச் சான்றிதழ் ஒன்றுக்கான ஒவ்வோர் அலுவலரும் கப்பற்றுணையாளரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அடிப்படைப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் -

(அ) எண்ணெய் அல்லது இரசாயனத் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது 3 மாதங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடல் செல் சேவையைப் பூர்த்தி செய்திருத்தலும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-ஏ/1-1, பந்தி 1 இல் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்திருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) எண்ணெய் அல்லது இரசாயனத் தாங்கிக் கப்பல் சரக்கு தொழிற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியொன்றைப் பூர்த்திசெய்திருத்தல் அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 1 இன் ஏ-V/1-1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும்.

(3) கப்பற்றலைவர்கள், பிரதம பொறியியல் அலுவலர்கள், பிரதம துணைத் தலைவர்கள், இரண்டாவது பொறியியல் அலுவலர்கள் மற்றும் கப்பற்சரக்கை எண்ணெய்த்தாங்கிக் கப்பலில் ஏற்றுவதில், இறக்குவதில், இடைப்போக்கில் கவனிப்பு, கப்பற்சரக்கைக் கையாளுவதில் பாதுகாப்பு, தாங்கியை சுத்தப்படுத்தல் அல்லது வேறு கப்பற்சரக்குடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளுக்கு உடனடிப் பொறுப்புக் கொண்டவரான எவரேனுமாள், எண்ணெய்த்தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தரப் பயிற்சியில் சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) எண்ணெய்த்தாங்கி கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தரப் பயிற்சியில் சான்றிதழ் ஒன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்-

(அ) எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பற் சரக்குத் தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றளித்தலுக்கான தேவைப்பாடுகளைத் திருப்தி செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதளித்தலுக்காகத் தகைமை கொண்டிருப்பதுடன்,-

(i) எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று முறை சரக்கை ஏற்றுதல் மற்றும் மூன்று முறை சரக்கை இறக்குதல் உட்பட மிகையான தன்மை ஒன்றில் அத்தகைய கப்பல்களில் ஆகக்குறைந்தது ஒரு மாத அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பீ-V/1ஆம் பிரிவின் வழிகாட்டு நெறிகளைக் கவனத்திற்கெடுத்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகமொன்றில் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) எண்ணெய்த் தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தியின் ஏ-V/1-1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்திருத்தலும் வேண்டும்.

(5) கப்பற்றலைவர்கள், பிரதம பொறியியல் அலுவலர்கள், பிரதம துணைத் தலைவர்கள், இரண்டாவது பொறியியல் அலுவலர்கள் மற்றும் கப்பற்சரக்கை எண்ணெய்த்தாங்கிக் கப்பலில் ஏற்றுவதில், இறக்குவதில் அத்துடன் இடைப்போக்கில் கவனிப்பு, கப்பற்சரக்கைக் கையாளுவதில் பாதுகாப்பு, தாங்கியை சுத்தப்படுத்தல் அல்லது வேறு கப்பற்சரக்குடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளுக்கு உடனடிப் பொறுப்புக் கொண்டவரான எவரேனுமாள், எண்ணெய்த்தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தரப் பயிற்சிகளில் சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) எண்ணெய்த்தாங்கி கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தரப் பயிற்சியில் சான்றிதழ் ஒன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் -

(அ) எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பற் சரக்குத் தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றளித்தலுக்கான தேவைப்பாடுகளைத் திருப்தி செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றளித்தலுக்காகத் தகைமை கொண்டிருப்பதுடன்,-

(i) எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று முறை சரக்கை ஏற்றுதல் மற்றும் மூன்று முறை சரக்கை இறக்குதல் உட்பட மிகையான தன்மை ஒன்றில் அத்தகைய கப்பல்களில் ஆகக்குறைந்தது ஒரு மாத அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பீ-V/1ஆம் பிரிவின் வழிகாட்டுநெறிகளைக் கவனத்திற்கெடுத்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகமொன்றில் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) எண்ணெய்த் தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தியின் ஏ-V/1-1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்தலும் வேண்டும்.

(7) உளதாம் எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பல் பயிற்சியின் தேர்ச்சிச்சான்றிதழ், சான்றிதழைக் கொண்டிருப்பவர்கள் அந்தந்த தாங்கிக் கப்பல்களில் மீள வலிதாக்கும் தேதிக்கு முற்போந்த ஐந்து வருடங்களின்போது கடல்செல் சேவையினை 3 மாத காலப்பகுதியொன்றுக்கு கப்பல் ஒன்றில் தோதான தன்மையொன்றில் சேவைபுரிந்துள்ளாராயின் அல்லது இயைபான உயர்தர தாங்கிக் கப்பல் பயிற்சியை முடித்திருப்பாராயின், அந்தந்த வகையினவான தாங்கிக்கப்பல்கள்மீது பெறப்பட்ட கடற்சேவைக்கிணங்க மீள வலிதாக்கப்படுதல் வேண்டும்.

14. (1) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களின் கப்பற் சரக்கு அல்லது கப்பற் சரக்கு உபகரணங்கள் தொடர்புபட்ட விசேட கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் குறித்தளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் கப்பற்றுணையாளர்கள், திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பற் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(2) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பற் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சி சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அடிப்படைப் பயிற்சியைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்தலும் வேண்டும்:-

(அ) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது 3 மாதங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 1ஆம் பந்தியின் ஏ-V/1-2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் தகுதிநியமத்தைத் திருப்தி செய்தல்; அல்லது

(ஆ) திரவமயமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பற் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியொன்று அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 1ஆம் பந்தியின் ஏ-V/1-2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் தகுதி நியமத்தைத் திருப்தி செய்தல்.

(3) கப்பற்றலைவர்கள், பிரதம பொறியியல் அலுவலர்கள், பிரதம கப்பற்றுணைத் தலைவர்கள், இரண்டாவது பொறியியல் அலுவலர்கள் மற்றும் ஏற்றுதல் இறக்குதல், இடைப்போக்கில் கவனித்தல், கப்பற்சரக்கைக் கையாளுதல், தாங்கியை சுத்தப்படுத்துதல் அல்லது திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களின் வேறு கப்பற் சரக்குகளுடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளுக்கான உடனடிப் பொறுப்புடைய எவரேனுமாள் திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களின் தொழிற்பாடுகளுக்கான உயர்தர பயிற்சியில் சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல் சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தர பயிற்சியில் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்-

(அ) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றளித்தலுக்கான தேவைப்பாடுகளைத் திருப்திசெய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றளித்தலுக்கான தகைமையையும் அதேவேளை ,-

(i) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது 3 மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) ஆகக்குறைந்தது மூன்று ஏற்றுதல் மற்றும் மூன்று இறக்குதல் உட்பட மிகையான தன்மையொன்றில் திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களில் ஒரு மாதத்துக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பீ-V/1ஆம் பிரிவின் வழிகாட்டுநெறிகளைக் கவனத்திற்கெடுத்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகமொன்றில் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பற் சரக்குத் தொழிற்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சியை பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தியின் ஏ-V/1-2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்திருத்தலும் வேண்டும்.

(5) தாங்கிக் கப்பல் பயிற்சியில் ஏலவேயுள்ள தேர்ச்சிச் சான்றிதழ், கடலோடி முறையான தாங்கிக் கப்பல்களில் முற்போந்த 60 மாதங்களினுள் ஆகக்குறைந்தது 3 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு தாங்கிக் கப்பலொன்றில் இயைபான தன்மையொன்றில் சேவை புரிந்துள்ளாராயின் அல்லது இயைபான உயர்தர தாங்கி பயிற்சியை முடித்திருப்பாராயின், மீள வலிதாக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் VIII

## பயணிகள் கப்பல்களின் கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்கள் மற்றும் வேறு ஆளணியினரின் பயிற்சி மற்றும் தகைமைகளுக்கான ஆகக்குறைந்த கட்டாயத் தேவைப்பாடுகள்

15. (1) பயணிகள் கப்பல்களில் கப்பற்றளச் சேவைகள் குறித்தொதுக்கப்பட முன்னதாக, சர்வதேசப் பயணங்களில் ஈடுபட்டுள்ள பயணிகள் கப்பல்களில் சேவை புரிகின்ற கடலோடிகள் தமது பதவி, கடமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கிணங்க கீழே தரப்பட்ட (3) தொடக்கம் (6) வரையான உப ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்படும் பயிற்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(2) கீழே தரப்பட்ட (3), (5) மற்றும் (6) ஆம் உ பஒழுங்குவிதிகளுக்கிணங்க பயிற்றப்படவேண்டியவராகத் தேவைப்படுத்தப்படும் கடலோடிகள் 5 ஆண்டுகளை விஞ்சாத இடைவெளிகளில், தோதான நினைவூட்டும் பயிற்சிகளைப் பெறுதல் வேண்டும் அல்லது முன்னைய 5 ஆண்டுகளினுள் தேவைப்படும் தகுதி நியமத்தை எய்தியிருப்பதான சான்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) கப்பற்றலைவர், அலுவலர் அல்லது பயணிகள் கப்பலில் அவசர சூழ்நிலைகளில் பயணிகளுக்கு உதவுவதற்கென கடமை நிரலில் குறித்தொதுக்கப்பட்ட வேறு ஆளணியினர் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-V/2,1 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறாக சனக்கும்பல் முகாமையில் பயிற்சியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(4) பயணிகள் கப்பல்களில் பயணிகள் இடங்களில் பயணிகளுக்கு நேரடி சேவையை வழங்குகின்ற ஆளணியினர் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தியின் ஏ-V/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்புப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(5) கப்பற்றலைவர்கள், பிரதம பொறியியல் அலுவலர்கள், பிரதம கப்பற்றுணைத்தலைவர்கள், இரண்டாவது பொறியியல் அலுவலர்கள் மற்றும் பயணிகள் கப்பல்களில் அவசர சூழ்நிலைகளில் பயணிகள் பாதுகாப்புக்கான பொறுப்பைக் கொண்டுள்ளவாறான கடமை நிரலில் பெயர்குறிக்கப்பட்ட எவரேனுமாள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 3ஆம் பந்தியின் ஏ-V/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக நெருக்கடிநிலை முகாமை மற்றும் மனித நடத்தையில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(6) கப்பற்றலைவர்கள், பிரதம பொறியியல் அலுவலர்கள், பிரதம கப்பற்றுணைத்தலைவர்கள், இரண்டாவது பொறியியல் அலுவலர்கள் மற்றும் பயணிகளை ஏற்றுதல் மற்றும் இறக்குதல், கப்பற் சரக்கை ஏற்றுதல், இறக்குதல் அல்லது பாதுகாத்தல் அல்லது றோ-றோ பயணிகள் கப்பலின் வாயில்களை மூடும் உடனடிப் பொறுப்பு குறித்தளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 4ஆம் பந்தியின் ஏ-V/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக பயணிகள் பாதுகாப்பு, கப்பற்சரக்கு பாதுகாப்பு மற்றும் கப்பல் வாயிற் பாதுகாப்பு என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(7) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றமை பற்றிய ஆவணச் சான்று கடலோடிகளினால் கொண்டு செல்லப்படுதல் வேண்டும்.

பாகம் IX

**மாற்றீடான சான்றளித்தல்**

16. (1) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்துக்கான இணைப்பின் II ஆம் மற்றும் III ஆம் அத்தியாயங்களில் விதிக்கப்பட்ட சான்றளித்தலுக்கான தேவைப்பாடுகள் எவ்வாறிருப்பினும், இயைபான பிரதம பரீட்சகர் அத்தகைய அத்தியாயங்களின் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த வேறு சான்றிதழ்களை வழங்கலாம்; ஆயின்,-

(அ) சான்றிதழ்களிலும் புறக்குறிப்பிடுதல்களிலும் குறிப்பிடப்படவேண்டிய இணைந்த பணிகளும் பொறுப்புகளின் மட்டங்களும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/1 , ஏ-II2, ஏ-II/3 , ஏ-II/4 , ஏ-II5,ஏ- III/1, ஏ-III/2, ஏ-III/3, ஏ-III/ 4, ஏ-III/ 5 மற்றும் ஏ-IV/2 ஆம் பிரிவுகளில் தோன்றுகின்றவற்றிலிருந்து ஒத்தனவாகவுள்ளன. தெரிவுசெய்யப்படுகின்றன; அத்துடன் அவற்றுக்கு

(ஆ) தேர்வு விழைநர்கள் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சியை பூர்த்திசெய்துள்ளார்கள் ; அத்துடன் சான்றிதழ்களிலும் புறக்குறிப்பிடுதல்களிலும் குறிப்பிடப்படவேண்டிய பணிகள் மற்றும் மட்டங்களுக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் தோதான பிரிவுகளில் விதித்துரைக்கப்பட்டதும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VII/1ஆம் பிரிவில் வெளிப்படுத்தப்பட்டதுமான தகுதி நியமத்திற்கான தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ளனர்;

(இ) தேர்வுவிழைநர்கள் சான்றிதழில் குறிக்கப்படவேண்டிய பணிகள் மற்றும் மட்டங்களின் செயற்பாட்டிற்குத் தோதான அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்தி செய்துள்ளனர். கடல்செல் சேவைக்கான ஆகக்குறைந்த காலப்பகுதி எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்துக்கான இணைப்பின் II மற்றும் IIIஆம் அத்தியாயங்களில் விதித்துரைக்கப்பட்ட கடல்செல் சேவைக் காலப்பகுதிக்குச் சமமாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், கடல்செல் சேவைக்கான ஆகக்குறைந்த காலப்பகுதி எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VII/2 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்டதைவிடக் குறைவாக இருத்தலாகாது;

(ஈ) தொழிற்பாட்டு மட்டத்தில் கடற் போக்குவரத்துப் பணிகளைப் புரியவுள்ள சான்றளித்தலுக்கான தேர்வுவிழைநர்கள் பெயர் குறிப்பிடப்பட்ட வானொலிக் கடமைகளை வானொலி ஒழுங்குவிதிகளுக்கிணங்கப் புரிவதற்கு தோதானவாறாக எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் IV ஆம் அத்தியாயத்தில் ஒழுங்குவிதிகளின் ஏற்புடையனவான தேவைப்பாடுகளைத் திருப்திசெய்தல் வேண்டும்; அத்துடன்

(உ) சான்றிதழ்கள், I/2 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளுக்கிணங்கவும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் VII ஆம் அத்தியாயத்தில் தரப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்கவும் வழங்கப்படுகின்றன.

(2) சான்றிதழ் எதுவும், எஸ்ரிசிடபிளயூ சமவாயத்தின் உறுப்புரை IV இன்கீழும் ஒழுங்குவிதி 1/7 இன்கீழும் தேவைப்படுத்தப்பட்டவாறு, அது பணிப்பாளர் தலைமையதிபதியினால் சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்புக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலொழிய, எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் ஏII ஆம் அத்தியாயத்தின்கீழ் வழங்கப்படுதலாகாது.

(3) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் II ஆம் அத்தியாயத்தின் ஏ-II/1, ஏ-II/ 2, ஏ-II/3, ஏ-II/4 அல்லது ஏ-II/5 ஆம் அட்டவணைகளில் அல்லது IIIஆம் அத்தியாயத்தின் ஏ-III/1, ஏ-III/2, ஏ-III/3 , ஏ-III/ 4 , அல்லது ஏ-III/5 ஆம் அட்டவணைகளில் அல்லது IVஆம் அத்தியாயத்தின் ஏ -IV/2 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் பணியை அல்லது பணித்தொகுதியைப் புரிகின்ற கடலோடி ஒவ்வொருவரும் ஏற்புடையதானவாறு தகுதிச் சான்றிதழ் அல்லது தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

17. (1) பணிப்பாளர் தலைமையதிபதி-

(அ) மாற்றீடான சான்றளிப்பு முறைமையானது கடலில் பாதுகாப்பின் அளவொன்றை உறுதிப்படுத்துகின்றது அத்துடன் வேறு அத்தியாயங்களினால் ஏற்பாடு செய்யப்படும் ஆகக்குறைந்ததற்குச் சமமான தீழ்ப்பு தொடர்பில் தடுப்புப் பயனொன்றைக் கொண்டுள்ளது என்றிருந்தாலொழிய எந்த மாற்றீடான சான்றளிப்பு முறைமையும் அமுலாக்கப்படலாகாது எனவும் ; அத்துடன்

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் VII ஆம் அத்தியாயத்தின்கீழ் மாற்றீடான சான்றளிப்புக்கான ஏதேனும் ஒழுங்கேற்பாடு வேறு அத்தியாயங்களின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு இடைமாற்றம் செய்யத்தக்கதாக வழங்கப்படவேண்டுமெனவும்,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) மேலே தரப்பட்ட (1)ஆம் உப ஒழுங்குவிதியில் இடைமாற்றத்தகுதன்மையின் நெறி பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் II ஆம் அத்துடன்/அல்லது IIIஆம் அத்தியாயங்களின் ஒழுங்கேற்பாடுகளின்கீழ் சான்றளிக்கப்பட்ட கடலோடிகள் அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் VIIஆம் அத்தியாயத்தின்கீழ் சான்றளிக்கப்பட்ட கடலோடிகள், கப்பல் ஒழுங்கமைப்பின் ஒன்றில் பாரம்பரிய அல்லது வேறு வடிவங்களைக் கொண்ட கப்பல்களில் சேவை புரிய இயலுமானவர்களாக உள்ளனர்; அத்துடன்

(ஆ) கடலோடிகள் அவர்களின் தேர்ச்சிகளை வேறு எங்காவது பயன்படுத்த அவர்களின் இயலுமாந்தன்மையைப் பாதிக்கக்கூடிய அத்தகைய வழியொன்றில் குறித்த கப்பல் ஒழுங்கேற்பாடுகளுக்குப் பயிற்றப்படவில்லை.

(3) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் VIIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் சான்றிதழை வழங்குதலில், பின்வரும் நெறிகள் கவனத்திற்கெடுக்கப்படுதல் வேண்டும்:-

(அ) மாற்றீடான சான்றிதழ்களை வழங்குதல் பின்வருவனவற்றுக்காகத் தானாகப் பயன்படுத்தப்படுதலாகாது:-

(i) கப்பலின் கப்பற்றொகுதியுறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்,

(ii) உயர்தொழிலின் மேன்மையைக் குறைத்தல் அல்லது கடலோடிகளின் "தேர்ச்சியைக் குறைத்தல்" அல்லது

(iii) ஏதேனும் குறிப்பான காவல் காத்தலின்போது தனித்த சான்றிதழ் வைத்திருப்பவரொருவருக்கு எந்திரம் மற்றும் கப்பற்றளக்காவல் காத்தல் அலுவலர்களின் இணைந்த கடமைகளின் குறித்தளித்தலை நியாயப்படுத்துதல்; அத்துடன்

(ஆ) கட்டளையிடும் ஆள் கப்பற்றலைவராகப் பதவிப் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்; அத்துடன் கப்பற்றலைவர் மற்றும் ஏனையோரின் சட்ட அந்தஸ்து மற்றும் அதிகாரம் மாற்றீடான சான்றளிப்புக்கான ஏதேனும் ஒழுங்கேற்பாட்டின் அமுலாக்கத்தினால் பாதகமானமுறையில் பாதிக்கப் படுதலாகாது.

18. (1) கப்பலோட்டுதல் அல்லது கடல்சார் பொறியியலில் ஆதார மட்டத்தில் சான்றளிப்புக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் இயைபான பயிற்சியைப் பூர்த்திசெய்வதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஒன்றில் ஏ-III/4 அட்டவணை அல்லது ஏ-II/4 ஆம் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட பணிக்கென தகுதி நியமத்தைத் திருப்தி செய்தலும் வேண்டும். முறையே எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/ 4 அல்லது ஏ-II/4 அட்டவணையில் குறித்துரைக்கப்படும் பணிகள் சேர்க்கப்படலாம்; ஆயின் தேர்வுவிழைநர் தோதானவாறாக மேலதிக இயைபான பயிற்சியைப் பூர்த்திசெய்து சம்பந்தப்பட்ட பணிகளுக்காக அத்தகைய அட்டவணைகளில் விதித்துரைக்கப்பட்ட தகுதி நியமங்களைத் திருப்திசெய்தல் வேண்டும்.

(2) இயலக்கூடிய கடலோடிக் கப்பற்றளமாக உதவி மட்டத்தில் சான்றளிப்புக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் ஏ- II/4 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் தகுதி நியமத்திற்கு இணங்கியொழுகுவதற்கு மேலதிகமாக இயைபான பயிற்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டுமெனவும் ஏ-II/5 ஆம் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட பணிகளில் எல்லாவற்றுக்கும் தகுதி நியமத்தினை திருப்தி செய்தல் வேண்டுமெனவும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். ஏ-III/4 அல்லது ஏ-III/5 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் பணிகள் சேர்க்கப்படலாம்; ஆயின் தேர்வுவிழைநர் மேலதிக இயைபான பயிற்சியை தோதானவாறாகப் பூர்த்திசெய்திருக்கிறார் என்பதுடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் இயைபான அட்டவணை அல்லது அட்டவணைகளில் விதித்துரைக்கப்படும் தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்றார்.

(3) இயலக்கூடிய கடலோடி எந்திரமாக உதவி மட்டத்தில் சான்றளிப்புக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் ஏ- III/4 ஆம் அட்டவணையில் விதித்துரைக்கப்படும் தகுதி நியமத்துடன் இணங்கியொழுகுதலுக்கு மேலதிகமாக ஏ-III/5 ஆம் அட்டவணையில் விதித்துரைக்கப்படும் பணிகள் எல்லாவற்றுக்கும் இயைபான பயிற்சியைப் பூர்த்திசெய்து தகுதிநியமத்தைத் திருப்திசெய்தல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். ஏ-II/4 அல்லது ஏ-II/5 ஆம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்படும் பணிகள் சேர்க்கப்படலாம்; ஆயின் தேர்வுவிழைநர் மேலதிக இயைபான பயிற்சியைத் தோதானவாறாகப் பூர்த்திசெய்துள்ளார் என்பதுடன், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் இயைபான அட்டவணை அல்லது அட்டவணைகளில் விதித்துரைக்கப்படும் சம்பந்தப்பட்ட பணிக்காகத் தகுதிநியமத்தை அடைந்தும் உள்ளார்.

(4) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் A-II/4 மற்றும் A-III/ 4 ஆம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட பணிகளில், ஆதாரமட்டத்தில் எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் VII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும் பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

(அ) பின்வருவனவற்றினால் உருவான 15 மாதங்கள் அனுபவத்திலும் விடக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை:-

(i) கடற் போக்குவரத்துசார் காவல் கடமைகளுடன் இணைந்த 9 மாதங்களுக்குக் குறையாத அனுபவம்; அத்துடன்

(ii) எந்திர அறைக் கடமைகளுடன் இணைந்த 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம்; அல்லது

(ஆ) பின்வருவனவற்றினால் உருவான 12 மாதங்களுக்குக் குறையாததாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவைக்காலப்பகுதி உட்பட ஒன்றில் கடலுக்கு செல்லுமுன்னர் அல்லது கப்பலில் விசேட பயிற்சியொன்று:-

(i) கடற் போக்குவரத்துசார் காவல் கடமைகளுடன் இணைந்த 6 மாதங்களுக்குக் குறையாத விசேட பயிற்சி; அத்துடன்

(ii) எந்திர அறைக் கடமைகளுடன் இணைந்த 6 மாதங்களுக்குக் குறையாத விசேட பயிற்சி.

(5) மேலே தரப்பட்ட (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளால் தேவைப்படுத்தப்படும் கடல்செல் சேவை, பயிற்சி மற்றும் அனுபவம், தோதான தகைமைபெற்ற அலுவலர் அல்லது கப்பற்றுணையாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(6) ஏ-II/ 5 மற்றும் ஏ-III/5 ஆம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்படும் பணிகளில் ஆதார மட்டத்தில் எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் VIIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் சான்றளிப்புக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும், கடற் போக்குவரத்துசார்

மற்றும் எந்திர அறை காவல் ஒன்றின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணையாளர் ஒருவராகச் சேவை புரியத் தகைமையுடையவராக இருக்கும் அதேவேளை எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/5 மற்றும் ஏ-III/5 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்படும் தகுதி நியமங்களை அடைதல் வேண்டும். அத்துடன் பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:-

(அ) பின்வருவனவற்றினால் உருவான 30 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை-

(i) இயலக்கூடிய கடலோடி கப்பற்றளக் கடமைகளுடன் இணைந்த 18 மாதங்களுக்குக் குறையாத சேவை, அத்துடன்

(ii) இயலக்கூடிய கடலோடி எந்திரக் கடமைகளுடன் இணைந்த 12 மாதங்களுக்குக் குறையாத சேவை; அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அத்துடன் பின்வருவனவற்றினால் உருவான அங்கீகரிக்கப்பட்ட 18 மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவை-

(i) இயலக்கூடிய கடலோடிக் கப்பற்றளக் கடமைகளுடன் இணைந்த 12 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி மற்றும் கடல்செல் சேவை; அல்லது

(ii) இயலக்கூடிய கடலோடி எந்திர கடமைகளுடன் இணைந்த 06 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி மற்றும் கடல்செல் சேவை; அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட விசேட ஒருங்கிணைக்கப்பட்ட கப்பற்றள மற்றும் எந்திர பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். பின்வருவனவற்றினால் உருவான ஒருங்கிணைக்கப்பட்ட கப்பற்றள மற்றும் எந்திர திணைக்களத்தில் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை-

(i) இயலக்கூடிய கடலோடிக் கப்பற்றளக் கடமைகளுடன் இணைந்த 06 மாதங்களுக்குக் குறையாத சேவை; அத்துடன்

(ii) இயலக்கூடிய கடலோடி எந்திரக் கடமைகளுடன் இணைந்த 06 மாதங்களுக்குக் குறையாத சேவை.

(7) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/1 மற்றும் VIII/ 1 ஆம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட பணிகளில் தொழிற்பாடுசார் மட்டத்தில் எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் VII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையை கொண்டிருத்தல் வேண்டும்; இச்சேவை, தகைமைபெற்ற பொறியியலாளர் அலுவலரின் மேற்பார்வையின் கீழ் எந்திர அறைக் கடமைகளைப் புரிகின்ற ஆகக் குறைந்தது 06 மாதக் காலப்பகுதியை உள்ளடக்குதல் வேண்டும்; கடற்போக்குவரத்துப் பணி தேவைப்படுமிடத்து, தகைமைபெற்ற பாலம் காவல்காத்தல் அலுவலரின் மேற்பார்வையின்கீழ் பாலம் காவல்காத்தல் கடமைகளைப் புரிகின்ற ஆகக்குறைந்தது 06 மாத காலப்பகுதியை உள்ளடக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சேவையின்போது, எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/ 1 மற்றும் ஏ-III/ 1 ஆம் பிரிவின் இயைபான தேவைப்பாடுகளைத் திருப்தி செய்வனவாக அங்கீகரிக்கப்பட்டவையும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்பட்டவையுமான கப்பலிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(8) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/2 மற்றும் ஏ-III/2 ஆம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட பணிகளின் இணைப்பில் முகாமை மட்டத்தில் எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் VII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் சான்றளித்தலுக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும், பின்வருமாறு சான்றிதழுக்கான புறக்குறிப்பில் காட்டப்படவேண்டிய பணிகள் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) ஒரு கப்பலின் பொறிமுறை உந்துதலுக்கான கட்டளை அல்லது பொறுப்புள்ளவர்கள் தவிர்ந்த வேறு ஆட்களுக்காக- தோதானவாறு எஸ் ரிசி டபிள்யூ கோவையின் III/2 அல்லது III/3 ஆம் ஒழுங்குவிதி தொடர்பான தொழிற்பாடுசார் மட்டத்தில் 12 மாதங்களுக்குக் கடமைகள் புரிதல் மற்றும் முகாமை மட்டத்தில் கடற்போக்குவரத்துப் பணி தேவைப்படுமிடத்து, தொழிற்பாடுசார் மட்டத்தில் பாலம் காவல்காத்தல் கடமைகளை ஆகக்குறைந்தது 12 மாதங்களுக்குப் புரிதல் ;

(ஆ) ஒரு கப்பலின் பொறிமுறை உந்துதலுக்கான கட்டளையை அல்லது பொறுப்பைக் கொண்டுள்ளவர்களுக்காக- மேலே பந்தி (அ) விலுள்ள ஏற்பாடுகள் உட்பட, சான்றிதழுக்கான புறக்குறிப்பில் காட்டப்படவேண்டிய பணிகள் தொடர்பான கடமைகளை சான்றளிக்கப்பட்ட அலுவலரென்றமுறையில், 48 மாதங்களுக்குக் குறையாமல் புரிதல்; இதில் 24 மாதங்களுக்கு, எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1 ஆம் அட்டவணையில் தரப்பட்ட பணிகளைப் புரிவதில் சேவையாற்றப்படுதல் வேண்டும் மற்றும் 24 மாதங்களுக்கு, எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1 மற்றும் ஏ- III/2 ஆம் அட்டவணைகளில் தரப்பட்ட பணிகளைப் புரிவதில் சேவையாற்றப்படுதல் வேண்டும்.

பாகம் X

**கடற்சேவையைக் கணிப்பிடுதல்**

19. (1) ஏதேனும் குறிப்பிட்ட தகுதிச் சான்றிதழுக்கு அல்லது புறக்குறிப்பிடுதல் அல்லது தேர்ச்சிச் சான்றிதழுக்கு குறித்துரைக்கப்பட்ட தகைமையளிக்கும் கடல்செல் சேவை, தகுதியை மதிப்பிட ஆரம்பிக்கும் தேதிக்கு நேர்முந்திய 10 ஆண்டு காலப்பகுதிக்குள்ளாக புரியப்படுதல் வேண்டுமென்பதுடன் தகுதி மதிப்பீடு ஆரம்பித்த தேதிக்கு நேர்முந்திய ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக 12 மாத கடல் சேவைக் காலப்பகுதியை உள்ளடக்குதலும் வேண்டும்.

(2) வியாபாரஞ்சாராக் கலன்கள், இழுவைக் கப்பல்கள், சேறுவாரும் கப்பல்கள், ஆராய்ச்சிக் கப்பல்கள், அழிவுமீட்புக்கலன்கள், கடற்போக்குவரத்து வழிகாட்டிகள், நிலைப்படுத்தற் கப்பல்கள் மற்றும் இதையொத்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏனைய கலன்கள், கப்பலில் ஆற்றிய மொத்தச் சேவைக் காலப்பகுதியின் மூன்றில் இரண்டு பங்கு கடலில் உண்மையாகச் செலவழித்த நேரமாக அமையுமானால் அல்லது அதனை விஞ்சுமானால், பூரணமாகக் கணக்குக்கெடுக்கப்படலாம். இந்த விகிதாசாரத்திற்கும் குறைவாக உண்மையாகக் கடல்செல் சேவை அமையுமானால் உண்மையான கடல்செல் சேவையின் ஒன்றரை மடங்குகள் "தகைமையளிக்கும் கடல்செல் சேவையாகக" கணக்கிடப்படலாம். சகல தேர்வுவிழைநர்களிடமிருந்தும் தேவைப்படுத்தப்பட்ட கடற்சேவைச் சான்றுடன் மேலதிகமாக, மேற்பார்வையின் ஆகக்குறைந்தது ஆறு மாத காவல் காத்தல் சேவை பற்றிக் குறிப்பீடு செய்து உண்மையாகக் கடலில் செலவழித்த நேரத்தைக் குறிப்பிட்டு, கம்பனியிடமிருந்தும் கப்பற்றலைவரிடமிருந்தும் பெறப்பட்ட கூற்றை அல்லது சான்றிதழைப் தேர்வுவிழைநர்கள் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய சேவை (2) ஆம் உபஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட வகையைச் சார்ந்த அத்தகைய கப்பல்களில் மட்டும் புரியப்பட்டுள்ளவிடத்து சான்றிதழ்கள் அத்தகைய கலன்களிலான சேவைக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்படலாம்.

(4) சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் காலத்திற்குக்காலம் ஆளமர்த்தப்படாத எந்திர அறையொன்றில் பெயர்குறிக்கப்பட்ட கடமைப் பொறியியலாளர் ஒருவராக அல்லது ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் பொறியியல் காவலொன்றின் பொறுப்பதிகாரியாகத் தகுதிச் சான்றிதழ்களைக் கொண்டவர்களாக வர உட்கருதுகின்ற கடல்சார் பொறியியல் கிளையின் இலங்கைக் கடற்படையின் அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட இயைபான கல்வி, பயிற்சி, பரீட்சை, மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்ய தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்வுவிழைநரொருவரின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், எந்திரவியலாளர்களின் பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தகைமையளிக்கும் வணிகக் கப்பல் கடல்செல் சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். பொறியியலாளர்களின் பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கைக் கடற்படை கப்பல்களில் புரியப்பட்ட கடற்சேவை 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களின் காலத்திற்குக்காலம் ஆளமர்த்தப்படாத எந்திர அறையொன்றில் பெயர்குறிக்கப்பட்ட கடமை பொறியியலாளராக அல்லது ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையில் பொறியியல் காவல் ஒன்றில் பொறுப்பதிகாரியொருவரின் பரீட்சைக்கான அங்கீகரிக்கப்பட்ட கடற்சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற கரையோரத்தை அண்மித்த பயணங்களுக்கான தகுதிச் சான்றிதழ்களை வைத்திருப்பவராக வர உட்கருதுகின்ற கடல்சார் பொறியியல் கிளையின் இலங்கை கடற்படையின் எந்திர அறை நுணுக்க வேலைத்திறனுடையவர்கள் மற்றும் சிறு அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட இயைபான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டை பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்வுவிழைநரொருவரின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், பொறியியலாளர்களின் பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறாக தகைமையளிக்கும் வணிகக் கப்பல் கடல்செல் சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். பொறியியலாளர்களின் பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கைக் கடற்படை கப்பல்களில் புரியப்படும் கடற்சேவை 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் காலத்திற்குக்காலம் ஆளமர்த்தப்படாத எந்திர

அறையொன்றில் பெயர்குறிக்கப்பட்ட கடமைப் பொறியியலாளர் அல்லது ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் பொறியியல் காவலொன்றின் பொறுப்பதிகாரியொருவரின் பரீட்சைக்கான அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கடற்போக்குவரத்து காவல் ஒன்றின் பொறுப்பதிகாரியாகத் தகுதிச் சான்றிதழ்களை வைத்திருப்பவராக வர உட்கருதுகின்ற நிருவாக அலுவலர் கிளையின் இலங்கை கடற்படை அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட தோதான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்வுவிழைநரொருவரின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், கப்பற்றலைவர்கள் மற்றும் கப்பற்றுணைத்தலைவர்களின் சம்பந்தப்பட்ட பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தகைமைபெறும் வணிகக் கப்பல் கடற்செல் சேவை, பயிற்சி, மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். தோதான பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கைக் கடற்படைக் கப்பல்களில் புரியப்பட்ட உந்துகின்ற நேரமானது அங்கீகரிக்கப்பட்ட கடற் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த கப்பல்களில் கடற்போக்குவரத்து காவலொன்றின் பொறுப்பதிகாரியாக, தகுதிச் சான்றிதழ்களை வைத்திருப்பவராக வர உட்கருதுகின்ற நிருவாக அலுவலர் கிளையின் இலங்கைக் கடற்படையின் அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட தோதான கல்வி, பயிற்சி. பரீட்சை மற்றும் மதிப்பீடுகளைப் பூர்த்திசெய்யத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்வுவிழைநரின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், கப்பற்றலைவர்கள் மற்றும் கப்பற்றுணைத்தலைவர்களின் சம்பந்தப்பட்ட பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தகைமைபெறும் வணிகக் கப்பல் கடல்செல் சேவை, பயிற்சி, மற்றும் மதிப்பீடுகளைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். தோதான பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறாக கரையோரத்தை அண்மித்த கடற்பயணங்களில் 500 மொத்தத் தொன்னுக்கும் 3000 மொத்தத் தொன்னுக்கும் இடையிலான இலங்கைக் கடற்படைக் கப்பல்களில் புரியப்பட்ட உந்துகின்ற நேரமானது அங்கீகரிக்கப்பட்ட கடற்சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற 500 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த கப்பல்களின் கடற்போக்குவரத்துக் காவலொன்றின் பொறுப்பதிகாரியாக தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவராக வர உட்கருதுகின்ற நிருவாக அலுவலர் கிளையின் இலங்கைக் கடற்படையின் சிறு அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட இயைபான கல்வி, பயிற்சி, பரீட்சை, மற்றும் மதிப்பீட்டினைப் பூர்த்திசெய்யத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்வுவிழைநரின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், கப்பற்றலைவர்கள் மற்றும் கப்பற்றுணைத்தலைவர்களின் சம்பந்தப்பட்ட பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தகைமைபெறும் வணிகக் கப்பல் கடல்செல் சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். தோதான பிரதம பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான 500 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த இலங்கைக் கடற்படைக் கப்பல்களில் புரியப்பட்ட உந்துகின்ற நேரமானது அங்கீகரிக்கப்பட்ட கடற்சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

20. கப்பற்றள அலுவலர்களுக்கும் கப்பற்றளக் கப்பற்றுணையாளர்களுக்கும் தகைமையளிக்கும் கடல்செல் சேவை என்பது கப்பலில் ஈடுபடுத்தப்பட்ட தேதியிலிருந்து கப்பலிலிருந்து விடுவிக்கப்படும் திகதிவரை கப்பல்களில் செலவழித்த நேரம் என்று பொருளாகும்.

21. (1) வேறுவகையாகக் கூறப்படுமிடத்துத் தவிர, கடல்சார் பொறியியல் அலுவலர்களுக்கும் எந்திர அறைக் கப்பற்றுணையாளர்களுக்கும் தகைமையளிக்கும் கடல்செல் சேவை என்பது கப்பல்களில் ஈடுபடுத்தப்பட்ட திகதியிலிருந்து அவற்றிலிருந்து விடுபடும் திகதிவரை கீழே (2)ஆம் உபஒழுங்குவிதிக்கமைவாக, பூரண பயன்பாட்டிலுள்ள உந்துகின்ற எந்திரத்தொகுதியுடன் அத்துடன் அல்லது துணைநிலை எந்திரத் தொகுதியுடன்கூடிய கப்பல்களில் செலவிடப்பட்ட நேரம் என்று பொருளாகும்.

(2) கணிசமான அளவு காலப்பகுதிகளுக்கு கடற்பயணத்தில் ஈடுபடாத கப்பல்களில் பகுதியளவிலான அல்லது பூரண சேவை புரியப்பட்டுள்ளவிடத்து கடற்பயணத்தில் ஈடுபடாத உண்மையான நாட்களை நேரத்தில் கூறும் கப்பற்றலைவரிடமிருந்து பெறப்பட்ட கூற்று காண்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் தகைமையளிக்கும் கடல்செல் சேவை, கடற்பயணத்தில் ஈடுபடாத உண்மையாகச் செலவிடப்பட்ட நாட்களின் தொகையில் ஒன்றரை மடங்கு, தகைமையளிக்கும் சேவைக்காலப்பகுதியாகக் கணிக்கப்படலாம். எவ்விடயத்திலும் சம்பந்தப்பட்ட காலப்பகுதியின்போது கப்பலில் செலவிடப்பட்ட உண்மையான நேரத்தை அது விஞ்சுதலாகாது.

(3) பாரம்பரிய காவல் காத்தற் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட கப்பல்கள் தவிர்ந்த ஏனைய கப்பல்களில் வேலை நடைமுறைகளில் தொழிலுக்கமர்த்தப்பட்ட பொறியியல் அலுவலர்களால் புரியப்பட்ட கடல்செல் சேவை, அத்தகைய வேலை நடைமுறைகள் சமமான அனுபவத்தைக் கொடுக்கும் என சம்பந்தப்பட்ட பிரதம பரீட்சகர் திருப்தியடைந்தால் தகைமையளிக்கும் கடல்செல் சேவையாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

## *பாகம் XI*

### ***பரீட்சைகள்***

*22. (1) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் தகைமைச் சான்றிதழுக்கான அல்லது புறக்குறிப்புப் பெறுவதற்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் அத்தகைய சான்றிதழ் அல்லது புறக்குறிப்பு வழங்கப்படுவதற்குத் தேவைப்படும் தகைமை அளவை அவர் எய்தியுள்ளார் என எழுத்திலான அல்லது வாய்மூலமான அல்லது எழுத்திலும் வாய்மூலமுமான பரீட்சையில் பிரதம பரீட்சகர்களைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.*

*(2) ஆதாரப்படுத்தும் ஆவணங்களுடன் தகுதிச் சான்றிதழ்கள் மற்றும் புறக்குறிப்புகளுக்கான பரீட்சைக்கான சகல விண்ணப்பங்களும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு தேர்வுவிழைநரும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்தவேண்டும். இக்கட்டணம் காலத்திற்குக்காலமும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையிலும் மீளாய்வு செய்யப்படலாம். பரீட்சைக்கான தகவுத் தேவைப்பாடுகள் எல்லாவற்றையும் விண்ணப்பகாரர் பூர்த்திசெய்தால், தகவுபற்றிய அறிவித்தலொன்று வழங்கப்படுதல் வேண்டும். தகவுபற்றிய அறிவித்தல் சொல்லப்பட்ட பரீட்சைக்குப் தேர்வுவிழைநரை அனுமதிப்பதற்கு அதிகாரமளித்தல் வேண்டும்.*

*(3) பணிப்பாளர் தலைமையதிபதி தகவுடைய ஒவ்வொரு தேர்வுவிழைநருக்கும் பரீட்சைத் தேதி மற்றும் இடம் பற்றி எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.*

*(4) பிரதம பரீட்சகர் பரீட்சைக்கான பாடங்களையும் பாடவிதானத்தையும் தீர்மானிக்கலாம். அத்துடன் அவற்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப அமையச் செய்யும் நோக்கத்திற்காக காலத்திற்குக்காலம் மாற்றலாம் அல்லது திருத்தலாம்.*

*(5) பணிப்பாளர் தலைமையதிபதி, பரீட்சைகள் முறையாக நடைபெறுவதற்கு அவசியமான அல்லது உசிதமான அத்தகைய செயல்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுதல் வேண்டும்.*

*(6) தகுதி அல்லது புறக்குறிப்பு தொடர்பிலான மதிப்பீட்டில் சித்தி எய்தத் தவறுகின்ற ஒரு தேர்வுவிழைநருக்கு பிரதம பரீட்சகரின் தற்றுணிபின்பேரில், காலத்தண்டம் வழங்கப்படலாம். இதன்படி மீளப் பரீட்சைக்குத் தோற்றமுன்னதான காலப்பகுதிக்கான கடல்செல் சேவையை முடிக்கவேண்டும் என்ற தேவைப்பாட்டையும் இது உள்ளடக்கலாம்.*

*23. பணிப்பாளர் தலைமையதிபதி, கப்பலின் அளவும் அதன் பயண நிலைமைகளும் 9 (7) மற்றும் 9 (8) ஆம் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளை முழுமையாக ஏற்புடையதாக்குவதை நியாயமற்றதாக்கும் அல்லது செயன்முறைக்கொவ்வாததாக்கும் இயல்பினதானது எனக் கருதினால் அதேநீர்ப்பரப்புக்களில் தொழிற்படக்கூடிய ஏனைய எல்லாக் கப்பல்களினதும் பாதுகாப்பை மனதிற்கொண்டு, சில தேவைப்பாடுகளிலிருந்து அத்தகைய கப்பலில் அல்லது வகுப்பினவான கப்பல்களில் கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள கப்பற்றலைவருக்கும் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கும் அந்த அளவுக்கு விலக்களிக்கலாம்.*

*24. (1) விதிவிலக்கான அவசிய சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி ஆட்களுக்கு, ஆதனத்துக்கு அல்லது சுற்றாடலுக்கு ஆபத்து ஏற்படுத்தமாட்டாதெனின், அவர் எந்தத் தன்மைக்குத் தோதான சான்றிதழ் வைத்திராது இருக்கின்றாரோ, அந்தத் தன்மையில் 6 மாதங்களுக்கு மேற்படாத குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு குறித்துரைக்கப்பட்ட கப்பலில் சேவை புரிவதற்கு பெயர்குறிப்பிடப்பட்ட கடலோடியை அனுமதித்து சமவாயத்தின் VIIIஆம் உறுப்புரைக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி விட்டுவிடுகையொன்றை வழங்கலாம். ஆயின், எவ்வாளுக்கு விட்டுவிடுகை வழங்கப்படவேண்டுமோ அவ்வாள் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படும் முறையில் வெற்றான பதவியைத் திருப்திகரமாக நிரப்புவதற்கு போதிய தகைமை பெற்றவராதல் வேண்டும். எவ்வாறாயினும், தடுக்கொணா வல்இக்கட்டு நிலைமைகளிலும், அப்போது இயன்றளவு மிகக்குறுகிய காலப்பகுதிக்காகவும் மட்டுமேதவிர, கப்பற்றலைவருக்கு அல்லது பிரதம பொறியியலாளருக்கு விட்டுவிடுகைகள் வழங்கப்படுதலாகாது.*

*(2) ஒரு பதவிக்காக வழங்கப்பட்ட ஏதேனும் விட்டுவிடுகை, உடனடியாகக் கீழேயுள்ள, பதவியை நிரப்புவதற்கு முறையாகச் சான்றளிக்கப்பட்ட ஆளொருவருக்கு மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும். கீழேயுள்ள பதவிபற்றிய சான்றுப்படுத்துகை சமவாயத்தினால் தேவைப்படுத்தப்படாதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் எந்த ஆளின் தகைமையும் அனுபவமும் நிரப்பப்படவேண்டிய பதவிக்கான தேவைப்பாடுகளுக்குத் தெளிவாகச் சமமானவையாகவுள்ளதோ அந்த ஆளுக்கு விட்டுவிடுகையொன்று வழங்கப்படலாம்; ஆயின் அத்தகையவோர் ஆள் தோதான சான்றிதழ் எதனையும் வைத்திருக்காவிடின், அத்தகைய விட்டுவிடுகை பாதுகாப்பானமுறையில் வழங்கப்படலாமென்பதை எடுத்துக்காட்டுகின்றவாறு பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்டையொன்றில் சித்தியடைய வேண்டுமென அவர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் மேலதிகமாக,*

பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட பதவி இயன்றளவு விரைவாக தோதான சான்றிதழொன்றை வைத்திருப்பவரினால் நிரப்பப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

25. (1) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் அத்தியாயம் VI தவிர்ந்த சமவாயத்தின் ஏதேனும் அத்தியாயத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஒழுங்கு விதி V/3 ஏற்றங்கீகரிக்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கப்பற்றலைவர், அலுவலர் மற்றும் வானொலி இயக்குநர் ஒவ்வொருவரும் அவர் கடலில் கடமைபுரிந்துகொண்டிருப்பவராக அல்லது கரையில் ஒரு காலப்பகுதியின் பின்னர் கடலுக்குத் திரும்ப உட்கருதுகின்றவராகவிருப்பின் அவர் ஐந்து ஆண்டுகளை விஞ்சாத கால இடைவெளிகளில், கடற்செல் சேவைக்கு தகைமை பெறுவதைத் தொடரும் நோக்கில் பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) 36ஆம் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்படும் மருத்துவத் தகுதித் தராதரங்களை அடைவதற்கும்;

(ஆ) 26ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க தொடர்ச்சியான உயர்தொழில் தகுதியை நிலைநாட்டுவதற்கும்.

(2) கப்பற்றலைவர், அலுவலர் மற்றும் வானொலி இயக்குநர் ஒவ்வொருவரும், அவற்றுக்கான விசேட பயிற்சித் தேவைப்பாடுகள் சர்வதேசரீதியாக உடன்பட்டுக் கொள்ளப்பட்டுள்ள கப்பல்களில் கடல்செல் சேவையைத் தொடருவதற்கு அங்கீகரிக்கப்பட்ட இயைபான பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(3) கப்பற்றலைவர் மற்றும் அலுவலர் ஒவ்வொருவரும், தாங்கிக் கப்பல்களில் கடல்செல் சேவையைத் தொடருவதற்கு (1)ஆம் உப ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளை அடைதல் வேண்டுமெனப்துடன் 05 ஆண்டுகளை விஞ்சாத காலஇடைவெளிகளில் 26 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் உபஒழுங்குவிதிக்கிணங்க தாங்கிக் கப்பல்களுக்கான தொடர்ச்சியான உயர்தொழில் தகுதியை நிலைநாட்டுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) ஜிஎம்டிஎஸ்எஸ் தகுதிச் சான்றிதழ் 05 ஆண்டுக் கால இடைவெளிகளில் மீளச் செல்லுபடியாக்கப்படுதல் வேண்டும்; ஆயின் வானொலி இயக்குநர் மீளச் செல்லுபடியாக்கல் திகதிக்கு முற்போந்த 05 ஆண்டுகளினுள் இயைபான தன்மையில் 12 மாத கடற்சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) 1998 ஆம் ஆண்டு யூலை 17ஆந் திகதிய 1036/21ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1998 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள் ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது மீளச் செல்லுபடியாக்கப்பட்ட கப்பற்றலைவராக, அலுவலராக, வானொலி இயக்குநராக தகுதிச் சான்றிதழ்களை மற்றும் புறக்குறிப்பிடுதல்களை வைத்திருக்கும் எல்லோரும் ஒவ்வொரு விடயத்தினதும் சூழ்நிலைகளைக் கவனத்துக்கெடுத்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தோதான நினைவூட்டும் மற்றும் நாளதுவரையாக்கும் நெறியை அல்லது மதிப்பீட்டை செய்யத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்மூலம் அவர்கள் இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ளவாறாகத் தோதான சான்றிதழுக்கென குறித்துரைக்கப்படும் தகுதி மட்டமொன்றை அடைந்திருப்பதாக பணிப்பாளர் தலைமையதிபதியைத் திருப்தி செய்தலும் வேண்டும். சான்றிதழ் வைத்திருப்பவர் சான்றிதழளிக்கப்பட்ட தன்மையொன்றில் கடல்செல் கப்பல்களில் தொடர்ந்து சேவை புரிய இயலுமானவாகவிருக்க விரும்பினால் 2016, திசெம்பர் 31ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சான்றிதழ்கள் அல்லது புறக்குறிப்பிடுதல்களை மீளச் செல்லுபடியாக்குவதற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(6) சமவாயத்திற்கிணங்க இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது மீளச் செல்லுபடியாக்கப்பட்ட கப்பற்றலைவராக, அலுவலராக அல்லது வானொலி இயக்குநராக தகுதிச் சான்றிதழ்கள் மற்றும் புறக்குறிப்பிடுதல்கள் எல்லாம் 5 ஆண்டு காலப்பகுதிக்கு மட்டுமே செல்லுபடியானதாதல் வேண்டுமென்பதுடன், வைத்திருப்பவர் கடல்செல் கப்பல்களில் சேவை புரியத் தொடருவாராயின் மீள செல்லுபடியாக்குதலுக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். தகுதிச் சான்றிதழ்கள் காலாவதித் தேதிக்கு முன்னதாக 6 மாதங்களினுள் மீளச் செல்லுபடியாக்கப்படலாம்; அத்துடன் அத்தகைய விடயங்களில் சான்றிதழின் செல்லுபடியாந்தன்மைத் திகதியின் அல்லது செல்லுபடியாந்தன்மையின் நீடிப்புத் திகதியின் ஐந்தாவது நிறைவாண்டு வரை சான்றிதழ் மீளச் செல்லுபடியாக்கப்படலாம்.

(7) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தேர்ச்சிச் சான்றிதழ்களை வைத்திருப்போர், ஒவ்வோர் 5 ஆண்டுகளுக்கும், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் அந்தந்த அட்டவணைகளின் நிரை 1 இல் நிரற்படுத்தப்பட்ட பணிகளையும், கடமைகளையும், பொறுப்புக்களையும் பொறுப்பேற்பதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட மீளச்செல்லுபடியாக்கல் அல்லது நினைவூட்டுதல் மற்றும் தரமுயர்த்துதல் பயிற்சிக்கு உட்படுத்தப்படுவதற்கும், தேவைப்பட்ட தகுதி நியமங்களைத் திருப்தி செய்வதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(8) ஒழுங்குவிதி 28, உப ஒழுங்குவிதி (6), (7), (11), (13) மற்றும் (14) என்பவற்றின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட தேர்ச்சிகள் பற்றிய சான்றிதழ்கள் மேலேயுள்ள உப ஒழுங்குவிதி (7) இலிருந்து விலக்களிக்கப்படுகின்றன.

*(9) 26 ஆம் ஒழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) (அ) இனூடாக உயர்தொழில்சார் தகுதியைப் பேணியிராதவர்களும் கடலுக்குத் திரும்புவதற்கு விரும்புகின்றவர்களுமான கடலோடிகள் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட தேவைப்பட்ட எல்லாச் சான்றிதழ்களையும் மீளச்செல்லுபடியாக்குதல் வேண்டும்.*

*(10) 2017 சனவரி 1 ஆந் திகதிவரை, பணிப்பாளர் தலைமையதிபதி, 2013, யூலை 1 ஆந்திகதிக்குமுன்னர் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறி என்பவற்றை ஆரம்பித்த அக்கடலோடிகள் தொடர்பில் 1995 ஆம் ஆண்டின் எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க சான்றிதழ்களைத் தொடர்ந்து வழங்கலாம், ஏற்றங்கீகரிக்கலாம் மற்றும் புறக்குறிப்பிடலாம்.*

*26. (1) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் I/IIஆம் ஒழுங்குவிதியின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக தொடரப்பட்ட உயர்தொழில்சார் தகுதியானது பின்வருவனவற்றினால் நிலைநாட்டப்படுதல் வேண்டும்:-*

*(அ) (i) முற்போந்த 05 ஆண்டுக் காலப்பகுதியின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது 12 மாதக் காலப்பகுதியொன்றுக்கு; அல்லது*

*(ii) மீளச் செல்லுபடியாக்குதலுக்கு உடன் முன்னதாக 06 மாத காலப்பகுதியின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது 3 மாத காலப்பகுதியொன்றுக்கு வைத்திருக்கப்படும் சான்றிதழுக்குத் தோதான பணிகளைப் புரிந்து அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவைமூலம்; அல்லது*

*(ஆ) பந்தி (அ)(i)இல் தேவைப்படுத்தப்படும் கடல்செல் சேவைக்குச் சமமாக இருக்கின்றனவெனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கருதப்படும் பணிகளைப் புரிந்திருப்பதன்மூலம்; அல்லது*

*(இ) அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையொன்றில் சித்தியடைவதன்மூலம்; அல்லது*

*(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறி அல்லது நெறிகளை வெற்றிகரமாக முடிப்பதன்மூலம்; அல்லது*

*(உ) அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையை முடித்துக்கொண்டு மிகையான தன்மையொன்றில் அல்லது எந்தப் பதவி வரிசைக்குச் சான்றிதழ் செல்லுபடியானதோ அந்தப் பதவிவரிசையை ஏற்பதற்கு உடன்முன்னதாக, வைத்திருக்கப்படும் சான்றிதழ் எந்தப் பதவிவரிசைக்குச் செல்லுபடியானதாக உள்ளதோ அந்தப் பதவிவரிசையிலும் பார்க்கக் குறைவான பதவிவரிசையிலுள்ள 3 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு, அலுவலர் வைத்திருக்கப்படும் சான்றிதழுக்குத் தோதான பணிகளைப் புரிவதன்மூலம்.*

*(2) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் I/11 ஆம் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்படும் நினைவூட்டும் மற்றும் நாளதுவரையாக்கும் பயிற்சிநெறிகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், கடலில் உயிர் பாதுகாப்பு, கடல்சார் சூழலின் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் சம்பந்தப்படும் இயைபான தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்குவிதிகளிலான மாற்றங்களை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், சம்பந்தப்பட்ட தகுதி நியமத்தின் ஏதேனும் நாளதுவரையாக்கலைக் புதுப்பித்தலைக் கவனத்திற்கொள்ளூதலும் வேண்டும்.*

*(3) பின்வருவனவற்றின்மூலம் எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் ஒழுங்குவிதி I/11 3ஆம் பந்தியின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக தாங்கிக் கப்பல்களுக்கான தொடர்ச்சியான உயர்தொழில்சார் தகுதியானது நிலைநாட்டப்படுதல் வேண்டும்:-*

*(அ) முற்போந்த 05 ஆண்டுகளின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது 3 மாத காலப்பகுதியொன்றுக்கு, வைத்திருக்கப்படும் தாங்கிக் கப்பல் சான்றிதழ் அல்லது புறக்குறிப்பிடுதலுக்குத் தோதான கடமைகளைப் புரிவதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; அல்லது*

*(ஆ) அங்கீகரிக்கப்பட்ட இயைபான பயிற்சிநெறியை அல்லது நெறிகளை வெற்றிகரமாக முடிப்பதன்மூலம்.*

*27. எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-I/12 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள செயல் நிறைவேற்றுகைத் தராதரங்கள் மற்றும் வேறு ஏற்பாடுகள் அத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் சான்றிதழுக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பாகம் ஏ இல் விதித்துரைக்கப் பட்டுள்ளவாறான அத்தகைய வேறு தேவைப்பாடுகள் பின்வருவன தொடர்பில் இணங்கியொழுகப்படுதல் வேண்டும்:-*

*(அ) எல்லாக் கட்டாயமான தூண்டல் அடிப்படையிலான பயிற்சி;*

*(ஆ) தூண்டலின்மூலம் நிறைவேற்றப்படும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பாகம் ஏ இனால் தேவைப்படுத்தப்படும் தகுதியின் ஏதேனும் மதிப்பீடு; அத்துடன்*

(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பாகம் V இனால் தேவைப்படுத்தப்படும் தொடர்ச்சியான தேர்ச்சிக்கான தூண்டலின் மூலமான ஏதேனும் எடுத்துக்காட்டு.

பாகம் XII

**எல்லாக் கடலோடிகளுக்குமான பாதுகாப்பு பரிச்சயமாதல், அடிப்படைப் பயிற்சி மற்றும் அறிவுறுத்தலுக்கான ஆகக்குறைந்த கட்டாய தேவைப்பாடுகள்**

28. (1) கப்பல் கடமைகள் குறித்தளிக்கப்படுமுன்னர் பயணிகள் தவிர்ந்த கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது ஈடுபடுத்தப்பட்ட எல்லா ஆட்களும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1 ஆம் பிரிவுக்கிணங்க பரிச்சயப்படுத்தப்படுதல் மற்றும் அடிப்படைப் பாதுகாப்புப் பயிற்சி அல்லது அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; அத்துடன் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தோதான தகுதி நியமத்தையும் எய்துதல் வேண்டும். பரிச்சயப்படுத்தப்படுதலிலும் அடிப்படைப் பாதுகாப்புப் பயிற்சியிலும் தோதான தகுதிநியமத்தை எய்தியுள்ள ஆட்கள் அனைவரதும் பதிவேடொன்று கலத்தின் கப்பற்றலைவராலும் கம்பெனியினாலும் பேணப்படுதல் வேண்டும்.

(2) கப்பலின் தொழிற்பாட்டில் பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்பு அல்லது தீழ்ப்புத் தடுப்புக் கடமைகளைப் புரியவென கப்பலின் நிரப்புகோணத்தின் பாகமாகக் கப்பலின் அலுவல்களை நடாத்துவதற்கு ஏதேனும் தன்மையில் கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ள கடலோடிகள், தனிப்பட்ட உயிர்க்காப்புநுட்பங்கள் (எஸ்ரிசீடபிள்யூ கோவையில் பட்டியல் ஏ-VI/1-1), தீ தடுப்பு, எதிர்ப்பு (எஸ்ரிசீடபிள்யூ கோவையின் பட்டியல் ஏ-VI/1-2), ஆரம்ப முதலுதவி (எஸ்ரிசீடபிள்யூ கோவையின் பட்டியல் ஏ-VI/1-3), தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகள் (எஸ்ரிசீடபிள்யூ கோவையில் ஏ-VI/1-4) இல் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி பெறுதல் வேண்டும். மேற்படி கற்கைநெறிகளின் முடிவில் பணிப்பாளர் தலைமையதிபதி, அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சிச் சான்றிதழ் வழங்குதல் வேண்டும்.

(3) கீழே உபஒழுங்குவிதிகள் (4) முதல் (12) வரையானவற்றுக்கிணங்க (6), (7) மற்றும் (11) என்னும் உபஒழுங்குவிதிகள் நீங்கலாக) தகைமைபெற்ற கடலோடிகள், ஒவ்வோர் 5 ஆண்டுகளுக்கும், வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட மீள்செல்லுபடியாக்கல் அல்லது நினைவூட்டுதல் மற்றும் தரமுயர்த்துதல் பயிற்சிக்கு உட்படுவதற்கும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் அந்தந்த அட்டவணைகளின் நிரை I இல் நிரற்படுத்தப்பட்ட பணிகளையும், கடமைகளையும், பொறுப்புக்களையும் பொறுப்பேற்பதற்குத் தேவைப்பட்ட தகுதி நியமங்களைத் திருப்திசெய்வதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) தனிப்பட்ட உயிர்க்காப்பு நுட்பங்களில் தேர்ச்சிச் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்–

(அ) தனிப்பட்ட உயிர்க்காப்பு நுட்பங்களில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியைப் பின்பற்றுதல் வேண்டும்; அத்துடன்
(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-1 ஆம் அட்டவணையில் தரப்பட்ட தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(5) தீ தடுப்பு மற்றும் தீ எதிர்ப்பு தேர்ச்சிச் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்–

(அ) தீ தடுப்பு மற்றும் தீ எதிர்ப்பில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியைப் பின்பற்றுதல் வேண்டும்; அத்துடன்
(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-2 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(6) ஆரம்ப முதலுதவியில் தேர்ச்சிச் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்–

(அ) ஆரம்ப முதலுதவியில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியைப் பின்பற்றுதல் வேண்டும்; அத்துடன்
(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(7) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகளில் தேர்ச்சிச் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்–

(அ) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புக்களில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியைப் பின்பற்றுதல் வேண்டும்; அத்துடன்
(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(8) (அ) விரைவு மீட்பு வள்ளங்கள் தவிர உயிர்க்காப்புக்கலன்கள் மற்றும் மீட்பு வள்ளங்களில் தேர்ச்சிச் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்:-

(அ) பயிற்சிநெறி முடிவடையும் தேதியன்று (18) வயதுக்குக் குறையாதவராயிருத்தல் வேண்டும்;

(ஆ) 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடலுக்குச் செல்லுமுன்னதான பயிற்சிநெறியைப் பின்பற்றியிருப்பதுடன் 6 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) விரைவு மீட்பு வள்ளங்கள் தவிர உயிர்வாழ்வுப் படகுகள் மற்றும் மீட்புக் படகுகளில் அங்கீகரிக்கப்பட்ட தேர்ச்சிப் பயிற்சிநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-VI/2, 1 முதல் 4 வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(9) விரைவு மீட்பு வள்ளங்களில் தேர்ச்சிச் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்:-

(அ) விரைவுமீட்பு வள்ளங்கள் தவிர்ந்த உயிர்வாழ்வுப்படகுகள் மற்றும் மீட்புப் படகுகளில் தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) விரைவு மீட்பு வள்ளங்களில் தேர்ச்சி அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2 ஆம் பிரிவில் 7 முதல் 10 வரையான பந்திகளில் தரப்பட்டுள்ள விரைவுமீட்பு வள்ளங்களில் தேர்ச்சிச் சான்றிதழுக்கான தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(10) (அ) தீ எதிர்ப்புத் தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்த பெயர்குறிக்கப்பட்ட கடலோடிகள் முற்கூட்டிய தீ எதிர்ப்பில் தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) முற்கூட்டிய தீ எதிர்ப்பில் தேர்ச்சி சான்றிதழுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்:-

(i) முற்கூட்டிய தீ எதிர்ப்பில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியினைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/3ஆம் பிரிவில் பந்தி 1 முதல் 4 வரையில் குறித்துரைக்கப்படும் தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(11) (அ) கப்பலில் மருத்துவ முதலுதவியை வழங்குவதற்கு பெயர்குறிக்கப்பட்ட கடலோடிகள் மருத்துவ முதலுதவியில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மருத்துவ முதலுதவியில் தேர்ச்சிச் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்:-

(i) மருத்துவ முதலுதவியில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4 ஆம் பிரிவில் 1 முதல் 3 வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(12) (அ) கப்பலில் மருத்துவக் கவனிப்பைப் பொறுப்பெடுப்பதற்கு பெயர் குறிக்கப்பட்ட கடலோடிகள் மருத்துவக் கவனிப்பில் தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) மருத்துவக் கவனிப்பில் தேர்ச்சி சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்:-

(i) மருத்துவக் கவனிப்பில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4 ஆம் பிரிவில் 4 முதல் 6 வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்படும் தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(13) (அ) கப்பல் பாதுகாப்பு அலுவலர்களென பதவி பெயர்குறிக்கப்பட்ட கடலோடிகள் கப்பல் பாதுகாப்பு அலுவலருக்கான தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) கப்பல் பாதுகாப்பு அலுவலருக்கான தேர்ச்சிச் சான்றிதழொன்றுக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும்:-

(i) 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையை அல்லது தோதான கடல்செல் சேவை மற்றும் கப்பல் தொழிற்பாடுகளில் அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) கப்பல் பாதுகாப்பில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(iii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/5 ஆம் பிரிவில் 1 முதல் 4 வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்படும் தகுதி நியமத்தை அடைதல் வேண்டும்.

(14) (அ) கப்பலில் கடமைகள் குறித்தளிக்கப்படுவதற்கு முன்னதாக, பயணிகள் தவிர்ந்த ஐஎஸ்பிஎஸ் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தேவைப்படுத்தப்படும் கடற்செல் கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ள எல்லா ஆட்களும் பின்வருவனவற்றுக்கு இயலுமானதாகவிருப்பதற்கு எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பாகம் "ஆ" வில் தரப்பட்டுள்ள வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கெடுத்து, அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்புபட்ட பரிச்சயப்படுத்தப்படுதல் பயிற்சியைப் பெறுதல் வேண்டும்:-

(i) கடற்கொள்ளை அல்லது ஆயுதம் தாங்கிய கொள்ளை அச்சுறுத்தல் அல்லது தாக்குதல் உட்பட, பாதுகாப்பு சம்பவமொன்றை அறிக்கையிடுதல்;

(ii) அவர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலொன்றை அடையாளங்காணும்போது பின்பற்றவேண்டிய நடவடிக்கைமுறைகளை அறிந்திருத்தல்; அத்துடன்

(iii) பாதுகாப்பு தொடர்புபட்ட அவசர மற்றும் எதிர்பாரா நிகழ்வு நடவடிக்கைமுறைகளில் பங்கெடுத்தல்.

(ஆ) கடற்செல் கப்பலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பாதுகாப்பு கடமைகளுடனான பெயர்குறிக்கப்பட்ட கடலோடிகள் அத்தகைய கடமைகள் குறித்தளிக்கப்படுவதற்கு முன்னதாக, எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஆ என்னும் பாகத்தில் தரப்பட்டுள்ள வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கெடுத்து தமது குறித்தளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புக்களில் பாதுகாப்பு தொடர்புபட்ட பரிச்சயப்படுத்தப்படுதல் பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

(இ) பாதுகாப்பு தொடர்புபட்ட பரிச்சயப்படுத்தப்படுதல் பயிற்சி, கப்பல் பாதுகாப்பு அலுவலரினால் அல்லது அதற்குச் சமமான தகைமைபெற்ற ஆளினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்புக் கடமைகள் இன்றி கப்பலின் நிரப்பு கோணத்தின் பாகமாக அக்கப்பலின் அலுவல்கள்மீது ஐஎஸ்பிஎஸ் கோவையின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தேவைப்படுத்தப்படுகின்ற கப்பலில் ஏதேனும் தன்மையில் தொழிலுக்மர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ள கடலோடிகள் ஏதேனும் கப்பலில் கடமைகள் குறித்தளிக்கப்பட முன்னதாக :-

(i) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-1ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாக பாதுகாப்பு விழிப்புணர்வில் தோதான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அல்லது அறிவுறுத்தலைப் பெறுதல் வேண்டும்;

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-1 ஆம் அட்டவணையின் I ஆம் நிரையில் நிரலிலிடப்பட்டுள்ள பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்பதற்கு தேவைப்படுத்தப்படும் தகுதி நியமத்தை எய்தியிருப்பதாக சான்று வழங்கும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:

(அ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-1 ஆம் அட்டவணையின் 3 ஆம் மற்றும் 4 ஆம் நிரைகளில் வெளிப்படுத்தப்பட்ட தகுதியை மதிப்பிடுகின்றமைக்கான முறைகள் மற்றும் கட்டளைகளுக்கிணங்க தகுதியை எடுத்துக்காட்டுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-1 ஆம் அட்டவணையின் 2ஆம் நிரையில் நிரலிலிடப்பட்ட விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக பரீட்சை அல்லது தொடர்ச்சியான மதிப்பீடுமூலம்.

(உ) கடற்கொள்ளைக்கெதிரானவை மற்றும் ஆயுதந்தாங்கிய கொள்ளை தொடர்புபட்ட செயற்பாடுகளுக்கு எதிரானவை உட்பட பாதுகாப்புக் கடமைகளைப் புரிவதற்கு பெயர்குறிக்கப்பட்ட கடலோடி ஒவ்வொருவரிடமிருந்தும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-2ஆம் அட்டவணையின் I ஆம் நிரையில் நிரலிலிடப்பட்ட பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்கத் தகுதி எடுத்துக்காட்டுகை தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஊ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-2ஆம் அட்டவணையின் 2ஆம் நிரையில் நிரலிலிடப்பட்ட விடயங்களின் அறிவு மட்டம், கடற்கொள்ளைக்கு எதிரான மற்றும் ஆயுதந்தாங்கிய கொள்ளை தொடர்புபட்ட செயற்பாடுகளுக்கு எதிரானவை உட்பட பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்புக் கடமைகளைக் கப்பலில் புரிவதற்கு ஒவ்வொரு தேர்வுவிழைநரையும் இயலச்செய்யப் போதுமானதாக இருத்தல் வேண்டும்.

(எ) சான்றளிப்புக்கான தேர்வுவிழைநர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றினூடாக தகுதி பெறத் தேவைப்படுத்தப்படும் நியமத்தை எய்தியிருப்பதாக சான்று வழங்கும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:

(i) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-2 ஆம் அட்டவணையின் 3ஆம் மற்றும் 4ஆம் நிரைகளில் வெளிப்படுத்தப்பட்ட தகுதியை எடுத்துக்காட்டுகின்ற முறைகள் மற்றும் கட்டளைக்கற்களுக்கிணங்க அவ்வட்டவணையின் I ஆம் நிரலில் நிரலிடப்பட்ட பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்கத் தகுதியை எடுத்துக்காட்டுதல்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-2 ஆம் அட்டவணையின் 2ஆம் நிரையில் தரப்பட்டுள்ள விடயப் பொருட்களை உள்ளடக்குகின்ற, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றின் பாகமாகப் பரீட்சை அல்லது தொடர்ச்சியான மதிப்பீடு.

(ஏ) விதிவிலக்கான அவசியச் சூழ்நிலைகளில், கப்பலிலான பாதுகாப்பு தொடர்புபட்ட கடமைகள், பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்புபட்ட கடமைகளைப் புரிவதற்குத் தகைமைபெற்ற ஆளினால் பொறுப்பேற்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டு அத்தகையவோர் ஆள் தற்காலிகமாகக் கிடைக்கக்கூடியவராக இல்லாதிருக்கும்போது, பணிப்பாளர் தலைமையதிபதி, பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்புக் கடமைகள் இல்லாத கடலோடியை, அடுத்த துறைமுகத்தைச் சேரும்வரை அல்லது 30 நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அதுவரை, அத்தகைய கடமைகளைப் புரிவதற்கு அனுமதிக்கலாம்; ஆயின், அத்தகைய ஆள் கப்பலின் பாதுகாப்புத்திட்டத்தைப் புரிந்துகொண்டவராகவிருத்தல் வேண்டும்.

### பாகம் XIII

### ஏனைய நாடுகளினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களை ஏற்றங்கீகரித்தல்

29. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் பந்தி 7, ஒழுங்குவிதி I/2 க்கிணங்கவுள்ள புறக்குறிப்பின்மூலம், இன்னொரு திறத்தவரினால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் கப்பற்றலைவருக்கு, அலுவலருக்கு அல்லது வானொலி இயக்குநருக்கு வழங்கப்பட்டவொரு சான்றிதழை ஏற்றங்கீகரிப்பதற்கென, இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவென்று உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன்:

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி, வசதிகளையும் நடவடிக்கைமுறைகளையும் சோதனையிடுதலை உள்ளடக்கக்கூடிய, அத்திறத்தவரை மதிப்பீடு செய்வதன்மூலம், தகுதி நியமங்கள், பயிற்சி மற்றும் சான்றளிப்பு அத்துடன் தர நியமங்கள் தொடர்பான சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் முழுமையாக இணங்கியொழுகப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தியிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) சமவாயத்திற்கு இணங்கியொழுக வழங்கப்பட்ட பயிற்சி மற்றும் சான்றளிப்புக்கான ஒழுங்கேற்பாடுகளிலான ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் பற்றி உடனடி அறிவிப்பு கொடுக்கப்படுமெனச் சம்பந்தப்பட்ட திறத்தவருடன் பொறுப்பேற்பொன்று உடன்பட்டுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) எஸ்ரிசிடபிள்யூ கோவையில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, முகாமை மட்டத்தில் எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் ஒழுங்குவிதிகள் II/2, III/2 அல்லது III/3 என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட, அல்லது VII/1 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களை ஏற்றங்கீகாரத்துக்காக முன்வைக்கின்ற கடலோடிகள், அவர்கள் புரிவதற்கு அனுமதிக்கப்படுகின்ற பணிகளுக்கு இயைபான இலங்கையின் கடலோர சட்டவாக்கம் பற்றித் தோதான அறிவைக் கொண்டுள்ளனரென உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகள் நிலைநாட்டப்படுதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட தகவலும் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளும், எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் ஒழுங்குவிதி 1/7 இன் தேவைப்பாடுகளுக்கிசைந்தொழுக பணிப்பாளர் தலைமையதிபதியினால் சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பின் செயலாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) திறத்தவரல்லாத ஒருவரினால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றங்கீகரிக்கப்படுதலாகாது.

(5) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் ஒழுங்குவிதி I/2, பந்தி 7 இன் தேவைப்பாடு எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, சூழ்நிலைகள் தேவைப்படுத்தினால் 1ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, அத்திறத்தவரின் கப்பல்களில் பயன்படுத்தப்படுவதற்காக ஆனால் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பல்களிலான சேவைக்காக அதனைத்

தோதாக்கும் வகையில் இன்னமும் புறக்குறிப்பிடப்படாத இன்னொரு திறத்தவரினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வழங்கப்பட்டு புறக்குறிப்பிடப்பட்ட தோதான, செல்லுபடியான சான்றிதழை வைத்திருக்கையில், அதன் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பலில் மூன்றுமாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குச் சேவையாற்றுவதற்குக் கடலோடியொருவருக்கு அனுமதியளிக்கலாம்; ஆயின், புறக்குறிப்புக்கான விண்ணப்பம் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமைக்கான ஆவணமுறையான எண்பிப்பு உடனடியாகக் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும்.

(6) இன்னொரு திறத்தவரினால் வழங்கப்பட்ட சான்றிதழை ஏற்றங்கீகரித்து, அல்லது ஏற்றங்கீகாரத்தை அத்தாட்சிப்படுத்தி இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு நிருவாகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களும் புறக்குறிப்புகளும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் மேலதிக ஏற்றங்கீகாரத்துக்கான அடிப்படையாகப் பயன்படுத்தப்படுதலாகாது.

பாகம் XIV

**பாகம் நானாவிதமானவை**

30. (1) பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்:

(அ) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, கடலோடிகளின் பயிற்சியும் மதிப்பீடும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-1/6 இன் ஏற்பாடுகளுக்கிணங்க நிருவகிக்கப்படுதலும், மேற்பார்வை செய்யப்படுதலும், கண்காணிக்கப்படுதலும்; அத்துடன்

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, கடலோடிகளின் பயிற்சிக்கும் தகுதி மதிப்பீட்டுக்கும் பொறுப்பாகவுள்ளவர்கள், உட்படுத்தப்பட்டுள்ள பயிற்சியின் அல்லது மதிப்பீட்டின் வகைக்கும் மட்டத்துக்கும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-1/6 இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தோதானமுறையில் தகைமைபெற்றிருத்தலும்; அத்துடன்

(இ) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, கடலோடிகளின் பயிற்சியும் மதிப்பீடும், அப்பயிற்சியும் மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்ட கடலோரப் பயிற்சி நிறுவகமொன்றினால் (AMTI) நடாத்தப்பட்டிருப்பின் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுதலும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத புறநிலையான சான்றை அவர் கண்டால், ஏதேனும் கடலோரப் பயிற்சி நிறுவகத்துக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை இடைநிறுத்துவதற்கான அல்லது மீளப்பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அங்கீகரிக்கப்பட்ட கடலோரப் பயிற்சி நிறுவகங்கள்:

(அ) பரீட்சைக்கான செயல்முறைக் கோவையில் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளையும் வழிகாட்டுநெறிகளையும் பின்பற்றி, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துமுன்னர் அங்கீகாரம் பெறுதல் வேண்டும்;

(ஆ) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டாலொழிய, ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்துக்கான குறைந்தபட்ச நியமங்களாக இயைபான சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பு மாதிரிக் கற்கைநெறியில் தரப்பட்டுள்ள நியமங்களைப் பேணுதல் வேண்டும்;

(இ) போதனையாளர், மேற்பார்வையாளர் மற்றும் மதிப்பீட்டாளர்களின் தகைமைக்காகப் பரீட்சைக்கான செயல்முறைக் கோவையில் தரப்பட்டுள்ள குறைந்தபட்ச நியமங்களைப் பேணுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) சான்றிதழின் அந்தஸ்துடன் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் தொடரிணைச் சரிபார்த்தலுக்கான வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அங்கீகரிக்கப்பட்ட எல்லாப் பயிற்சி நிறுவகங்களும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறான உபகரணங்கள் மற்றும் வசதிகள் தொடர்பிலான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) எல்லா அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்களும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவகமொன்றாகப் பணியாற்றுவதற்கு ஆண்டு உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் இலவசக் கல்வியை வழங்குகின்ற பயிற்சி நிறுவகங்கள் உரிமக் கட்டணக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(6) பயிற்சி நிறுவகங்கள் சமவாயத்துடனும் மற்றும் ஏற்புடையனவான ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களுடனும் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துவதனைச் சரிபார்ப்பதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் குழுவொன்றினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

31. (1) பணிப்பாளர் தலைமையதிபதி எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-ஐ/14ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கப்பல்களைத் தொழிற்படுத்துகின்ற அல்லது இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க கப்பல்களில் சேவைபுரிவதற்கென கடலோடிகளைக் குறித்தளிப்பதற்கெனப் பொறுப்பான கம்பெனி ஒவ்வொன்றையும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு ஒவ்வொன்றையும் தேவைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) அதன் கப்பல்களுக்கு குறித்தளிக்கப்பட்ட கடலோடி ஒவ்வொருவரும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பிடப்பட்ட இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தோதான சான்றிதழை வைத்திருக்கவேண்டும்;

(ஆ) கப்பல்கள் 2016ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (குறைந்தபட்ச பாதுகாப்பான ஆளமர்த்தல்) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட ஆளமர்த்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க ஆளமர்த்தப்படுதல் வேண்டும்;

(இ) அதன் கப்பல்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள சகல கடலோடிகளுடனும் தொடர்புபட்ட இயைபான ஆவணமும் தரவும் பேணப்படுவதோடு துரிதமாகக் கிடைக்கக்கூடியதாதலும் வேண்டும். அத்துடன் அவர்களது அனுபவம், பயிற்சி, மருத்துவத் தகைமை, குறித்தளிக்கப்பட்ட கடமைகளிலான தகுதி என்பன தொடர்பான ஆவணங்களுக்கும் தரவுகளுக்கும் வரையறுக்கப்படாமல், அவை சேர்க்கப்படவேண்டும்;

(ஈ) கடலோடிகள், அதன் எவையேனும் கப்பல்களுக்குக் குறித்தளிக்கப்பட்டதும் அவர்களது குறிப்பான கடமைகளுடனும் சகல கப்பல் ஒழுங்கேற்பாடுகளுடனும் நிறுவுகைகளுடனும் உபகரணத்துடனும் நடவடிக்கைமுறைகளுடனும் அவர்களது அவசரகால அல்லது வழமையான கடமைகளுடன் தொடர்புபட்ட ஏனைய கப்பல் விடயங்களுடனும் தம்மைப் பரிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்;

(உ) புதிதாக தொழிலுக்கமர்த்தப்பட்ட கடலோடி ஒவ்வொருவருக்கும் எக்காலப்பகுதியொன்றின்போது பின்வருவனவற்றுடன் பரிச்சயப்படுத்தப்படுவதற்கு சந்தர்ப்பமொன்று அளிக்கப்படவேண்டுமோ நியாயமான அக்காலப்பகுதியைக் குறித்தொதுக்குதல் உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(i) கடலோடியினால் பயன்படுத்தப்படும் அல்லது தொழிற்படுத்தப்படும் விசேட உபகரணங்கள்;

(ii) கப்பலின் குறித்த காவல்காத்தல், பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, பாதுகாவல் மற்றும் கடலோடிக்குக் குறித்தளிக்கப்படும் கடமைகளை முறையாகப் புரிவதற்கு அவர் அறிந்திருக்கவேண்டிய அவசர நடவடிக்கை முறைகளும் ஒழுங்கேற்பாடுகளும்;

(ஊ) வானொலி இயக்குநர்கள் அவ்வாறு வானொலி இயக்குநர் ஒருவராகக் கடமைகளைப் பொறுப்பேற்க முன்னதாகக் கப்பலின் வானொலி உபகரணங்களுடன் பரிச்சயப்படுத்தப்படுதல் வேண்டும்;

(எ) கப்பலின் நிரப்புக்கோணம் அவசர சூழ்நிலையொன்றிலும் பாதுகாப்பு, பாதுகாவல் அல்லது தீழ்ப்புத் தடுப்பு அல்லது தணிப்பு விடயங்களில் முக்கியமான பணிகளைப் புரிகையிலும் தமது செயற்பாடுகளைப் பயனுள்ளவகையில் ஒருங்கிணைத்தல் வேண்டும்;

(ஏ) பெயர்குறிக்கப்பட்ட பணிகளைப் புரிவதற்கு கப்பற்றொகுதியின் எவரேனும் உறுப்பினரின் தகைமைகளைக் குறிப்பிட்டு சமவாயத்தைப் பின்பற்றி வழங்கப்பட்ட எல்லாச் சான்றிதழ்களும் தொடர்புடைய ஆவணங்களும் எல்லா நேரங்களிலும் கலத்திலிருப்பதைக் கப்பற்றலைவர் உறுதிப்படுத்த வேண்டும்;

(ஐ) திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் உரைகள், சர்வதேசச் சாதனங்கள் மற்றும் இயலச்செய்கின்ற ஒழுங்குவிதிகள் கப்பலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்;

(ஒ) பயனுள்ள வாய்மொழித் தொடர்பாடல், திருத்தப்பட்டவாறான 1974ஆம் ஆண்டின் கடலில் உயிர்க் காப்புக்கான (எஸ்ஓஎல்ஏஎஸ்) சர்வதேச சமவாயத்தின் இயைபான ஒழுங்குவிதிக்கிணங்க தமது கப்பல்களில் எல்லா நேரங்களிலும் பேணப்படுதல் வேண்டும்;

(ஓ) தமது றோ-றோ பயணிகள் கப்பல்களில் குறித்த கடமைகளும் பொறுப்புகளும் குறித்தளிக்கப்பட்ட கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் வேறு ஆளணியினர், கோவையின் பிரிவு பி-1/14 இல் கொடுக்கப்பட்ட வழிகாட்டுநெறியைக் கவனத்துக்கெடுத்து, நிரப்பப்படவேண்டிய பதவிகளுக்கும் ஏற்கப்பட வேண்டிய கடமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் தோதானவாறான ஆற்றல்களை எய்துவதற்குப் பரிச்சயப்படுத்தப்படுதற் பயிற்சியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) கடலோடிகளுக்கு கைத்தொழில் நாளதுவரையாக்கல் மற்றும் அபிவிருத்திகள் உட்பட எஸ்ரிசிடபிள்யூ கோவை மற்றும் இயைபான சாதனங்களுக்கு இணங்க அவர்களது அறிவை நாளதுவரையாக்குவதற்கு நாளதுவரையாக்கல் அல்லது நினைவூட்டுதல் பயிற்சி வழங்கப்படுதலை கம்பெனி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

32. (1) காவலுக்குப் பொறுப்பான அலுவலர் ஒருவராக அல்லது காவல் ஒன்றின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணையாளராகக் கடமை குறித்தளிக்கப்பட்ட அத்துடன் பெயர்குறிக்கப்பட்ட பாதுகாப்பு, தீழ்ப்புத் தடுப்பு மற்றும் பாதுகாவல் கடமைகளைக் கொண்டுள்ளவர்களான எல்லா ஆட்களுக்கும் களைப்பைத் தடுப்பதற்கு பின்வரும் மணித்தியாலங்களுக்குக் குறையாத ஓய்வுக் காலப்பகுதி வழங்கப்படவேண்டுமென இவ்வொழுங்குவிதிக்கிணங்க கம்பெனி உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) ஏதேனும் 24 மணித்தியாலக் காலப்பகுதியில் ஓய்வு ஆகக்குறைந்தது 10 மணித்தியாலங்கள்; அத்துடன்

(ஆ) ஏதேனும் 7 நாட்காலப்பகுதியில் 77 மணித்தியாலங்கள்.

(2) ஏதேனும் 24 மணித்தியாலக் காலப்பகுதியில் ஓய்வு மணித்தியாலங்கள், இரண்டு காலப்பகுதிகளுக்கு மேற்படாத ஒன்றினுள் பிரிக்கப்படலாம்; அதனுள் ஒன்று ஆகக்குறைந்தது 6 மணித்தியாலங்களை அத்துடன் தொடர்ச்சியான ஓய்வுக் காலப்பகுதிகளிடையேயான இடைவேளை 14 மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.

(3) ஓராம் மற்றும் (2)ஆம் உப ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படும் ஓய்வுக்காலப்பகுதிக்கான தேவைப்பாடுகள் அவசர விடயத்தில் அல்லது வேறு மேலே நீங்குகின்ற தொழிற்பாட்டு நிலைமைகளில் பேணப்படத் தேவையில்லை. அணிதிரள்கள், தீ எதிர்ப்பு மற்றும் உயிர்க்காப்புப் படகுத் துளைகள் மற்றும் தேசிய சட்டங்களினாலும் ஒழுங்குவிதிகளினாலும் சர்வதேச சாதனங்களினாலும் விதித்துரைக்கப்படும் துளைகள் ஓய்வுகாலத்தில் குழப்பத்தைக் குறைப்பதனதும் களைப்பை ஏற்படுத்தாததுமான முறையொன்றில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) காவல் அட்டவணைகள், அவை இலகுவாக அணுகப்படக்கூடிய இடத்தில் வைக்கப்படுகின்றன என்பதை கம்பெனிகளும் கப்பற்றலைவர்களும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வட்டவணைகள் கப்பலில் தொழில்புரியும் மொழி அல்லது மொழிகளிலும் ஆங்கிலத்திலும் தராதரப்படுத்தப்பட்ட மாதிரியொன்றில் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(5) எந்திரத்தொகுதி இடம் ஆளில்லாதுள்ளது போன்ற வேளையில் கடலோடியொருவர் அழைப்பிலுள்ளபோது, ஓய்வின் சாதாரண காலப்பகுதி அழைப்புகளின்மீது வேலை செய்வதனால் குழப்பப்படுமாயின், கடலோடி போதுமான ஈடுசெய்யக்கூடிய ஓய்வுக் காலமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) கடலோடிகளின் ஓய்வின் நாளாந்த மணித்தியாலங்களின் பதிவேடு இவ்வொழுங்குவிதியுடன் இணங்கியொழுகுதலின் கண்காணிப்பு மற்றும் உறுதிப்படுத்தலை அனுமதிப்பதற்கு கப்பலில் வேலை செய்கின்ற மொழி அல்லது மொழிகளிலும் ஆங்கிலத்திலும் தராதரப்படுத்தப்பட்ட மாதிரியொன்றில் பேணப்படுதல் வேண்டும். கப்பற்றலைவரால் அல்லது கப்பற்றலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினாலும் கடலோடிகளினாலும் புறக்குறிப்பிடப்படவேண்டிய கடலோடிகளுடன் சம்பந்தப்பட்ட பதிவேடுகளின் பிரதியொன்று பெறப்படுதல் வேண்டும்.

(7) இந்த ஒழுங்குவிதியிலுள்ள எதுவும், கப்பலின், கப்பலிலுள்ள ஆட்கள் அல்லது கப்பற் சரக்கின் உடனடிப் பாதுகாப்புக்கென அவசியமான ஏதேனும் வேலை நேரத்தில் புரியப்படுகின்ற அல்லது கடலில் ஆபத்திலுள்ள வேறு கப்பல்கள் அல்லது ஆட்களுக்கு உதவியை வழங்குகின்ற நோக்கத்திற்கென கடலோடியொருவரைத் தேவைப்படுத்த கப்பற்றலைவருக்குரிய உரிமையைப் பாதிப்பதாகக் கருதப்படலாகாது. இதற்கிணங்க கப்பற்றலைவர் சாதாரண சூழ்நிலை ஏற்படுத்தப்படும் வரை அவசியமான வேலை நேரத்தைப் புரியுமாறு கடலோடியொருவரைத் தேவைப்படுத்தலாமென்பதுடன் ஓய்வு நேர அட்டவணையை இடைநிறுத்தியும் வைக்கலாம். சாதாரண சூழ்நிலை ஏற்படுத்தப்பட்ட பின்னர் இயலுமான விரைவில், கப்பற்றலைவர், அட்டவணைப்படுத்தப்பட்ட ஓய்வுக் காலத்தில் வேலை புரிந்துள்ள எவரேனும் கடலோடிகளுக்கு போதுமான ஓய்வுக் காலமொன்று வழங்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(8) ஓய்வுக் காலம் ஏதேனும் 7 நாட் காலப்பகுதியில் 70 மணித்தியாலங்களுக்குக் குறையாதுள்ள மேலே தரப்பட்ட (1)(ஆ) மற்றும் (2) ஆம் உப ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட ஓய்வு நேரத்திலிருந்தான விதிவிலக்குகள் அனுமதிக்கப்படுதல்

வேண்டும். மற்றும் (1)(ஆ) என்னும் உப ஒழுங்குவிதியில் வழங்கப்பட்ட வாராந்த ஓய்வு காலத்திலிருந்தான விதிவிலக்குகள் இரண்டு தொடர்ந்துவரும் வாரங்களுக்கு மேற்படாது அனுமதிக்கப்படலாகாது. கப்பலில் விதிவிலக்கின் இரண்டு காலப்பகுதிகளிடையேயான இடைவெளிகள் விதிவிலக்கின் காலப்பகுதியின் இரட்டிப்பினைவிடக் குறைவாக இருத்தலாகாது.

(1)(அ) என்னும் உப ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வு நேரங்கள் மூன்று காலப்பகுதிகளுக்கு மேற்படாமல் பிரிக்கப்படலாம்; அதிலொன்று ஆகக்குறைந்தது 6 மணித்தியாலங்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன், மற்றைய இரண்டு காலப்பகுதிகளுள் எதுவும் ஒரு மணித்தியாலத்தைவிடக் குறைவாக இருத்தலாகாது. தொடர்ச்சியான ஓய்வுக் காலங்களிடையிலான இடைவெளிகள் 14 மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது. விதிவிலக்குகள் ஏதேனும் 7 நாட் காலப்பகுதியில் இரண்டு 24 மணித்தியாலக் காலப்பகுதிகளுக்கு அப்பால் நீடிக்கப்படுதலாகாது.

விதிவிலக்குகள், இயலுமான அளவில் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பி-VIII/1 ஆம் பிரிவில் களைப்புத் தடுப்பு தொடர்பான வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கெடுத்தல் வேண்டும்.

(9) கம்பெனிகளும் கப்பற்றலைவர்களும், மதுசார துஷ்பிரயோகத்தைத் தடுக்கின்ற நோக்கத்திற்கென குறித்தளிக்கப்பட்ட பாதுகாப்பு, பாதுகாவல் மற்றும் கடல்சார் சூழற் கடமைகளைப் புரிகையில் கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் வேறு கடலோடிகளுக்கான அத்தகைய மதுசார செறிவுக்கு இட்டுச்செல்கின்ற மதுசார மட்டமொன்றை அல்லது இரத்த மதுசார மட்டம் 0.05 சதவீதத்துக்கு மேற்படாமல் அல்லது சுவாசிப்பில் மதுசாரம் 0.25 மிகி/எல் மட்டத்திற்கு மேற்படாமல் மட்டுப்பாடொன்றை உறுதிப்படுத்துதல் வேண்டும். போதைப்பொருள் பாவனை தடுக்கப்படுகின்றது.

33. (1) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கப்பலில் அல்லது இலங்கை ஆள்புல நீர்ப்பரப்பில் ஏதேனும் வெளிநாட்டுக் கொடியுடனான கப்பலில் ஏதேனும் விபத்து அல்லது கப்பல் தரைதட்டுதல், தீப்பற்றுதல், பயணிகள் இறத்தல், கப்பல் இழந்துபோதல் அல்லது கப்பற் சரக்கின் ஏதேனும் பாகம் இழந்துபோதல் அல்லது ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் அதுபற்றி அது நிகழ்ந்ததிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குள் கப்பற்றலைவரினால், சொந்தக்காரரினால் அல்லது உள்ளூர் முகவரினால் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி:

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களை அல்லது புறக்குறிப்பிடுதல்களை வைத்திருப்போரினால், அவர்களின் சான்றிதழ்கள் தொடர்பான கடமைகளைப் புரிதல் சம்பந்தமாக கடலில் உயிர்வாழ்வு அல்லது ஆதனப் பாதுகாப்புக்கு அல்லது கடல்சார் சூழலுக்கு நேரடி அச்சுறுத்தலை விளைவிக்கக்கூடிய ஏதேனும் அறிக்கையிடப்பட்ட தகுதியீனம், செயல், செய்யாமை அல்லது பாதுகாப்புக்கான ஒத்திசைவின் பாரபட்சமற்ற புலனாய்வுக்கானவையும் அத்தகைய காரணத்துக்காகவும் மோசடியைத் தடுப்பதற்காகவும் அத்தகைய சான்றிதழ்களை மீளப்பெறுதல், இடைநிறுத்துதல் மற்றும் இரத்துச்செய்தலுக்கானவையுமான நடைமுறைகளையும் நடவடிக்கைமுறைகளையும் நிலைநாட்டுதல் வேண்டும்.

(ஆ) மோசடியையும் வழங்கப்பட்ட சான்றிதழ்களையும் புறக்குறிப்புகளையும் உட்படுத்துகின்ற வேறு சட்டமுறையற்ற செயல்முறைகளையும் தடுப்பதற்குத் தோதான வழிமுறைகளை எடுத்தலும் வலுவுறுத்துதலும் வேண்டும்.

(3) அத்தகைய நிலைமையின் பாரதூரமான தன்மையைப் பொறுத்து அல்லது பொது மக்கள் அக்கறை தேவைப்படுத்துமானால் மேலே கூறப்பட்ட சம்பவங்களுள் எதுபற்றியும் பணிப்பாளர் தலைமையதிபதி விசாரணையொன்றை நடாத்துமாறு கட்டளையிடலாம்.

(4) அத்தகைய விசாரணையை நடாத்துவதற்கென பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட அலுவலர் அல்லது அலுவலர்கள், சாட்சிகள் நேரில் சமூகமளிக்கவேண்டுமென்பது உட்பட விசாரணையில் சான்றளிப்பதற்கு அவர்களைத் தேவைப்படுத்தலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, விசாரணை செய்யும் அலுவலரின் அல்லது அலுவலர்களின் அறிக்கையின் அடிப்படையில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஏதேனும் தகுதிச் சான்றிதழை அல்லது புறக்குறிப்பை அல்லது ஆவணத்தை இடைநிறுத்தலாம் அல்லது மீளப்பெறலாம். எவ்வாறாயினும், அத்தகைய நடவடிக்கை எதுவும் இயைபான ஆள் தமது நிலையை எதிர்வாதிடுவதற்கு அவருக்கு நியாயமான சந்தர்ப்பம் கொடுக்கப்படாமல் எடுக்கப்படலாகாது.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி சான்றிதழ் அல்லது புறக்குறிப்பு எதுவும் வழங்காத கடலோடியின் தகுதியின்மை அல்லது துர்நடத்தை இருந்ததாக விசாரணை அறிக்கை தெரிவிக்குமானால், அவ்வாள் எந்நேரத்திலும் இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளுள் நுழைதல் தடைசெய்யப்படலாம் என்பதுடன் அத்தகைய ஆளுக்கு அத்தகைய ஏதேனும் ஆவணத்தை வழங்கிய அரசுக்குத் தோதான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(7) நிருவாக, சட்டஞ்சார் மற்றும் நடவடிக்கைமுறைக் கட்டுப்பாடு இல்லை என்பதை அத்தகைய விசாரணை தெரிவிக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சேர்ந்து கருமத்தைப் பரிகரிப்பதற்குத் தோதான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(8) ஆள்மாறாட்டம் செய்யும் கருத்துடன் இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்டதும் பொய்யாகப் புனையப்பட்டதெனக் காணப்படுகின்றதுமான சான்றிதழை தமது உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது மோசடியான வழிகள்மூலம் அத்தகைய சான்றிதழைப் பெற்றுள்ள எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற்படாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்குக் கடற்கடமைகளைப் புரிவதிலிருந்து அத்தகைய ஆளை இடைநிறுத்தலாம்.

(9) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற எவரேனும் ஆள் கப்பலின் முகாமையில் அல்லது தொழிற்பாட்டில் அல்லது பாதுகாப்பான கடற்போக்குவரத்தில் துர்நடத்தைக்குக் குற்றவாளியாக நீதிமன்றமொன்றினால் காணப்பட்டால், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(10) இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட சான்றிதழை வைத்திராத கப்பற்றொகுதியுறுப்பினரை ஈடுபடுத்துகின்ற எவரேனும் கப்பற்றலைவர் அல்லது அத்தகைய கப்பற்றலைவருக்கு உதவும் மற்றும் உடந்தையாகவிருக்கும் எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(11) மேற்பார்வையின் கீழான பயிற்சி அல்லது தடுக்கொணா வல் இக்கட்டு விடயங்கள் தவிர, இவ்வொழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆள் ஒருவரால் எத்தன்மையிலும் புரியப்படவேண்டிய ஏதேனும் பணியை அல்லது சேவையை அத்தகைய சான்றிதழை வைத்திராத ஆள் ஒருவரால் அல்லது செல்லுபடியுள்ள விசேட அதிகாரம் இல்லாத ஆளினால் புரியப்படுவதற்கு அனுமதிக்கின்ற கப்பற்றலைவர் அல்லது அது தொடர்பில் அத்தகைய வொரு கப்பற்றலைவருக்கு உதவியளிக்கின்ற அல்லது உடந்தையளிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிமன்றமொன்றினாலான குற்றத்தீர்ப்பின் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(12) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற ஆள் கப்பலின் முகாமை அல்லது தொழிற்பாடு அல்லது பாதுகாப்பான கடற்போக்குவரத்து தொடர்பாக தகுதியற்றவராக இருக்கின்றாரெனப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தோன்றினால், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய சான்றிதழை இடைநிறுத்தலாம் அல்லது இரத்துச் செய்யலாம் அல்லது ஒழித்துவிடலாம்.

(13) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற ஆள் அத்தகைய சான்றிதழுக்குத் தோதான கடமைகளைப் புரிவதற்குத் தவறினால், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய சான்றிதழை இடைநிறுத்தலாம் அல்லது இரத்துச் செய்யலாம் அல்லது ஒழித்துவிடலாம்.

(14) கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் வானொலி இயக்குநர்களின் அறிவை நாளதுவரையாக்கும் நோக்கத்துக்காக, பணிப்பாளர் தலைமையதிபதி, கடலில் உயிர்ப் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் கடல்சார் சூழலைப் பாதுகாத்தல் சம்பந்தமாகத் தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்குவிதிகளிலான அண்மைய மாற்றங்களின் உரைகள் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பல்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

34. (1) சமவாயத்தின் X ஆம் உறுப்புரையின்கீழ் தரப்பட்டவாறாக முறையாக அதிகாரமளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலரினால் பிரயோகிக்கப்படும் துறைமுக அரச கட்டுப்பாடு பின்வருவனவற்றுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்:

(அ) சமவாயத்துக்கிணங்க சான்றளிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கப்பலில் சேவைபுரியும் சகல கடலோடிகளும் சமவாயத்தின் 5ஆம் பந்தியின் I/10ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க புறக்குறிப்புக்கான விண்ணப்பம் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தென்பதற்கான தோதான சான்றிதழை அல்லது செல்லுபடியுள்ள விட்டுவிடுகையை வைத்திருக்கின்றாரா அல்லது ஆவணச்சான்றைக் கொண்டுள்ளாரா என உறுப்புரை X(I)க்கிணங்க சரிபார்த்தல்;

(ஆ) கப்பலில் சேவைபுரியும் கடலோடிகளின் இலக்கங்களும் சான்றிதழ்களும் கொடி அரசின் நிருவாகத்தின் ஏற்புடைத்தான பாதுகாப்பான ஆளமர்த்தல் தேவைப்பாடுகளுக்கியைய உள்ளனவா எனச் சரிபார்த்தல்; அத்துடன்

(இ) சமவாயத்தின் ஏ-I/4 என்னும் பிரிவுக்கிணங்க, பின்வருவனவற்றுள் எதுவேனும் சம்பவித்துள்ள காரணத்தினால் அத்தகைய தராதரங்கள் பேணப்படவில்லையென நம்புவதற்குத் தெளிவான காரணங்கள் இருந்தால், சமவாயத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, தோதானவாறாக காவல்காத்தல் மற்றும் பாதுகாப்புத் தராதரங்களைப் பேணுவதற்கு கப்பலின் கடலோடிகளுக்குள்ள ஆற்றலை மதிப்பிடுதல்:

(i) கப்பல் மோதிவிட்டது, தரைதட்டிவிட்டது அல்லது உதவியற்ற நிலையில் போய்விட்டது; அல்லது

(ii) பயணஞ்செய்யும்போது, நங்கூரமிட்டிருக்கும்போது அல்லது துறையில் இருக்கும்போது சர்வதேசச் சமவாயம் எதன்கீழும் சட்டவிரோதமாக இருக்கும் பதார்த்தங்கள் கப்பலிலிருந்து வெளியேற்றப்பட்டன; அல்லது

(iii) சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வழமையான வழிவகைகள் அல்லது பாதுகாப்பான கடற் போக்குவரத்து வழக்கங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகள் பின்பற்றப்படாமல், கப்பலானது அசட்டையான அல்லது பாதுகாப்பற்ற முறையில் செலுத்தப்பட்டது; அல்லது

(iv) கப்பலானது ஆட்களுக்கு, ஆதனத்துக்கு அல்லது சூழலுக்கு ஆபத்தாக அமையும் அல்லது பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் விதத்தில் வேறுவகையாக இயக்கப்படல்.

(2) பின்வரும் குறைபாடுகளுள் எதனையும் சீராக்கத் தவறியமை காரணமாக ஆட்களுக்கு, ஆதனத்துக்கு அல்லது சூழலுக்கு ஆபத்தாக அமையும் எனத் தீர்மானிக்கப்படும்போது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலர் சமவாயத்தின் X ஆம் உறுப்புரையின்கீழ் ஒரு கப்பலைத் தடுத்துவைக்கலாம்:

(அ) சமவாயத்தின் 5ஆம் பந்தியின் 1/10ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க கடலோடிகள் சான்றிதழ் வைத்திராமை, தோதான சான்றிதழ் வைத்திராமை, செல்லுபடியுள்ள விட்டுவிடுகை வைத்திராமை, அல்லது கொடி அரசு நிருவாகத்துக்குப் புறக்குறிப்புக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதென்பதற்கான ஆவணச்சான்று வழங்காமை;

(ஆ) கொடி அரசு நிருவாகத்தின் ஏற்புடைத்தான பாதுகாப்புக்கான ஆளமர்த்தல் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியமை;

(இ) கொடி அரசு நிருவாகத்தினால் கப்பலுக்கெனக் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு கடற்போக்குவரத்து அல்லது பொறியியல் காவல்காத்தல் ஒழுங்கேற்பாடுகள் இசையத்தவறியமை;

(ஈ) பாதுகாப்பான கடற்போக்குவரத்து, பாதுகாப்பான வானொலித் தொடர்பாடல் அல்லது கடல்சார் தீழ்ப்புத் தடுப்பு என்பவற்றுக்கு அத்தியாவசியமான உபகரணத்தை இயக்குவதற்குத் தகைமைபெற்ற ஆள் காவல்காத்தலில் இல்லாமை; அத்துடன்

(உ) கடற்பயணம் தொடங்கும் நேரத்தில் முதலாவது காவல் காத்தலுக்காகவும் அடுத்துப்பின்வரும் கடமை மாற்றக் காவல்காத்தல்களுக்காகவும் போதியளவு ஓய்வுபெற்று கடமை செய்வதற்குத் தகுதியான ஆட்களை ஏற்பாடு செய்ய இயலாமை.

35. பணிப்பாளர் தலைமையதிபதி:

(அ) வழங்கப்படுகின்ற, காலாவதியாகியுள்ள அல்லது மீளச்செல்லுபடியாக்கப்பட்டுள்ள, இடைநிறுத்தப்பட்டுள்ள, இரத்துச்செய்யப்பட்டுள்ள அல்லது காணாமற் போனவையாக அல்லது அழிந்துபோனவையாக அறிக்கையிடப்பட்ட மற்றும் விட்டுவிடுகை வழங்கப்பட்ட கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் ஏற்புடையவாறு கப்பற்றுணையாளர்கள் என்போருக்கான எல்லாச் சான்றிதழ்களும் புறக்குறிப்புகளும் பற்றிய இடாப்பை அல்லது இடாப்புக்களை பேணுதல் வேண்டும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ சமவாயத்தின் I/10 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் தமது சான்றிதழ்களுக்கு ஏற்றங்கீகாரம் நாடுகின்ற அல்லது கப்பலில் தொழில் நாடுகின்ற கடலோடிகளினால் ஏனைய திறத்தவர்களுக்கும் கம்பனிகளுக்கும் காண்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்யுறுதியான தன்மையையும் செல்லுபடியானதன்மையையும் சரிபார்ப்பதனை வேண்டுகின்ற அத்திறத்தவர்களுக்கும் கம்பனிகளுக்கும் அத்தகைய தகுதிச் சான்றிதழ்கள், புறக்குறிப்புகள் மற்றும் விட்டுக்கொடுப்புகளின் அந்தஸ்து பற்றிய தகவலைக் கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும்;

(இ) இவ்வொழுங்குவிதியின் மேற்படி (ஆ) ஆம் பந்திக்கிணங்க கிடைக்கக் கூடியதாக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தகவலின் அந்தஸ்து பற்றிய தகவல், இலத்திரனியல் வழிவகைகள் மூலம் ஆங்கிலமொழியில் கிடைக்கக் கூடியதாக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, சான்றிதழ் பதிவுக்கான இடாப்புகளுக்கும் தரவுத்தளங்களுக்கும் இலத்திரனியல் அணுக்கத்தை அபிவிருத்தி செய்கையில் கோவையின் ஏ-I/2இ 7 முதல் 9 வரையிலான பந்திகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்: (i)எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-I/8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, அவரது அதிகாரத்தின்கீழ் அரசசார்பற்ற முகவர் நிலையங்களினால் அல்லது உருவகங்களினால் நிறைவேற்றப்பட்ட மருத்துவச் சான்றுப்படுத்துகை, புறக்குறிப்பு மற்றும் மீளச்செல்லுபடியாக்குதல் செயற்பாடுகளுட்பட, எல்லாப் பயிற்சியும், தகுதி மதிப்பீடும், சான்றுப்படுத்துகையும், போதனையாளர்களினதும் மதிப்பீட்டாளர்களினதும் தகைமைகளும் அனுபவமும் சம்பந்தமானவை உட்பட, வரைவிலக்கணங்கூறப்பட்ட குறிக்கோள்களை எய்துவதனை உறுதிப்படுத்துவதற்குத் தரமுகாமை முறைமையினூடாகத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுதல்; அத்துடன் (ii)அரசாங்கஞ்சார் முகவர் நிலையங்கள் அல்லது உருவகங்கள் அத்தகைய செயற்பாடுகளைப் புரியுமிடத்து தரநியமங்கள் முறைமையொன்று இருத்தல்;

(உ) சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் தாமே உட்படுத்தப்பட்டவராகவிராத தகைமை பெற்ற ஆட்களினால், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-1/8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மதிப்பீடொன்று காலத்துக்குக்காலம் பொறுப்பேற்கப் படுவதனையும் பணிப்பாளர் தலைமையதிபதி உறுதிப்படுத்துதல் வேண்டும். இம்மதிப்பீடு, செயலாளர் நாயகத்துக்குத் தகவல் அறிவிக்கப்பட்ட திகதிக்குப்பின்னரான வலுவுக்குவந்த திகதிகளுடன், சமவாயத்துக்கும் எஸ்ரிசிடபிள்யூ கோவைக்குமான திருத்தங்களுக்கிணங்கியொழுக, தேசிய ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் நடவடிக்கை முறைகளுக்குமான எல்லா மாற்றங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) (உ) பந்தியினால் தேவைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டின் பெறுபேறுகளைக் கொண்டுள்ள அறிக்கை, எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-1/7 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட படிவத்துக்கிணங்க சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பின் செயலாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

36. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகளின் II ஆம் அட்டவணையினதும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-1/9 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கிணங்க மருத்துவச் சான்றிதழை வழங்குவதற்காகக் கடலோடிகளுக்கான மருத்துவத் தகுதித் தராதரங்களையும் நடவடிக்கைமுறைகளையும் நிலைநாட்டுதல் வேண்டும்.

(2) கடலோடிகளின் உடலியல் தகுதியை மதிப்பீடு செய்வதற்குப் பொறுப்பானவர்கள், இவ்வொழுங்குவிதிகளின் II ஆம் அட்டவணையினதும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-1/9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, கடலோடி மருத்துவப் பரிசோதனைகளின் நோக்கத்துக்காக பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்தொழிலர்களாகவிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) கடலிற் சேவையாற்றுகின்றவரும், சமவாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழை வைத்திருப்பவருமான ஒவ்வொரு கடலோடியும், இவ்வொழுங்குவிதியினதும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-1/9 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்ட செல்லுபடியான மருத்துவச் சான்றிதழையும் வைத்திருத்தல் வேண்டும்.

(4) சான்றுப்படுத்துகைக்கான ஒவ்வொரு தேர்வுவிழைநரும்:

(அ) 18 வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) அவரது /அவளது ஆளடையாளம் பற்றித் திருப்திகரமான எண்பிப்பைக் காண்பித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) இவ்வொழுங்குவிதிகளின் அட்டவணை II இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிலைநாட்டப்பட்ட ஏற்புடையனவான மருத்துவத் தகுதித் தராதரங்களைத் திருப்தி செய்தல் வேண்டும்.

(5) கடலோடி 55 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தாலொழிய, மருத்துவச் சான்றிதழ்கள் அதிகபட்சம் இரண்டாண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியாகவிருத்தல் வேண்டும்; அவ்விடயத்தில் அதிகபட்ச செல்லுபடிக் காலப்பகுதி ஓராண்டாதல் வேண்டும்.

(6) ஒரு மருத்துவச் சான்றிதழின் செல்லுபடிக் காலப்பகுதி ஒரு பயணத்தின் போது காலாவதியாக வந்தால், அப்போது, அம்மருத்துவச் சான்றிதழ் பணிப்பாளர் தலைமையதிபதினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர் கிடைக்கக்கூடியவராகவிருக்கும் அடுத்த துறைமுகத்தை அடையும் வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்; ஆயின், இக்காலப்பகுதி மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது.

(7) அவசரமான விடயங்களில் பணிப்பாளர் தலைமையதிபதி, ஏற்றங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர் கிடைக்கக் கூடியவராகவிருக்கும் அடுத்த துறைமுகத்தை அடையும் வரை செல்லுபடியான மருத்துவச் சான்றிதழ் இன்றிப் பணிபுரிவதற்கு ஒரு கடலோடியை அனுமதிக்கலாம்; ஆயின்:

(அ) அத்தகைய அனுமதிக் காலப்பகுதி மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) சம்பந்தப்பட்ட கடலோடி அண்மைய திகதியைக் கொண்ட காலாவதியான மருத்துவச் சான்றிதழை உடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

(8) இவ்வொழுங்குவிதியின் 3 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவச் சான்றிதழ், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 7 ஆம் பந்தியின் ஏ-1/9 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்சத் தகவலையேனும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன்:

(அ) ஆங்கில மொழியில் இருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் இருத்தலும் வேண்டும்.

37. (1) கம்பெனிகளும், கப்பற்றலைவர்களும், பிரதம பொறியியல் அலுவலர்களும் எல்லாக் காவல்காத்தல் ஆளணியினரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VIII/2 ஆம் பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடுகள், நெறிகள் மற்றும் வழிகாட்டுகையைக் கடைப்பிடித்தல் வேண்டும்; நிலவுகின்ற சூழ்நிலைகளுக்கும் நிலைமைகளுக்கும் தோதான பாதுகாப்பான, தொடர்ச்சியான காவல்காத்தல் அல்லது காவல்காத்தல்கள் எல்லா நேரங்களிலும் எல்லாக் கடல்செல் கப்பல்களில் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு இவை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கப்பலினதும் கப்பற்றலைவர், நிலவுகின்ற சூழ்நிலைகளையும் நிலைமைகளையும் கணக்குக்கெடுத்து, காவல்காத்தல் ஒழுங்கேற்பாடுகள் பாதுகாப்பான காவல்காத்தலை அல்லது காவல்காத்தல்களைப் பேணுவதற்குப் போதியனவாகவுள்ளனவென்பதையும், கப்பற்றலைவரின் பொதுவான பணிப்பின்கீழ்:

(அ) கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள், அவர்கள், கடற்போக்குவரத்துப் பாலத்தில் அல்லது எல்லா நேரங்களிலும் பயணப்பட அறை அல்லது பாலம் கட்டுப்படுத்தல் அறை போன்ற நேரடியாக இணைந்த இடத்தில் தாமே சமுகமாயிருக்கும்போது, தமது கடமைக் காலப்பகுதியின்போது கப்பலைப் பாதுகாப்பாகச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ளனரென்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) வானொலி இயக்குநர்கள், தமது கடமைக் காலப்பகுதிகளின்போது தோதான அலைகளின்மீது தொடர்ச்சியான வானொலிக் காவலைப் பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ளனரென்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) பிரதம பொறியியல் அலுவலரின் பணிப்பின்கீழ், எஸ்ரிசிடபிள்யூ கோவையில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, பொறியியல் காவலொன்றுக்குப் பொறுப்பான அலுவலர்கள், எந்திரத்தொகுதி இடைவெளிகளைக் கவனிப்பதற்கு உடனடியாகக் கிடைக்கக்கூடியவராகவிருக்கின்றனரென்பதையும் அழைப்புக்குத் தயாராகவிருக்கின்றனரென்பதையும், தேவைப்படுத்தப்படும்போது, அவர்களின் பொறுப்புக் காலப்பகுதிகளின்போது எந்திரத்தொகுதி இடைவெளியில் தாமே சமுகமாயிருக்கின்றனரென்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) கப்பல் நங்கூரமிடப்பட்டிருக்கையில் அல்லது பிணிக்கப்பட்டிருக்கையில் எல்லா நேரங்களிலும் பாதுகாப்பு நோக்கத்துக்காகத் தோதான மற்றும் பயனுள்ள காவல் அல்லது காவல்கள் பேணப்படுகின்றனவென்பதையும், கப்பலானது அபாயகரமான கப்பற்சரக்கைக் காவிச்செல்கின்றதாயின், அத்தகைய காவலின் அல்லது காவல்களின் ஒழுங்குபடுத்துகை, அந்த அபாயகரமான கப்பற்சரக்கின் தன்மை, அளவு, பொதியிடுகை மற்றும் களஞ்சியப்படுத்துகையை மற்றும் கப்பலில், செல்கையில் அல்லது கரையில் நிலவுகின்ற எவையேனும் விசேட நிலைமைகளை முழுமையாகக் கணக்குக்கெடுக்கின்றதாவென்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(உ) ஏற்புடையதானவாறு, பாதுகாப்பு நோக்கத்துக்காகத் தோதான மற்றும் பயனுள்ள காவல் பேணப்படுகின்றதா அல்லது காவல்கள் பேணப்படுகின்றனவாவென்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

38. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தில் அடங்கியுள்ள அவரது கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் அமுலாக்கலுக்காகக் கோவையின் ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(2) நிருவாகமானது, சமவாயத்திற்கு இணங்கியொழுகுதலையும் அதன் அமுலாக்கலையும் சரிபார்ப்பதற்கான கணக்காய்வு நியமத்துக்கிணங்க ஒழுங்கமைப்பினால் காலாகாலக் கணக்காய்வுகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(3) ஒழுங்கமைப்பின் செயலாளர் நாயகம், ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளின் அடிப்படையில், கணக்காய்வுத் திட்டத்தை நிருவகிப்பதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளின் அடிப்படையில், கணக்காய்வை நடாத்துதலையும் முடிவெடுப்புகளுக்கு முகங்கொடுப்பதற்கு நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுலாக்குதலையும் வசதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) கணக்காய்வானது:

(அ) ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளைக் கணக்குக்கெடுத்து, ஒழுங்கமைப்பின் செயலாளர் நாயகத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒட்டுமொத்த அட்டவணையின் அடிப்படையிலிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளைக் கணக்குக்கெடுத்து, காலாகால இடைவெளிகளில் நடாத்தப்படுதல் வேண்டும்.

39. பணிப்பாளர் தலைமையதிபதி, இயைபான சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்புத் தீர்மானங்களில் அடங்கியுள்ள ஏற்பாடுகளையும், விதப்புரைகளையும், வழிகாட்டுநெறிகளையும், பரீட்சைக்கான செயல்முறைக் கோவையிலான திருத்தங்களையும் நிலைநாட்டுவதற்கான விபரமான நடவடிக்கைமுறைகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

40. (1) இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு யூலை 12 ஆந்திகதிய 1818/37 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகள் 2016, ஒக்டோபர் 4 ஆந் திகதியிலிருந்து முதல் இல்லாதொழிக்கப்படுதல் வேண்டும்.

(2) மேலேயுள்ள ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், 1998 யூலை 17ஆந்திகதிய 1036/21ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1998ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க 2016, திசெம்பர் 31ஆந்திகதி வரையில் சான்றிதழ்கள் வழங்கப்படலாம், புறக்குறிப்பிடப்படலாம், மீளச்செல்லுபடியாக்கப்படலாம் அல்லது ஏற்றங்கீகரிக்கப்படலாம்.

41. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

“இயலக்கூடிய கடலோடி கப்பற்றளம்” என்பது, சமவாயத்தின் II/5ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க தகைமைபெற்ற கப்பற்றுணையாளர் ஒருவர் எனப் பொருள்படும்;

“இயலக்கூடிய கடலோடி எந்திரம்” என்பது, சமவாயத்தின் III/5 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க தகைமைபெற்ற கப்பற்றுணையாளர் ஒருவர் எனப் பொருள்படும்;

“சட்டம்” என்பது, 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம் எனப் பொருள்படும்;

“நிருவாகம்” என்பது, இவ்வொழுங்குவிதிகளின் அமுலாக்கத்திற்குப் பொறுப்பாக இருக்கின்றவரான வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

“அங்கீகரிக்கப்பட்ட” என்பது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பிரதம பரீட்சகரினால் அங்கீகரிக்கப்பட்டது எனப் பொருள்படும்;

“அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை அத்துடன் மதிப்பீடு” என்பது, சமவாயத்தின்கீழ் சான்றிதழ்களை வழங்கல் அத்துடன்/அல்லது புறக்குறிப்பிடுதல்கள் என்பனவற்றின் நோக்கத்திற்காக பரீட்சை மற்றும் மதிப்பீடுகள் உள்ளடங்கலாக மொத்தப் பயிற்சி தேவைப்பாடு மற்றும் நியமங்களை விதித்துரைக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவாறான கடலோடிகளின் பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று எனப் பொருள்படும்;

“அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர்” என்பது, கடலோடிகளின் மருத்துவப் பரிசோதனையை நடாத்துவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவர் எனப் பொருள்படும்;

*"கணக்காய்வு"* என்பது, கணக்காய்வுக் கட்டளைகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகின்றனவென்பதைத் தீர்மானிப்பதற்கு அதனைப் புறநிலையாக மதிப்பீடுசெய்து கணக்காய்வுச் சான்றைப் பெறுவதற்காகக் கிரமமான, சுயேச்சையான மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட செய்முறை எனப் பொருள்படும்;

*"கணக்காய்வுத் திட்டம்"* என்பது, ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளைக் கணக்குக்கெடுத்து ஒழுங்கமைப்பினால் தாபிக்கப்பட்ட சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பு உறுப்பு நாடு கணக்காய்வுத்திட்டம் எனப் பொருள்படும்;

*"கணக்காய்வு நியமம்"* என்பது, அமுலாக்கலுக்கான கோவை எனப் பொருள்படும்;

*"தகுதிச் சான்றிதழ்"* என்பது, சமவாயத்தின் II, III, IVஆம் அல்லது VIIஆம் அத்தியாயங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர்கள் என்போருக்காக வழங்கப்பட்டு புறக்குறிப்பிடப்பட்ட சான்றிதழ் ஒன்று எனப் பொருள்படும் என்பதுடன் அதனில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு மட்டத்தில் சம்பந்தப்பட்ட பதவியில் சேவையாற்றுவதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அதனை சட்டமுறையாக வைத்திருப்பவருக்கு உரித்தளிப்பதாகும்;

*"தேர்ச்சிச் சான்றிதழ்"* என்பது, சமவாயத்திலான பயிற்சி, தகுதிகள் அல்லது கடல்செல் சேவையின் இயைபான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன எனக் கூறி கடலோடி ஒருவருக்கு வழங்கப்பட்ட தகுதிச்சான்றிதழ் ஒன்றைத் தவிர வேறு சான்றிதழ் ஒன்று எனப் பொருள்படும்;

*"இரசாயனத் தாங்கிக் கப்பல்"* என்பது, சர்வதேச இரசாயனப் பொதிக் கோவையின் 17ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவ உற்பத்திப் பொருளைப் பொதியாகக் காவிச் செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்டு அல்லது இசைவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் ஒரு கப்பல் எனப் பொருள்படும்;

*"பிரதம பொறியியல் அலுவலர்"* என்பது, கப்பலின் பொறிமுறை, மின்சார நிறுவுகைகளின் தொழிற்பாட்டுக்கும், பராமரிப்புக்கும் அத்துடன் பொறிமுறை உந்துகைக்கும் பொறுப்பான சிரேட்ட பொறியியல் அலுவலர் எனப் பொருள்படும்;

*"பிரதம பரீட்சகர்"* என்பது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் கப்பற்றலைவர்கள், மற்றும் கப்பற்றளப் பகுதி ஆளணியினரின் பிரதம பரீட்சகர் அல்லது எந்திரப் பகுதி ஆளணியினரின் பிரதம பரீட்சகர் எனப் பொருள்படும்;

*"பிரதம கப்பற்றுணைத்தலைவர்"* என்பது, கப்பற்றலைவர் பதவி வரிசைக்கு அடுத்த பதவி வரிசையைச் சேர்ந்தவரும், கப்பற்றலைவர் இயலாதிருக்கும் சந்தர்ப்பத்தில் கப்பலின் கட்டளை, கட்டுப்பாடு அல்லது பொறுப்பு அவரைச் சார்ந்துள்ளவருமான கப்பற்றள அலுவலர் எனப் பொருள்படும்;

*"அமுலாக்கலுக்கான கோவை"* என்பது, ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்புச் சாதனங்கள் அமுலாக்கற்கோவை (IIIகோவை) எனப் பொருள்படும்;

*"பரீட்சைக்கான நடைமுறைக் கோவை"* என்பது, அவசியமானவாறு திருத்தப்படக்கூடிய பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட கடலோடிகளின் கடல்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் தேவைப்பாடுகள் அடங்கிய அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டு ஆவணம் அல்லது கைநூல் எனப் பொருள்படும்;

*"கம்பெனி"* என்பது, கப்பற் சொந்தக்காரர் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்கமைப்பு அல்லது கப்பற் சொந்தக்காரரிடமிருந்து கப்பலின் தொழிற்பாட்டுப் பொறுப்பை ஏற்று, அத்தகைய பொறுப்பை ஏற்றவுடன், இவ்வொழுங்குவிதிகளினால் கம்பெனிமீது விதிக்கப்பட்ட அனைத்துக் கடமைகளையும், பொறுப்புக்களையும் பொறுப்பேற்க உடன்பட்டுள்ளவரான முகாமையாளர் அல்லது வெற்றுப்படகு வாடகைக்கெடுப்பவர் போன்ற ஆள் எனப் பொருள்படும்;

*"சமவாயம்"* என்பது, 1978, யூலை 7ஆந் திகதியன்று கடலோடிகளின் பயிற்சி மற்றும் சான்றளித்தல் பற்றிய சர்வதேச மாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1984, ஏப்பிரல் 28ஆந்திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதும் 1978ஆம் ஆண்டின் கடலோடிகளின் பயிற்சிக்கும் சான்றளித்தலுக்கும் காவல் பேணலுக்குமான எஸ்ரிசிடபிள்யூ நியமங்கள் பற்றிய சர்வதேச சமவாயம் எனப் பொருள்படும். இது அடுத்துவரும் எல்லாத் திருத்தங்களையும் உள்ளடக்குகின்றது;

*"அபாயகரமான கப்பற்சரக்கு"* என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்-

(அ) பொதியாக மசகு பெற்றோலியம் அல்லது அதிலிருந்து பெறப்படும் எவையேனும் துணை உற்பத்திப் பொருட்கள்;

(ஆ) சர்வதேச வாயுவைக் காவிச்செல்லும் கோவையின் 19ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவ வாயு அல்லது வேறு உற்பத்திப்பொருள்;

(இ) சர்வதேச இரசாயனப் பொதிக் கோவையின் 17ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவ உற்பத்திப்பொருள்;

"கப்பற்றள அலுவலர்" என்பது, 2010ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறான சமவாயத்தின் IIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தகைமைபெற்ற கடற்போக்குவரத்து அலுவலர் எனப் பொருள்படும்;

"கப்பற்றள அலுவலர் பயிலிளவல்" என்பது, கப்பற்றள அலுவலராக வருவதற்கென பயிற்சி பெறும் ஆள் எனப் பொருள்படும்;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"ஆவணச் சான்று" என்பது, சமவாயத்தின் இயைபான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என நிலைநாட்டுவதற்குப் பயன்படும் தகுதிச்சான்றிதழ் அல்லது தேர்ச்சிச்சான்றிதழ் தவிர வேறு ஆவணம் எனப் பொருள்படும்

"சேறுவாரும் கருவி பொருத்தப்பட்ட கலம்" என்பது, கால்வாய்களையும், துறைமுகங்களையும் ஆழப் படுத்துவதற்கும் நீரின் கீழ்மட்டத்திலுள்ள மணல் திட்டுகள், உலோகச் சலாகைகள் போன்ற முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கும் உபயோகப்படுத்தப்படுகின்ற அகழ்ந்தெடுக்கும் எந்திரத்தொகுதி பொருத்தப்பட்ட பொறிமுறையில் உந்தப்படும் கப்பலொன்று எனப் பொருள்படும்;

"மின் இயக்க - தொழில்நுட்ப அலுவலர்" என்பது, சமவாயத்தின் ஒழுங்குவிதி III/6இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்;

"மின் இயக்க - தொழில்நுட்ப கப்பற்றுணையாளர்" என்பது, சமவாயத்தின் ஒழுங்குவிதி III/7இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற கப்பற்றுணையாளர் ஒருவர் எனப் பொருள்படும்;

"புறக்குறிப்பு" என்பது, சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவர், இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு அமைய, விடயத்துக்கேற்ப, கப்பற்றலைவரின் அல்லது அலுவலரின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவருக்கு அதிகாரத்தை வழங்கும் சான்றிதழ் ஒன்றை வழங்குதலை அல்லது சான்றிதழ் ஒன்றை ஏற்றங்கீகரித்தலை அத்தாட்சிப்படுத்தல் எனப் பொருள்படும்;

"பொறியியல் அலுவலர்" என்பது, சமவாயத்தின் ஒழுங்குவிதி III/1, III/2 அல்லது III/3 இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற அலுவலர் எனப் பொருள்படும்;

"பொறியியல் அலுவலர் பயிலிளவல்" என்பது, பொறியியல் அலுவலராக வருவதற்கெனப் பயிற்சிபெற்றுக்கொண்டிருக்கும் ஆளொருவர் எனப் பொருள்படும்;

"பரீட்சகர்" என்பது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் கப்பற்றலைவர்களின், கப்பற்றளப் பகுதி ஆளணியினரின் அல்லது எந்திரப் பகுதி ஆளணியினரின் பரீட்சகர் எனப் பொருள்படும்;

"மீன்பிடிக் கலம்" என்பது, கடலில் மீன்களையும் ஏனைய உயிர்வாழ் வளங்களையும் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கப்பல் எனப் பொருள்படும்;

"பணி" என்பது, கப்பற்றொழிற்பாட்டுக்கும், கடலில் உயிர்க்காப்புக்கும், கடல்சார் சூழல் பாதுகாப்பிற்கும் அவசியமென எஸ்ரிசிடபிள்யூ கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு தொகுதிப் பணிகளும், கடமைகளும் பொறுப்புக்களும் எனப் பொருள்படும்;

"ஜிஎம்டிஎஸ்எஸ்" என்பது, உலகளாவிய கடலோர இடர்கள், பாதுகாப்பு முறைமை எனப் பொருள்படும்;

"ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர்" என்பது, சமவாயத்தின் அத்தியாயம் IV இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற ஆளொருவர் எனப் பொருள்படும்;

"ஜிரி" என்பது, முழுமொத்த தொன்னிறை எனப் பொருள்படும்;

"சர்வதேச சாதனங்கள்" என்பது, சர்வதேசச் சமவாயங்களுக்கான திறத்தவரொருவராகக் கடலில் உயிர்க்காப்புக்கும், கடல் தீழ்ப்பைத் தடுப்பதற்குமென இலங்கையினால் சட்டமாக்கப்பட்ட ஏற்பாடுகள் எனப் பொருள்படும்;

"சர்வதேசப் பயணங்கள்" என்பது, கரையோரத்தை அண்மித்த பயணங்கள் தவிர வேறு கப்பல்களின் பயணங்கள் எனப் பொருள்படும்;

"ஐஎஸ்பிஎஸ் கோவை" என்பது, சர்வதேச கடலோர ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்க்காப்புக்கான (எஸ்ஓஎல்ஏஎஸ்) சர்வதேச சமவாயத்திற்கு ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கங்களின் மாநாட்டின் 2வது தீர்மானத்தின்மூலம் 2002 திசெம்பர் 12ஆந்திகதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதி பாதுகாப்பு (ஐஎஸ்பிஎஸ்) கோவை எனப் பொருள்படும்;

*"திரவ வாயுத் தாங்கிக் கப்பல்" என்பது, சர்வதேச வாயு காவிக் கோவையின் 19ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவ வாயுவை அல்லது ஏனைய உற்பத்திப் பொருளை பொதியாகக் காவிச் செல்வதற்கென நிர்மாணிக்கப்பட்டு அல்லது இசைவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் ஒரு கப்பல் எனப் பொருள்படும்;*

*"கப்பற்றலைவர்" என்பது, ஒரு கப்பலின் கட்டளையிடும் ஆள் எனப் பொருள்படும்;*

*"மாதம்" என்பது, ஒரு பஞ்சாங்க மாதம் அல்லது ஒரு மாதத்திற்குக் குறைந்த காலப்பகுதிகளைக் கொண்ட 30 நாட்கள் எனப் பொருள்படும்;*

*"கரையோரத்தை அண்மித்த பயணங்கள்" (என்சிவி) என்பது, பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, மியன்மார் மற்றும் இலங்கை ஆகிய இடங்களிலுள்ள ஏதேனும் துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து சொல்லப்பட்ட நாடுகளில் உள்ள வேறு ஏதேனும் துறைமுகத்திற்கான அல்லது இடத்திற்கான கரையோர வியாபாரத்தில், அத்தகைய பயணங்களின்போது நிருவாகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறான பாதுகாப்பான துறைமுகங்களின் அண்மைத் தூரம் சம்பந்தப்பட்ட குறிப்பான குறிப்பீட்டுக்கு அமைவாக ஈடுபட்டுள்ள கப்பல்களின் பயணங்கள் எனப் பொருள்படும்;*

*"அலுவலர்" என்பது, தேசிய சட்டத்தினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது அத்தகைய பதவிப்பெயர் குறிப்பு இல்லாதிருக்கையில் கூட்டு உடன்படிக்கையினால் அல்லது வழக்காறினால் கப்பற்றலைவர் தவிர்ந்த வேறு கப்பற்றொகுதி உறுப்பினர் எனப் பொருள்படும்;*

*"எண்ணெய்த் தாங்கிக் கப்பல்" என்பது, பெற்றோலியத்தையும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களையும் பொதியாகக் காவிச்செல்வதற்கென நிர்மாணிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் ஒரு கப்பல் எனப் பொருள்படும்;*

*"ஒழுங்கமைப்பு" என்பது, சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பு எனப் பொருள்படும்;*

*"பயணிகள் கப்பல்" என்பது, திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான (எஸ்ஓஎல்ஏஎஸ்) சர்வதேச சமவாயத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு பயணிகள் கப்பல் ஒன்று எனப் பொருள்படும்;*

*"உந்துதல் சக்தி" என்பது, கப்பலின் பதிவுச் சான்றிதழில் அல்லது வேறு உத்தியோகபூர்வ ஆவணத்தில் காணப்படுகின்ற கப்பலின் எல்லாப் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியின் மொத்த ஆகக்கூடிய தொடர்ந்து கணிக்கப்பட்ட கிலோவோற்றுக்களிலான சக்தி வெளிப்படுத்துகை எனப் பொருள்படும்;*

*"வானொலிக் கடமைகள்" என்பது, தோதானவாறு, வானொலி ஒழுங்குவிதிகளுக்கும் திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான (எஸ்ஓஎல்ஏஎஸ்) சர்வதேசச் சமவாயத்திற்கும், பணிப்பாளர் தலைமையதிபதியின் தற்றுணிபின்படி சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பின் இயைபான விதப்புரைகளுக்கும் இணங்க நடாத்தப்பட்ட காவல் காத்தல், தொழில்நுட்ப பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்களை உள்ளடக்கும்;*

*"வானொலி இயக்குநர்" என்பது, வானொலி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் அல்லது ஏற்றங்கீகரிக்கப்படும் தோதான சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கும் ஓர் ஆள் எனப் பொருள்படும்;*

*"வானொலி ஒழுங்குவிதிகள்" என்பது, சர்வதேசத் தொலைத்தொடர்புகள் சமவாயத்துடன் இணைக்கப்பட்ட வானொலி ஒழுங்குவிதிகள் எனப் பொருள்படும்;*

*"கப்பற்றுணையாளர்" என்பது, கப்பற்றலைவர் அல்லது அலுவலர் தவிர்ந்த கப்பலொன்றின் கப்பற்றொகுதி உறுப்பினர் எனப் பொருள்படும்;*

*"ஒழுங்குவிதிகள்" என்பது, 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகள் எனப் பொருள்படும்;*

*"மட்டுப்படுத்தப்பட்ட ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர் என்பது, இலங்கையின் கரையோர நீர்ப்பரப்பினுள் பிரத்தியேகமாக தொழிற்படுத்த தகுதிவாய்ந்த ஆளொருவர் எனப் பொருள்படும்;*

*"றோ-றோ பயணிகள் கப்பல்" என்பது, திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான (எஸ்ஓஎல்ஏஎஸ்) சர்வதேச சமவாயத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறன றோ-றோ சரக்கு இடைவெளிகள் அல்லது விசேட வகுதி இடைவெளிகள் கொண்ட பயணிகள் கப்பல் எனப் பொருள்படும்;*

*"கடலோடிகள்" என்பது, ஏதேனும் கலத்தில் ஏதேனும் தன்மையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது ஈடுபடுத்தப்பட்டவரும் கப்பலின் உறுப்புரைகளில் பதியப்பட்டவருமான ஒவ்வோராளையும் உள்ளடக்கும்;*

*"கடல்செல் சேவை" என்பது, சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு அல்லது மீளச் செல்லுபடியாக்குவதற்கு அல்லது வேறு தகைமைக்கு இயைபான கடல்செல் கப்பல் ஒன்றில் கப்பலிலான சேவை எனப் பொருள்படும்;*

"கடல்செல் கப்பல்" என்பது, பிரத்தியேகமாக உள்நாட்டு நீர்ப்பரப்புகளில் அல்லது காப்பளிக்கப்பெற்ற நீர்ப்பரப்புகளினுள் அல்லது நீர்ப்பரப்புகளுக்கு நெருக்கமாய் அண்டியதாக அமைந்த நீர்ப்பரப்புகளில் அல்லது துறைமுக ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள நீர்ப்பரப்புகளில் கடற்செலவு செய்கின்ற கப்பல்கள் தவிர்ந்த வேறு வியாபாரக் கப்பல் எனப் பொருள்படும்;

"இரண்டாவது பொறியியல் அலுவலர்" என்பது, பிரதான பொறியியல் அலுவலர் இயலாது போனால், கப்பலின் பொறிமுறை உந்துகைப் பொறுப்பு மற்றும் எந்திர மின்சார நிறுவகங்களின் தொழிற்பாடும் பராமரிப்பும், எப்பொறியியல் அலுவலரைச் சாருமோ, அவ்வலுவலரும் பிரதம பொறியியல் அலுவலருக்குப் பதவிவரிசையில் அடுத்துவருகின்றவருமான பொறியியல் அலுவலர் எனப் பொருள்படும்;

"பாதுகாப்புக் கடமைகள்" என்பது, திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான (எஸ்ஓஎல்ஏஎஸ்) சர்வதேச சமவாயத்தின் XI-2ஆம் அத்தியாயத்தினாலும் சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதி பாதுகாப்பு (ஐஎஸ்பிஎஸ்) கோவையினாலும் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு கப்பல்களிலுள்ள அனைத்து பாதுகாப்புப் பணிகளையும் கடமைகளையும் உள்ளடக்கும்;

"கப்பல் பாதுகாப்பு அலுவலர்" என்பது, கப்பலின் பாதுகாப்புத் திட்டத்தை அமுல்படுத்துதலும் பேணுதலும் அத்துடன் கம்பெனி பாதுகாப்பு அலுவலருடனும் துறைமுக வசதி பாதுகாப்பு அலுவலர்களுடனும் இணைதலும் உள்ளடங்கலாக கப்பலின் பாதுகாப்புக்கு பொறுப்புடையவராக கம்பெனியினால் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட கப்பற்றலைவருக்கு வகைசொல்ல வேண்டியவரான கப்பலிலுள்ள ஆள் எனப் பொருள்படும்;

"எஸ்ரிசிடபிள்யூ கோவை" என்பது, ஒழுங்கமைப்பினால் அது திருத்தப்படக்கூடியவாறு, 1995 ஆம் மாநாட்டின் 2 ஆம் தீர்மானத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடலோடிகள் பயிற்சி, சான்றளித்தல், காவல் காத்தல் (எஸ்ரிசிடபிள்யூ) கோவை எனப் பொருள்படும்;

"தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு" என்பது, வானொலி ஒழுங்குவிதிகளுக்குப் பொறுப்பான, 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபை எனப் பொருள்படும்;

"வியாபாரக் கப்பல்" என்பது, கப்பற்சரக்கை, பயணிகளை அல்லது கால்நடைகளைக் கொண்டுசெல்வதற்குப் பயன்படும் கடல்செல் கப்பல் எனப் பொருள்படும்;

"இழுவைப்படகு" என்பது, கடலில் துறைமுகங்களுக்குள்ளேயும் வெளியேயும், நதிகளில் அத்துடன் கலத்துறைகளில் கப்பல்களை இழுப்பதற்கு அல்லது அவற்றிற்கு உதவிபுரிவதற்கு அல்லது வள்ளங்களை, சரக்கு ஏற்றியிறக்கும் படகுகளை அல்லது வேறு சிறிய கலங்களை இழுப்பதற்கு அல்லது தள்ளுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற, கப்பற் சரக்கு கொண்டுசெல்ல சிறிய இடமுள்ள அல்லது இடமெதுவும் இல்லாத குறைந்த தொன் எடையுள்ள பொறிமுறையில் உந்தப்படும் கப்பலொன்று எனப் பொருள்படும்; அத்துடன்

"பல்கலைக்கழகங்கள் சட்டம்" என்பது, 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 3(2))

### அட்டவணை அ

பணிகள்

(அ) கடற் போக்குவரத்து
(ஆ) சரக்கு கையாளுகையும், களஞ்சியப்படுத்தலும்
(இ) கப்பற்றொழிற்பாட்டைக் கட்டுப்படுத்துதலும், கப்பலில் உள்ள ஆட்களைக் கவனித்தலும்
(ஈ) கடல்சார் பொறியியல்
(உ) மின்சார, மின்னியக்க, கட்டுப்பாட்டுப் பொறியியல்
(ஊ) பராமரிப்பும், பழுதுபார்த்தலும்
(எ) வானொலித் தொடர்பாடல்கள்.

## அட்டவணை ஆ

பொறுப்பு மட்டங்கள்

(அ) முகாமைத்துவ மட்டம் (கப்பற்றலைவர், பிரதம கப்பற்றுணைத்தலைவர், பிரதம பொறியியல் அலுவலர் மற்றும் இரண்டாவது பொறியியல் அலுவலர்)

(ஆ) தொழிற்பாட்டு மட்டம் (கடற்போக்குவரத்து காவல் காத்தல் அலுவலர், பொறியியல் காவல் காத்தல் அலுவலர், மின்னியக்க - தொழில்நுட்ப அலுவலர் மற்றும் வானொலி இயக்குநர்)

(இ) ஆதார மட்டம் (இயலக்கூடிய கடலோடி கப்பற்றளம், இயலக்கூடிய கடலோடி எந்திரம், மின்னியக்க - தொழில்நுட்ப கப்பற்றுணையாளர் மற்றும் காவல் காக்கும் கப்பற்றுணையாளர்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 36)

## அட்டவணை ஏ-I/9

### உட்சேவையின்போது கடலோடிகளுக்கான ஆகக்குறைந்த கண்பார்வைக்கான தராதரங்கள்

| எஸ்ரிசிடபிள்யூ சமவாய ஒழுங்கு விதி | கடலோடியின் வகுதி | உதவியளிக் கப்பட்ட தூரப் பார்வை[1] | | கிட்டிய/உடனடிப் பார்வை இரண்டு கண்களும் ஒன்றாக, உதவியுடன் அல்லது உதவி இன்றி | நிறப் பார்வை[3] | கட்புல மண்டலங்கள்[4] | மாலைக்கண்[4] | டிப்லோபியா (இரட்டைப் பார்வை)[4] |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஒரு கண் | மறு கண் | | | | | |
| I/11<br>II/1<br>II/2<br>II/3<br>II/4<br>II/5<br>VII/2 | கப்பற்றலைவர்கள், கப்பற்றள அலுவலர்கள் மற்றும் காவல் காத்தல் கடமைகளைப் பொறுப்பேற்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கப்பற்றுணையாளர்கள் | 0.5[2] | 0.5 | கப்பலலோட்டுதலுக்கு தேவைப்பட்ட பார்வை (உதாரணமாக பயண வரைபட, கப்பற் பயண வெளியீடு பற்றிய குறிப்பீடு, பாலம் சாதன மாக்கல் உபகரணம், கப்பற் பயணத்திற்கான அடையாளங்காண் உதவிகள்) | 6ஆம் குறிப்பைப் பார்க்க | சாதாரண பார்வை மண்டலங்கள் | இணக்கப்பாடு எதுவுமின்றி இரவில் எல்லா அவசியமான பணிகளையும் புரியத் தேவைப்படும் பார்வை | குறிப்பிடத்தக்க நிலைமை எதுவுமில்லை |
| I/11<br>III/1<br>III/2<br>III/3<br>III/4<br>III/5<br>III/6<br>III/7<br>VII/2 | எல்லாப் பொறியியல் அலுவலர்கள், மின் தொழில்நுட்ப அலுலர்கள் மற்றும் மின் - தொழில்நுட்ப கப்பற்றுணையாளர்கள் மற்றும் இயந்திர அறைக் காவலொன்றின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணையாளர்கள் | 0.4[5] | 0.4 (5 ஆம் குறிப்பைப் பார்க்க) | சமீபத்தில் வைத்து கருவிகளை வாசிப்பதற்கு வேண்டிய பார்வை, உபகரணத்தை இயக்குவதற்கு வேண்டிய பார்வை, அவசியமானவாறான முறைமைகளை கூட்டுறுப்புக்களை அடையாளங் காண்பதற்கான பார்வை | 7 ஆம் குறிப்பைப் பார்க்க | போதுமான பார்வை மண்டலங்கள் | இணக்கப்பாடு எதுவுமின்றி இரவில் அவசியமான கடமைகளைப் புரிவதற்கு வேண்டிய பார்வை | குறிப்பிடத் தக்க நிலைமை எதுவுமில்லை |
| I/11<br>IV/2 | ஜீஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர்கள் | 0.4 | 0.4 | சமீபத்தில் வைத்து கருவிகளை வாசித்தல், உபகரணம் இயக்குதல் அவசியமானவாறு முறைமைகளை/கூட்டுறுப்புக் களை அடையாளங் காண்பதற்கான பார்வை | 7 ஆம் குறிப்பைப் பார்க்க | போதுமான பார்வை மண்டலங்கள் | இணக்கப்பாடு எதுவுமின்றி இரவில் எல்லா அவசியமான கடமைகளைப் புரிவதற்கு வேண்டிய பார்வை | குறிப்பிடத் தக்க நிலைமை எதுவுமில்லை |

**குறிப்புக்கள்:**

1. ஸ்னெலென் தசக் கணிப்புக் குறிப்பீட்டில் தரப்பட்ட பெறுமதிகள்.

2. ஒரு கண்ணில் ஆகக்குறைந்தது 0.7 பெறுமதியொன்று, கண்டுபிடிக்கப்படாத கண் நோயின் அச்சத்தைக் குறைக்க விதப்புரை செய்யப்படுகின்றது.

3. (எவையேனும் தொடர்ந்து வரும் உரை உட்பட கமிஷன் இன்டர்நஷனல் டீ எல்இக்லாய்ரேஜ் (சீஐஈ143-2001)) என்பதால் போக்குவரத்துக்கான நிறப்பார்வை தேவைப்பாடுகளுக்கான சர்வதேசத் விதப்புரைகளில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறாக.

4. ஆரம்ப பரிசோதனை கண்டுபிடிப்புகளினால் குறிப்பிடப்படுமிடத்து, சிகிச்சைப் பார்வை நிபுணர் ஒருவரினாலான மதிப்பீட்டுக்கு அமைவானது.

5. எந்திரப்பகுதி ஆளணியினர் ஆகக்குறைந்தது 0.4 இணைந்த கண்பார்வை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. சீஐஈ நிறப் பார்வைத் தராதரம் 1 அல்லது 2

7. சீஐஈ நிறப் பார்வைத் தராதரம் 1, 2 அல்லது 3

கோவையின் ஏ-1/9 ஆம் அட்டவணைக்கான திருத்தங்கள் செய்யப்படும்வரை அல்லது ஒழுங்கமைப்பினால் உடன்பட்டுக்கொள்ளப்படும்வரை, 2013 ஒற்றோபர் 25 ஆந்திகதிய சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பு சுற்றறிக்கை எஸ்ரிசிடபிள்யூ 7/ சுற்றறிக்கை 20 இல் கூறப்பட்டவாறு (நிறப்பார்வைப் பரீட்சிப்பின் மீதான இடைக்கால வழிகாட்டுகை) உறுதிப்பாட்டு நிறப்பார்வைப் பரீட்சிப்புக்காக சீஐஈ 143-2001 இல் கொடுக்கப்பட்ட இஷிஹாரா அல்லது சமமான தட்டைப் பரீட்சிப்பைப் பயன்படுத்தி பணிப்பாளர் தலைமையதிபதி உளதாம் முறைகளைத் தொடர்ந்தும் பயன்படுத்துவார்.

### அட்டவணை பீ-I/9

(ஒழுங்குவிதி 36 )

**கடலோடிகளுக்கான குறைந்தபட்ச உட்சேவை உடலியல் இயலுமாந்தன்மையை மதிப்பிடுதல்**

| கப்பலின் பணி, பணி, நிகழ்வு அல்லது நிலைமை[3] | தொடர்புபட்ட உடலியல் இயலுமாந்தன்மை | தேர்வுவிழைநர் பற்றி மருத்துவப் பரிசோதகர் திருப்திப்படவேண்டியவை[4] |
|---|---|---|
| கலத்தைச் சுற்றி தொடர்ச்சியான நடமாட்டம்<br>- அசையும் கப்பற்றளம்மீது<br>- மட்டங்களிடையே<br>- பாகங்களிடையே<br><br>குறிப்பு 1 இந்த வரிக்கு ஏற்புடையதாகும் | சமநிலையைப் பேணல் மற்றும் ஊக்கத்துடன் நடமாடுதல். செங்குத்தான ஏணிகள் மற்றும் படிக்கட்டுகளில் மேலேறுதல் மற்றும் இறங்குதல். மேட்டுக் கட்டுமானங்களைக் கடத்தல். (உதாரணம் 600 மி.மி. உயரம்). நீர் இறுக்கமான கதவுகளை மூடுதலும் திறத்தலும். | சமநிலை நிலைமையில் குழப்பமற்ற நிலை. இயைபான நடமாட்டங்கள் மற்றும் உடலியற் செயற்பாடுகளைத் தடுக்கின்ற ஏதேனும் பாதிப்பு அல்லது நோயைக் கொண்டிருக்க வில்லை.<br>உதவியின்றி[5]:<br>- செங்குத்தான ஏணிகள் மற்றும் படிக்கட்டுகளில் ஏறுவதற்கு இயன்றமை.<br>- உயரமான வாயிற்படிகளைக் கடப்பதற்கு இயன்றமை.<br>- கதவு மூடுதல் முறைமைகளைக் கையாளுவதற்கு இயன்றமை. |
| கப்பலில் நாளாந்த பணிகள்:<br>- கை உபகரணங்களைப் பாவித்தல்<br>- கப்பற் களஞ்சியப் பொருட்களைக் கொண்டு செல்லுதல்<br><br>மேந்தலை வேலை<br>- வால்வு தொழிற்பாடு | பொறிமுறை உபாயங்களைக் கையாள் வதற்கான வலிமையும் ஆற்றலும் பலமும். பாரமொன்றை (உதாரணம் 18 கிலோகிராம்) உயர்த்துதல், இழுத்தல், கொண்டு செல்லுதல். கைகளை மேல்நோக்கி எட்டுதல். நீடித்த காலப்பகுதிக்கு நிற்றல், நடத்தல் மற்றும் விழிப்பாகவிருத்தல். ஒடுக்கமான | கலத்தின் பாதுகாப்பான தொழிற்பாட்டுக்கு அத்தியாவசியமான நாளாந்தக் கடமைகளைப் புரிவதற்கான ஆற்றலைக் குறைக்கின்ற வரையறுத்த பாதிப்பு அல்லது நோய்நாட்டம் செய்யப்பட்ட மருத்துவ நிலையைக் கொண்டிருக்கவில்லை. |

| கப்பலின் பணி, பணி, நிகழ்வு அல்லது நிலைமை[3] | தொடர்புபட்ட உடலியல் இயலுமாந்தன்மை | தேர்வுவிழைநர் பற்றி மருத்துவப் பரிசோதகர் திருப்திப்படவேண்டியவை[4] |
|---|---|---|
| - நான்கு மணித்தியாலங்கள் காவலொன்றில் நிற்றல்<br>- அடைக்கப்பட்ட இடங்களில் வேலை செய்தல்<br>- அவசர அழைப்புகள், எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்குப் பதிலளித்தல்<br>- வாய்மொழித் தொடர்பாடல்<br>குறிப்பு 1 இந்த வரிக்கு ஏற்புடையதாகும். | இடங்களில் வேலை செய்தல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட திறத்தல்கள் ஊடாக நடமாடுதல் (உதாரணம் 600மிமி x 600 மிமி).பொருட்கள், வடிவங்கள் மற்றும் குறியீடுகளை பார்வை ரீதியாக வேறுபடுத்தல். எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களைக் கேட்டல். தெளிவான பேச்சிலான விபரணம் தருதல். | பின்வருவனவற்றுக்கான ஆற்றலைக் கொண்டுள்ளமை<br>- கைகளை உயர்த்தி வேலை செய்தல்.<br>- நீண்டகாலத்திற்கு நிற்றலும் நடத்தலும்<br>- அடைக்கப்பட்ட இடத்தினுள் நுழைதல்<br>- கண்பார்வைத் தராதரங்களை நிறைவேற்றுதல் (அட்டவணை ஏ-I/9)<br>- தகுதிவாய்ந்த அதிகாரியினால் தரப்படும் கேட்பு தராதரங்களை நிறைவேற்றுதல் அல்லது சர்வதேச வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கெடுத்தல்<br>- சாதாரண கலந்துரையாடலை நடாத்துதல் |
| கப்பலில் அவசர கடமைகள்[6]:<br>- தப்பியோடுதல்<br>- தீ எதிர்ப்பு<br>- மீட்புச் செய்தல்<br>குறிப்பு 2 இந்த வரிக்கு ஏற்புடையதாகும். | உயிர்காப்பு அங்கி அல்லது அமிழ்தல் உடை அணிதல். புகை நிறைந்த இடங்களிலிருந்து தப்புதல்.<br>சுவாசிக்கும் உபகரணத்தின் பாவனை உட்பட தீ எதிர்ப்புக் கடமைகளில் பங்கெடுத்தல்<br>கலனிலிருந்து வெளியேறும் நடவடிக்கைமுறைகளில் பங்கெடுத்தல். | கலத்தின் பாதுகாப்பான தொழிற்பாட்டுக்கு அத்தியாவசியமான அவசர கடமைகளைப் புரிவதற்கான ஆற்றலைக் குறைக்கின்ற வரையறுத்த பாதிப்பு அல்லது நோய்நாட்டம் செய்யப்பட்ட மருத்துவ நிலையைக் கொண்டிருக்கவில்லை.<br>பின்வருவனவற்றுக்கு ஆற்றல் உள்ளமை.<br>- உயிர்காப்பு அங்கி அல்லது அமிழ்தல் உடை அணிதல்<br>- தவழுதல்<br>- உஷ்ணத்தில் மாற்றங்களை உணர்தல்<br>- தீ எதிர்ப்பு உபகரணங்களைக் கையாளுதல்<br>- (கடமைகளின் பாகமாகத் தேவைப்படுத்தப்படுமிடத்து) சுவாசிக்கும் உபகரணத்தை அணிதல் |

**குறிப்புகள் :**

1. கடலோடிகளின் வேறுபட்ட கடமைகள் மற்றும் அவர்கள் தொழிலுக்கமர்த்தப்படும் கப்பல் வேலையின் தன்மையை மனதிற்கொண்டு மேற்றரப்பட்ட அட்டவணையின் 1ஆம் மற்றும் 2ஆம் வரிகள், (அ) சாதாரண கப்பற் பணிகள், பணிகள், நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகளையும் (ஆ) கடலோடி, வேறு கப்பற்றொகுதி உறுப்பினர்கள் மற்றும் கப்பலின் பாதுகாப்புக்கு அவசியமெனக் கருதப்படவேண்டிய நேரொத்த உடலியல் ஆற்றல்களையும் (இ)மருத்துவ பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்கின்ற மருத்துவத் தொழிலர்களினால் பயன்படுத்தப்படுவதற்கான உயர்மட்டக் கட்டளைகளையும் விபரிக்கின்றன.

2. கடலோடிகளின் வேறுபட்ட கடமைகள் மற்றும் அவர்கள் தொழிலுக்கமர்த்தப்படும் கப்பல் வேலையின் தன்மையை மனதிற்கொண்டு மேலுள்ள அட்டவணையின் வரி 3 ஆனது, (அ) சாதாரண கப்பற் பணிகள், பணிகள், நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகளையும் (ஆ) கடலோடி வேறு கப்பற்றொகுதி உறுப்பினர்கள் மற்றும் கப்பலின் பாதுகாப்புக்கு அவசியமெனக்

கருதப்படக்கூடிய நேரொத்த உடலியல் ஆற்றல்களையும் (இ)மருத்துவப் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்கின்ற மருத்துவ தொழிலர்களினால் பயன்படுத்தப்படுவதற்கான உயர்மட்டக் கட்டளைக்கற்களையும் விபரிக்கின்றன.

3. இவ்வட்டவணை எல்லா சாத்தியமான கப்பல் நிலைமைகள் அல்லது சாத்தியமான தகைமையிழக்கச் செய்யும் மருத்துவ நிலைமைகளுக்கு நிவாரணமளிக்க உட்கருதப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர்கள் (''கப்பற்றள அலுவலர்'' மற்றும் ''எந்திரக் கப்பற்றுணையாளர்கள்'' போன்ற) கடலோடிகளின் வகுதிக்கு ஏற்புடையதான உடலியல் ஆற்றல்கள் மீதான தமது உயர்தொழிற்சார் தீர்ப்பைப் பயன்படுத்துதல் வேண்டும். தனிப்பட்டவர்களினதும் விசேடித்த அல்லது வரையறுக்கப்பட்ட கடமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கானவையுமான விசேட சூழ்நிலைகள் உரிய கவனம் பெறுதல் வேண்டும்.

4. ஐயம் இருப்பின், மருத்துவத் தொழிலர் தோதான பரீட்சிப்புகள் கிடைக்கப்பெறும் போதிலெல்லாம் புறநிலையான பரீட்சிப்புகள் மூலம், அல்லது மேலதிக மதிப்பீட்டுக்குத் தேர்வுவிழைநரை ஆற்றுப்படுத்துவதன்மூலம், ஏதேனும் இயைபான பாதிப்பின் அளவை அல்லது கடுமையை அளவிடுதல் வேண்டும்.

5. ''உதவி'' என்ற பதம் பணியை நிறைவேற்றுவதற்கு வேறோர் ஆளைப் பயன்படுத்துதல் எனப் பொருள்படும்.

6. ''அவசரகாலக் கடமைகள்'' என்ற பதம், கப்பலைக் கைவிடுதல் அல்லது தீ எதிர்ப்புப் போன்ற எல்லா நியம அவசரகாலப் பதிலளிப்பு நிலைமைகளையும் தனிப்பட்ட உயிர்காப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு கடலோடியினாலும் பின்பற்றப்படவேண்டிய எல்லா நடவடிக்கைமுறைகளையும் மேவுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

*10-1668/1*

---

*ச.வ.பி-3/2013*

## 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 126 ஆம், 321 ஆம் பிரிவுகளினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு துறைமுக மற்றும் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*அர்ஜுண ரணதுங்க,*
*துறைமுகங்கள் மற்றும் கடற்றொழில்,*
*அமைச்சர்.*

கொழும்பு,
*2016, ஒக்டோபர் 4*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2016ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2016, ஒக்டோபர் 4ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. மீன்பிடிக் கலன்களும் வியாபாரத்தில் ஈடுபடாதிருக்கும் உவகையூட்டும் ஓடங்களும் தவிர, இலங்கைக் கொடியின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எல்லாக் கடல்செல் கப்பல்களுக்கும் இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் கம்பெனியின் கடமையாதல் வேண்டும்:-

(அ) கப்பல் தொடர்பிலும் அதில் ஆளமர்த்துதல் தொடர்பிலும் குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்தல் ஆவணம் வலுவிலுள்ளதென்றும்;

(ஆ) கப்பலில் ஆளமர்த்துதல் ஆகக்குறைந்தது குறித்துரைக்கப்பட்ட மட்டங்களுக்கேனும் எல்லா நேரங்களிலும் பேணப்படுகின்றதென்றும்; அத்துடன்

(இ) குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணம் எல்லா நேரங்களிலும் கப்பலில் வைத்திருக்கப்படு கின்றதென்றும் அதிகாரமளிக்கப்பட்ட சோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாகவுள்ளதென்றும்.

4. (1) ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள கப்பலை, அந்நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணத்தின் கீழன்றி, கடலிற் செலுத்துதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள ஏதேனும் கப்பலின் கப்பற்றலைவர், கப்பலில் ஆளமர்த்துதல் அத்தகைய ஆவணத்துடன் இணங்கியொழுகுகின்றதென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. (1) நான்காம் ஒழுங்குவிதியின்கீழ் குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணமொன்றை வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், பின்வருவனவுட்பட, தேவைப்படுத்தப்பட்ட எல்லா விபரங்களும் பற்றிய பூரணமானவையும் செம்மையானவையுமான தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இவ்வொழுங்குவிதிகளுக்கான Iஆம், IIஆம் அட்டவணைகளில் தரப்பட்டுள்ள ஆளமர்த்துதல் அளவுத்திட்டங்கள்;

(ஆ) வியாபாரம் மற்றும் தொழிற்பாட்டு வகை உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் இயைபான சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பு (IMO) தீர்மானங்களில் அடங்கியுள்ள விதப்புரைகளுடனும் வழிகாட்டுநெறிகளுடனும் இணங்கியொழுகுகின்றமைக்கான கூற்று;

(இ) தொழிற்பாட்டின் தன்மை;

(ஈ) கப்பலின் வகை மற்றும் பருமன் உட்பட, தொழில்நுட்பப் பண்புகள்; அத்துடன்

(உ) கப்பற்றொகுதியினது வேலைப்பழுவின் அளவு மற்றும் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகள்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவல்களையும் விபரங்களையும் கவனத்துட்கொண்ட பின்னரும் குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணமொன்று வழங்கப்படுவதற்கான பொருத்தமாந்தன்மை பற்றி விதித்துரைக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளவிடத்தும், விண்ணப்பகாரருக்கு அத்தகைய குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணத்தை வழங்கலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, காலத்துக்குக்காலம், இயைபான சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பு (IMO) தீர்மானங்களிலும் குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதற்கான செயல்முறைக் கோவையிலும் அடங்கியுள்ள விதப்புரைகளுக்கும் வழிகாட்டுநெறிகளுக்கும் இணங்க,குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் மட்டங்களை அங்கீகரிக்கின்றமைக்கும் குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணங்களை வழங்குகின்றமைக்குமான நடவடிக்கைமுறைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

6. (1) குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணத்தை வழங்கியபின்னர் அங்கீகரிக்கப்பட்ட ஆளமர்த்துதல் அளவுத்திட்டத்திலான எவையேனும் மாற்றங்களைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் விண்ணப்பகாரரின் கடமையாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, முக்கியமான மாற்றங்களின் விடயத்தில், குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணமொன்றுக்காகப் புதியவொரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதனைத் தேவைப்படுத்தலாம்.

7. குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆளமர்த்துதல் அளவுத்திட்டங்கள், 2016 ஒக்டோபர் 4 ஆந்திகதி 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட காவல்காத்தல் நியமம் பேணப்படுகின்றதென்பதையும் கட்டாயக் குறைந்தபட்ச ஓய்வு மணித்தியாலங்களை ஆளணியினர் பெறுவதற்கு இயன்றவர்களாக இருக்கின்றனரென்பதையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான குறைந்தபட்ச ஆளமர்த்துதல் மட்டமாகவுள்ளன.

8. குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆளமர்த்துதல் அளவுத்திட்டங்கள், ஒரு கம்பெனியின் வர்த்தகத் தேவைப்பாடுகளை அல்லது உச்ச வேலைப்பளுக்களை கருத்திற்கெடுத்தலாகாது.

9. கம்பெனிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) ஏற்புடையற்பாலதான குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணத்தின்படி முறையாகச் சான்றளிக்கப்பட்ட கப்பற்றலைவர்களினாலும், அலுவலர்களினாலும், கப்பற்றுணைத்தலைவர்களினாலும் கப்பல்கள் ஆளமர்த்தப்பட்டுள்ளவென்றும்; அத்துடன்

(ஆ) கப்பல்கள் பாதுகாப்பாகவும்,போதியமுறையிலும், வினைத்திறனாகவும் ஆளமர்த்தப்பட்டுள்ளனவென்றும்.

10. பணிப்பாளர் தலைமையதிபதி விடயவாரி அடிப்படையில் இவ்வொழுங்குவிதிகளின் எல்லா அலலது எவையேனும் ஏற்பாடுகளிலிருந்தும் அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மேல், விலக்களிப்புகளை வழங்கலாம்.

11. (1) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடைத்தாகின்றவரும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்றவருமான கப்பலொன்றின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது முகாமையாளர் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், சுருக்கவிளக்கத்தின்பின்னர் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலமொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடைத்தாகின்றவரும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்றவருமான கப்பலொன்றின் எவரேனும் கப்பற்றலைவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், சுருக்கவிளக்கத்தின்பின்னர் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓர் ஆண்டை விஞ்சாத காலமொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம்ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

12. இலங்கைக் கப்பலொன்று இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுமிடத்து அத்தகைய கப்பல் தடுத்துவைக்கப்படலாமென்பதுடன், 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 207ஆம், 208ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் தடுத்துவைக்கப்படலாம்.

13. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு யூலை 12 ஆந்திகதிய 1818/37 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் வணிகக்கப்பற்றொழில் (பாதுகாப்பான ஆளமர்த்துதல்) ஒழுங்குவிதிகள், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்படுதல் வேண்டும்.

14. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

'இயலக்கூடிய கடலோடிக் கப்பற்றளம்' என்பது, சமவாயத்தின் 11/5 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற கப்பற்றுணையாளர் எனப் பொருள்படும்;

'இயலக்கூடிய கடலோடி எந்திரம்' என்பது, சமவாயத்தின் 111/5 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற கப்பற்றுணையாளர் எனப் பொருள்படும்;

'பிரதம பொறியியலாளர் அலுவலர்' என்பது, கப்பலின் பொறிமுறைஉந்துதல், மற்றும் பொறிமுறை, மின்சார நிறுவுகைகளின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொறியியலாளர் அலுவலர் எனப் பொருள்படும்;

'பிரதம கப்பற்றுணைத்தலைவர்' என்பது,கப்பற்றலைவருக்குஅடுத்த பதவி வரிசையில் உள்ளவரும் கப்பற்றலைவருக்கு இயலாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் கப்பலின் ஆணை, கட்டுப்பாடு அல்லது பொறுப்பு வந்துறுகின்றவருமானகப்பற்றள அலுவலர் எனப் பொருள்படும்;

'குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதலுக்கான செயல்முறைக் கோவை'என்பது, அவசியமானவாறு திருத்தப்படக்கூடிய, பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் மட்டங்களை அங்கீகரிக்கின்ற மற்றும் குறைந்தபட்சப்பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணங்களை வழங்குகின்ற நடவடிக்கைமுறைகளைக் கொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டு ஆவணம் அல்லது கைந்நூல் எனப் பொருள்படும்;

'கம்பெனி' என்பது, கப்பற் சொந்தக்காரர் என அல்லது கப்பற் சொந்தக்காரரிடமிருந்து கப்பலின் தொழிற்பாட்டுப் பொறுப்பை ஏற்று, அத்தகைய பொறுப்பை ஏற்றவுடன், இவ்வொழுங்குவிதிகளினால் கம்பெனிமீது விதிக்கப்பட்ட அனைத்துக் கடமைகளையும், பொறுப்புக்களையும் பொறுப்பேற்க உடன்பட்டுள்ள முகாமையாளர் அல்லது வெற்றுப்படகு வாடகைக்கமர்த்துநர் போன்ற வேறு ஏதேனும் ஒழுங்கமைப்பு அல்லது ஆள் எனப் பொருள்படும்;

'பணிப்பாளர் தலைமையதிபதி' என்பது, வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

'பொறியியலாளர் அலுவலர்' என்பது, திருத்தப்பட்டவாறான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் IIIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற அலுவலர் எனப் பொருள்படும்;

'ஈடபிள்யூகேஓ' என்பது, பொறியியற் காவல்காத்தல்அலுவலர்கள் எனப் பொருள்படும்;

'மின்னியல்-தொழிநுட்ப அலுவலர் (மிதொஅ)' என்பது, சமவாயத்தின் 111/6 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற அலுவலர் எனப் பொருள்படும்;

'மின்னியல்-தொழிநுட்பக் கப்பற்றுணையாளர் (மிதொக)' என்பது, சமவாயத்தின் 111/7ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற கப்பற்றுணையாளர் எனப் பொருள்படும்;

'ஜிரி' என்பது, மொத்தத் தொன் எடையளவு எனப் பொருள்படும்;

'கப்பற்றலைவர்' என்பது, கப்பலின் ஆணையைக் கொண்ட ஆள் எனப் பொருள்படும்;

'என்டபிள்யுகே' என்பது, கப்பற்றள காவல் அலுவலர்;

'கப்பற்றுணையாளர்' என்பது, கப்பற்றலைவர் அல்லது அலுவலர் தவிர்ந்த கப்பற்றொகுதியின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படும்;

'குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் ஆவணம்' என்பது, இலங்கைக் கப்பலின் விடயத்தில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட, அத்துடன் ஏதேனும் பிற கப்பலின் விடயத்தில் எந்த நாட்டின் கொடியைப் பறக்கவிடுவதற்குக் கப்பல் உரித்துடையதோ அந்த நாட்டின் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட, அவ்வாறு விபரிக்கப்பட்ட ஓர் ஆவணம் எனப் பொருள்படும்;

'கடல்செல் கப்பல்' என்பது, பிரத்தியேகமாக உள்நாட்டு நீர்ப்பரப்புகளில் அல்லது காப்பளிக்கப்பெற்ற நீர்ப்பரப்புளினுள் அல்லது நீர்ப்பரப்புகளுக்கு நெருக்கமாய் அண்டியதாக அமைந்த நீர்ப்பரப்புகளில் அல்லது துறைமுக ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற இடப்பரப்புகளில் கடலிற்செல்கின்ற வியாபாரக் கப்பல்கள் தவிர்ந்த வேறு வியாபாரக் கப்பல் எனப் பொருள்படும்;

'இரண்டாவது பொறியியலாளர் அலுவலர்' என்பது, பதவிவரிசையில் பிரதம பொறியியலாளர் அலுவலருக்கு அடுத்த பதவிவரிசையில் இருப்பவரும் பிரதம பொறியியலாளர்அலுவலரின் இயலாமையின்போது கப்பலின் பொறிமுறை உந்துதல், மற்றும் பொறிமுறை மின்முறை நிறுவுகைகளின் தொழிற்பாடு,பராமரிப்பு ஆகியவற்றுக்கான பொறுப்பு எவர்மீது வருகின்றதோ அவராக இருப்பவருமான பொறியியலாளர்அலுவலர் எனப் பொருள்படும்.

அட்டவணை I

(ஒழுங்குவிதி 5(2))

**குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் அளவுத்திட்டங்கள் – கப்பற்றளம் வியாபார இடப்பரப்பும் கப்பல்களின் விபரணமும்**

| | எல்லையற்றது* 3000 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேல் | எல்லையற்றது* 500 மொத்தத் தொன் முதல் 3000 மொத்தத் தொன் வரை | எல்லையற்றது* 500 மொத்தத் தொன்னுக்குக் குறைவாக | என்.சி.வி. 3000 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேல் | என்.சி.வி. 500 மொத்தத் தொன் முதல் 3000 மொத்தத் தொன் வரை | என்.சி.வி. 500 மொத்தத் தொன்னுக்குக் குறைவாக |
|---|---|---|---|---|---|---|
| கப்பற்றலைவர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| பிரதம கப்பற்றுணைத்தலைவர் | 1 | 1 | – | 1 | 1 | |
| என்.டபிள்யூ. கே.ஓ | 2 | 1 | 2 | 1 | 1 | 1 |
| இயலக்கூடிய கடலோடிக் கப்பற்றளம் | 3 | 2 | 1 | | | |
| கடற்போக்குவரத்துக் காவலின் பாகமாகவமைகின்ற கப்பற்றுணையாளர் | | 1 | 2 | 3 | 3 | 2 |

* எல்லையற்றது என்பது, எல்லையற்ற வியாபார இடப்பரப்புகள் எனப் பொருள்படும்.

**அட்டவணை II**

(ஒழுங்குவிதி 5(2))

**குறைந்தபட்சப் பாதுகாப்புடன் ஆளமர்த்துதல் அளவுத்திட்டங்கள் - எந்திரம்**

**வியாபார இடப்பரப்பும் கப்பல்களின் விபரணமும்**

| | எல்லையற்றது* 3000 கிலோ வோற் அல்லது அதற்கு மேல் | | எல்லையற்றது* 750 கிலோ வோற் முதல் 3000 கிலோ வோற் | | எல்லையற்றது* 250 கிலோ வொற் முதல் 750கிலோ வோற் வரை | | என்.சி.வி. 3000 மொத்தத் தொன் அல்லது அதற்குமேல் | | என்.சி.வி. 750 கிலோ வொற்முதல் 750கிலோ வோற் வரை | | என்.சி.வி. 250 கிலோ வோற் முதல் 750 கிலோ வோற் வரை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரதம பொறியியலாளர் அலுவலர் | 1 | | 1 | | – | | 1 | | – | | – | |
| இரண்டாவது பொறியியலாளர் அலுவலர் | 1 | | 1 | | 1 | | 1 | | – | | – | |
| ஈ.டபிள்யூ.கே.ஓ | 2** | | 1 | | 1 | | 1 | | – | | – | |
| பிரதமபொறியியலாளர் அலுவலர் என்சிவி | – | | – | | – | | – | | 1 | | – | |
| இரண்டாவது பொறியியலாளர் அலுவலர் என்சிவி | – | | – | | – | | – | | 1 | | 1 | |
| ஈ.டபிள்யூ.கே.ஓ | – | | – | | – | | – | | 1 | | 1 | |
| | யூஎம் எஸ் | என்/யூ எம்எஸ் | யூஎம் எஸ் | என்/யூ எம்எஸ் | யூஎம் எஸ் | என்/யூ எம்எஸ் | யூஎம் எஸ் | என்/யூ எம்எஸ் | யூஎம் எஸ் | என்/யூ எம்எஸ் | யூஎம் எஸ் | என்/யூ எம்எஸ் |
| இயலக்கூடிய கடலோடி எந்திரம் | 1 | 2 | 1 | 2 | 1 | 1 | | | | | | |
| எந்திரக் காவலின் பாகமாகவமைகின்ற கப்பற்றுணையாளர் | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 |

* எல்லையற்றது என்பது, எல்லையற்ற வியாபார இடப்பரப்புகள் எனப் பொருள்படும்

** யூஎம்எஸ் கலன்கள் ஒரு ஈ.டபிள்யூ.கே.ஓ வைக் கொண்டு செல்லலாம்

யூஎம்எஸ்- ஆளமர்த்தப்படாத எந்திரத்தொகுதி இடம்;

என்/யூஎம்எஸ் - மரபொழுங்கு (யூஎம்எஸ் அல்லாத) எந்திர அறையைக் கொண்டுள்ள கலன்.

10-1668/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.